Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 13/50
දිනමුරසු වාරමලර් ஜன.20-26, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 443

## நோர்வேயை நோக வைத்த இந்தியாவின் கை விரிப்பு

## காலம் கடத்தும் அரசின் திட்டம்



## சச்சினின் கிரிக்கெட் கச்சேரி

## பின் லேடனுக்கு எதிராக பின்லேடன்!

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## "நிலையான வாழ்வு பெற"

இந்த உலகில் இருக்கும் எல்லாமே மாறுதலுக்கு உட்பட்டேயாக வேண்டும். உடல் எடுத்துள்ள ஜீவர்கள் விஷயத்தில் குழந்தைப் பருவம் மாறி வாலிபப் பருவமும், வாலிபப் பருவமும் மாறி வயோதிபப் பருவமும் வரத்தான் வரும். ஓர் அலை போகவும் மற்றோர் அலை வருவதைப்போல ஒரு நிலை கழிந்து மற்றொரு நிலை வருவதே இயல்பு. ஒவ்வொரு பொருளும் இந்த விதிக்கு உட்பட்டதேயாகும்.

ஒவ்வொரு நாளும் பொருள்கள் நாச மடைவதையும், அதேசமயம் புதிய பொருள்கள் தோன்றுவதையும் பார்த்தபடி இருக்கிறோம். ஆனால் இந்த உலகம் ஒரேயடியாக முழு அளவில் தீர்ந்து போவதை நாம் பார்ப்பதில்லை. மனித ஜீவன்கள் மிருகங்களாக மறு பிறவியெடுக்கலாம். மிருக இனம் மனிதர்களாக மறு பிறவியெடுக்கலாம். தேவர்கள் தேவப்பிறவி என்ற நிலையிலிருந்து கீழே இறக்கப்படலாம். ஆகவே இந்த உலகில் நிலைத்திருக்கும் நிலை என்பது உண்டா என்ன?

எனவே இந்த வையத்துள் வாழும் மனிதர்கள் "நான்" என்ற அகந்தையை விடுத்து ஆணவத்தைப் போக்கி, அசுரத்தனத்தை அழித்து அன்பை பெருக்கி, ஆசார சீலராய் ஆன்மீக வாழ்வு வாழ்ந்து நிலையான நிம்மதியான பேறடய முயற்சிக்க வேண்டும். முயற்சி திருவினையாக்கும், உயர்ச்சிகிடைக்க உதவும். தூண்டு கோலாகமும். எனவே நிலையான வாழ்வை பெற்றுய்யும் நெறிமுறைகளை இராமபிரானின் தர்ம முரசு மூலம் தேடிப்படித்துய்வோமாக!

அர்ச்சகர்: அ.அரசரெத்தினம்-சேனையூர்-06.



## தொழாதிருக்காதீர்கள்

நாம் உழைத்து உழைத்து நம்மை உழைக்கும் இயந்திரமாகவே மாற்றிக் கொண்டோம். அதிகமானவர்களின் ஒவ்வொரு மூச்சும் உலகிற்காகவே இருக்கிறது. உலகிற்காக உழைக்கும் நமது உழைப்பு உலகத்திலேயே முடிந்துவிடும். ஆனால், மறுமைக்காக உழைக்கும் உழைப்பு குன்றிலேற்றிய தீபம் போன்று அழியாது பிரகாசித்துக்கொண்டே இருக்கும்.

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு வாலிபன் வந்து, நாயகமே! என் தந்தை மரணித்துவிட்டார். அவரை அடக்கம் செய்வதற்கு உதவி புரியுங்கள் எனக் கோரினார். இதைக் கேட்ட நபியவர்கள் தோழர்களை அழைத்து அந்த ஜனாஸாவை அடக்கிவிட்டு வாருங்கள் என பணித் தார்கள். உடனே தோழர்கள் அங்கு சென்றவுடன் அ ந்த ஜனாஸா பன்றியின் ரூபத்தில் காட்சியளித்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தவர்களாக நபிகளாரிடம் வந்து முறையிட்டார்கள். உடனே நபியவர்கள் தோழர்களை அழைத்துக்கொண்டு வந்த ஜனாஸாவின் பக்கத்தில் இருந்து அல்லாஹ்விடம் பிராத்தித்தார்கள். உடனே ஜனாஸா மனித ரூபத்தில் மாறிவிட்டது. பின் ஜனாஸாவை நல்லடக்கம் செய்துவிட்டு நபியவர்கள் அவ்வாலிபனை அழைத்து "உமது தந்தை உலகிலே என்ன செயல்கள் செய்து கொண்டிருந்தார்" எனக்கேட்டார். அதற்கு வாலிபன் "நாயகமே! என் தந்தை நல்ல முறையில்தான் வாழ்ந்தார். ஆனால், அவர் வாழ்க்கையில் தொழுததே கிடையாது." என்றான். அதற்கு நபியவர்கள் "பார்த்தீர்களா உலக உழைப்பை பெரிதாக்கி மறுமைக்கான உழைப்பை கைவிட்டவர்களின் கதி இப்படித்தான் இருக்கும்" எனக் கூறினார்கள்.

நன்றி: "நபிகளாரும் நற்போதனைகளும்" (ஆதாரம்-முஸ்லிம்)

வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-06.

## பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்


சத்துருவாகிய இராட்சதன் கோலியாத் நெற்றியில் கல் பட்டதும் வீழ்ந்தான் தாவீது ஓடிப்போய் அப் பொலிஸ்தனின் பட்டயத்தை அவனது இடுப்பிலிருந்து உருவி அதனாலேயே அவன் தலையை வெட்டிக் கொன்று போட்டான்.

அதேபோல். நாமும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலே குறுக்கிட்டு வீரச்சவால்களை மேற்கொண்டு நம்மை குட்டிச் சுவராக்கி விடும் இராட்சதனும் பொல்லாங்கனும் பொல்லாத ஆவிகளின் சேனைகளின் தலைவனுமாகிய சத்துருவானவனை மேற்கொள்ள சத்தியம் என்னும் கச்சையை அரையில் கட்டிக் கொண்டு எதிர் கொண்டு ஓடுவோம். சத்தியத்தை அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும். நானே சத்தியம். என்று கூறிய இரட்சகர் இயேசுவைத் தரித்துக் கொண்டு. சத்துருவுக்கு முகம் கொடுத்து பயமில்லாமல் ஓடுவோம். நீதியென்னும் மார்க் கவசத்தை நமது இருதயத்தில் போடுவோம். சுவிசேஷமாகிய ஆயத்தம் என்னும் பாதரட்சையையும் எடுத்து எந்நேரமும் சத்துருவுக்குப் பதிலடி கொடுக்க ஆயத்தமாக இருப்போம். விசுவாசம் என்னும் கேடகத்தை நமது கையில் வைத்துக் கொள்ளுவோம். விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.

தேவன் உங்களை ஆசீர் வதிப்பாராக.

லை-அக்ஷாள்-கமலா.

## கவிதைப் போட்டி இல.443




எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 26.01.2002

கவிதைப் போட்டி இல.443
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.440

### பரிசுக்குரிய கவிதை

**மதிப்பீடு**

**விநாடிக் கம்பி**
**விடாமல்**
**சுற்றிக்கொண்டாலும்**
**மணிக்கம்பிதானே**
**மதிக்கப்படுகிறது!**
**நாங்கள் வாக்களிக்க**
**அவர்கள்**
**ஆசனம் ஏறுவது போல்!!**

என்.தனுசுஜன்-சண்டிலிப்பாய்.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



**இதயத் துடிப்பு**

இப்போதெல்லாம்
என் இதயம்
இடம் மாறித்தான்
அடிக்கின்றது
என் இடக்கையில்.

ஐயன் கோடீஸ்வரன்-கொழும்பு-13.

**கடிகார வாழ்க்கை**

செக்கன் துடிப்பது போல்
இதயங்கள்...
நிமிடம் நகர்வது போல்
அரசுகள்...
மணி ஊர்வது போல்
பேச்சு வார்த்தையின் முடிவுகள்...

முஹம்மது ஹஸீன்-கொழும்பு-12.

**காலம்**

இந்த இரண்டு முட்களையும்..
வென்று விடத்தான் நினைக்கிறார்கள்...
....இன்றுவரை....

த.சஞ்ஜீவன்-திருகோணமலை.

**கழட்டுங்கள்!**

கட்டுகிறார்; கழட்டுகிறார்; முறுக்கி
ஒட்டுகிறார் என் முகம்பார்த்து-வெட்கக்கேடு
நேரத்தை மதியாத மானிடர்கள்
ஆரங்கே கழட்டுங்கள் கையைவிட்டு!

திக்கவயல் சி.தர்மகுலசிங்கம்-மட்டக்களப்பு.

**விதம்**

ஒவ்வொரு நாட்டுக்கும்
ஒவ்வொரு விதமாய்
உன் முகத்தை காட்டுகின்றாய்
நீயும் ஓர் அரசியல்வாதியா?

கிருஸ்னன் சிவா-மஸ்கெலியா.

**ஓய்வு**

துப்பாக்கிகள் ஓய்ந்திருக்கும் நேரம்
தாமதமின்றி தீர்வுகள்
தீர்மானமாக வேண்டும்
இன்றேல்...
துர்ப்பாக்கியமாக
ஓய்ந்தவைகள் மீண்டும்
விளையாடத் தொடங்கிவிடும்.

நிஸ்ருல் சுஹைனா-கும்புக்கந்துறை.

**உறங்கும் சமுதாயம்**

எத்தனையோ பகல்கள் வந்துவிட்டது.
ஒன்றிலும் வெளிச்சமில்லை.
காரணம் இவர்கள் இன்னும்
விழிக்கவில்லை.

பி.விக்னேஸ்வரன்-ஹட்டன்.

**எதுவருமோ...**

இங்கேயின்று பல மாற்றம்
இனியுமது தொடர்தல் வேண்டும்.
இக் கடிகாரம் காட்டுவது
நல் நேரம் என்றானால்
நலமாகு மெம் நாடு...
நன்றன்றேல் புண்ணாகும்.
எது வருமோ.?!

திக்கம் சி.மதியழகன்-அல்வாய்.

**ஆயுள் அறிவிப்ப**

நொடிக்கு நொடி
குறையும் ஆயுளை
மணிக்கு மணி
அலறி அலாம் அடித்து
அறிவிக்கவா கையை
கட்டிப் பிடித்திருக்கிறாய்.

சி.குமுதினி-வவுனியா.

**இரண்டில் ஒன்று**

சரிந்திருந்தாலோ
நிமிர்ந்திருந்தாலோ
நேரம்-பத்து பத்துதான்
சமாதானமோ
சண்டையோ
தமிழர் எமக்குத்தான்

பி.சி.அன்ரன்-மட்டுநகர்.

# வாசக[ர்] சாலை

என் அன்புள்ள முரசுக்கு!

எனது புதுவருட வாழ்த்துக்கள் நீ சுமந்து வரும் அம்சங்கள் யாவும் அருமையானவை அற்புதமானவையாகும். அதிலும் 'தேன்கிண்ணம்', 'சிந்தியா பதில்கள்', 'சினிவிசிட்', 'கவிதைகள்', 'சிறுகதைகள்', 'அரசியல் தொடர்கள்', இவைகளுடன் மலரும் புதிய ஆண்டில் மேலும் உன் பணி தொடர நீ வாழ்க, வளர்க என கடல் கடந்து வாழ்த்தும் உனது அன்புள்ள வாசகன்.

ர.கணேஸ்-டுபாய்.

உலகெங்கும் ஊடுருவி உலாவரும் தமிழ் பேசும் மக்களின் உயிருக்கு உயிராய் நிற்கும் முரசே!

உலகத்தில் நடக்கும் அரசியல் செய்திகளை எடுத்துக் கூறும் 'எக்ஸ்ரே ரிப்போட்' விறுவிறுப்பூட்டும் 'தொடர் கதை'கள் கற்பனைமிக்க 'கவிதைகள்', 'உங்கள் பக்கம்' ஏனைய அம்சங்கள் அனைத்தும்-மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகின்றன.

உனது சேவை இன்னும் பல்லாண்டு காலம் வளர்ந்திட வாழ்த்தும்.

எஸ்.சுதன்-நெடுந்தீவு-02.

**வானில் ஒரு நிலா**

களங்கமில்லாத நீலவானில் சந்திரனின் அழகுக் கோலம் போன்ற முரசின் மிளிர்வு இலட்சக்கணக்கான தாரகைகளை (வாசகர்களை) தன் வசப்படுத்தியதில் வியப்பொன்றுமில்லை. கண்ணுக்கும் சிந்தைக்கும் இன்பம் தரும் முரசு மலரவிருக்கும் புதுவருடத்தில் "புதியன படைக்கும்" என்ற எதிர்பார்ப்பில், இனிய கிறிஸ்மஸ், புதுவருட நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம். முரசின் அணி செய்யும் பணி தொடரட்டும் இனிதாய் இனி!

எஸ்.பத்மா உமாஜினி-கொழும்பு-10.

**அன்புடன் ஆசிரியருக்கு**

முரசு 441 சினிமா பகுதியில் காசி திரைப்படம் தற்போதுதான் தயாராகிறது என்று தவறாக செய்தி வெளியாகியிருந்தது. முரசு எதிர்காலத்தில் இத்தகைய சிறிய தவறுகளைக்கூட அனுமதிக்கக்கூடாதென ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

எஸ்.புவனலோஜினி-மன்னார்.

குறிப்பிட்ட சினிமா செய்தியில் நிகழ்ந்த தவறுக்கு வருந்துகிறோம். தொலைபேசி ஊடாகவும், கடிதம் மூலமும், நேரிலும் இந்த தவறை சுட்டிக்காட்டிய, திட்டித்தீர்த்து தமது ஆதங்கத்தை வெளிப்படுத்திய சகலருக்கும் முரசு தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

-ஆசிரியர்-


கதாபாத்திரம் தொடர்பான சந்தேகம்

முரசு 423 (02.09.01) இல் இலக்கியநயம் பகுதியில் 'காத்திருந்தவேளை' என்ற தலைப்பில் எழுதியிருந்தீர்கள் அதில் கதாநாயகனுக்கு இடப்பட்ட பெயரே எனது சந்தேகம் ஆகும்.

எனது பெயரும் வாதுலன்தான் இந்தப் பெயர் வேறு எவருக்கும் இருக்கக்கூடாது என்று மகாபாரத புத்தகத்தின் மூலைமுடுக் கெல்லாம் தேடி கிருஷ்ணனின் பெயர்க ளில் ஒன்று என இப்பெயரை வைத்தனர். நீங்கள் பயன்படுத்திய பெயர் எதேச் சையானதா? அல்லது உங்களுக்கு தெரிந்த யாருக்காவது இந்தப் பெயர் இருக்கின்றதா? அறியத் தந்தால் நன்றியுடையவனாக இருப்பேன்.

எம்.ஏ.வாதுலன்-மட்டக்களப்பு

**பாராட்டுக்கள்**



தித்திக்கும் தினமுரசே நீ சுமந்து வரும் அம்சங்கள் யாவும் அருமையிலும் அருமை. அதிலும் 'கவிதைப் போட்டி'. சுஜாதா எழுதும் 'அனிதாவின் காதல்கள்', 'தொடர் கதை', 'சிறுகதை'ப்பகுதி யாவும் என்னை மிகவும் கவர்ந்தவை. ஒவ்வொரு வாரமும் எப்ப தினமுரசு வரும் என்று ஏங்கிக் கொண்டிருப்பேன். இவ்வாரம் படித்ததும் அடுத்தவாரப் பத்திரிகை விரைவில் வராதா என எதிர்பார்ப்பேன். இப்படியாக எம்மை நீ கவர்ந்துள்ள போது உன்னை பாராட்டாமல் இருக்க முடியுமா? உனக்கு மீண்டும், மீண்டும் என் பாராட்டுக்கள்.

ஏ.சுகந்தி-மன்னார்.

**அறிவித்தல்**

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

## பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரி ஆசிரியர்களின் அக்கறையின்மை!

ஊவா மாகாணத்தின் பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரி, ஆசிரியர்களின் அசமந்தப் போக்கு காரணமாக உயர்தர மாணவர்களும் மற்றும் கீழ் வகுப்பு மாணவர்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக தெரியவருகிறது. ஆசிரியர்கள் கற்பித்தலில் போதிய அக்கறை காட்டாததால் பல மாணவர்கள் பாடசாலையிலிருந்து விலகி வேறு பாடசாலைகளுக்கு சென்றுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

உயர்தர வகுப்பு ஆசிரியர்கள் பாடசாலைக்கு வந்தும் வகுப்பறைகளுக்கு செல்வது மிகவும் குறைவு என மாணவர்கள் ஆதங்கப்படுகின்றனர். எவ்வளவு எடுத்துச் சொல்லியும் ஆசிரியர்கள் இதைப்பற்றி பெரிதாக எடுத்துக்கொள்ள வில்லையென பல பெற்றோர்கள் புகார் தெரிவித்துள்ளனர். இதனால் தமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து அச்சம் தெரிவித்துள்ள பெற்றோர்கள் உடனடியாக தமது பிள்ளைகளை வேறு பாடசாலைகளுக்கு அனுப்பும் முயற்சிகளிலும் இறங்கியுள்ளதாக தெரியவருகின்றது.

உயர் தரம் மட்டுமன்றி 3ம் 4ம் ஆண்டுகளில் பயிலும் சிறார்களுக்கும் இதே நிலைதானாம். இவ்வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் ஒரு குறிப்பிட்ட பாடத்திற்கு ஒரு வருடத்திற்கும் மேலாக ஆசிரியர் இல்லையென கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதிபரிடம் சொன்னால் உங்களுக்கு தெரிந்த ஆசிரியரை ஏற்பாடு செய்யுங்கள் நானும் முயற்சி செய்து பார்த்து விட்டேன் என கையை விரிக்கிறாராம்.

கல்வி அமைச்சின் கவனத்திற்கு இவ்விடயத்தை கொண்டு சென்றும் பயனில்லை என பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். இதில் வேதனையான விடயம் என்னவெனில் கல்வி அமைச்சரின் பிள்ளைகளும் இதே பாடசாலையிலேயே கல்வி கற்கின்றனர். பண்டாரவளையில் தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகள் இயங்கினாலும் பெருவாரியான மாணவர்கள் கல்வி கற்கும் ஒரே கலவன் மத்திய கல்லூரி இதுவாகும். 2001ம் ஆண்டு உயர்தர பரிட்சையிலும் குறைந்தளவு பெறுபேறுகளையே இப்பாடசாலை பெற்றது. ஒரு மத்திய கல்லூரிக்கு இது ஆரோக்கியமான வளர்ச்சியல்ல என பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மாணர்களிடம் இதைப்பற்றி விசாரித்ததில் ஆசிரியர்கள் பாடசாலையை ஒரு வியாபார ஸ்தாபனமாக மாற்றியுள்ளதாக குறிப்பிடுகின்றனர். ஆசிரியைகள் மத்தியில் சேலை, நகப்பூச்சு, முகத்திற்கு பாவிக்கப்படும் அழகு சாதனப் பொருட்கள் என்பன தாராளமாக பரிமாறிக்கொள்ளப்படுகின்றனவாம். இந்த வியாபாரத்தை செய்யவே சிலர் பாடசாலைக்கு வருவதாக குறிப்பிடுகின்றனர்.

இதில் காட்டும் அக்கறையை எமக்குப் போதிப்பதில் காட்டினால் என்ன என்று விசனிக்கின்றனர் மாணவர்கள். இதைப்பற்றிப் பேசச் சென்ற சமயம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையில் பல தடவைகள் மோதல்களும் இடம் பெற்றிருக்கின்றன என்கின்றனர் பெற்றோர்கள். ஒரு தடவை இடம்பெற்ற மோதலில் சக ஆசிரியரைப் பற்றி நகரமெங்கும் சுவரொட்டி ஒட்டப்பட்டமை இதன் உச்ச கட்டம் எனலாம்.

அடுத்ததாக பெற்றோர் கடும் கோபமுற்று இருப்பது இந்த 'டொனேஷன்' விடயத்திலாகும். ஆண்டு 1 பாலகர்களுக்கு ஒருவருக்கு 2500/ரூபா அறவிடப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் பதிவ பணம் 200/ ரூபா நடு வருடத்திற்கான கட்டணம் ரூபா 60/- மொத்தமாக 2760 ரூபா. அதிபரிடம் கேட்டால் பாடசாலை படிக்கட்டு கட்ட வேண்டும் என்கிறாராம். ஐயா முதலில் கல்விப் படிக்கட்டுகளை செப்பனிடுங்கள் உதவி தாராளமாக வரும்.

இங்கு கல்வி கற்கும் பெரும்பாலோனோர் தொழிலாளர்களின் பிள்ளைகள். வசதியுள்ளவர்கள் விரும்பிய இடத்திற்கு மாற்றி அல்லது பணம் கொடுத்துச் சரி தமது பிள்ளைகளை படிப்பிப்பார்கள் வசதியில்லாத பெற்றோர் என்ன செய்வர்' இப்படியான அரசாங்க பாடசாலைகளிலேயே 'அவர்கள் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படுகின்றனர்.

அதிலும் 2760/- ரூபா அவர்களுக்கு ஒரு மாதத்திற்கான செலவுகளை உள்ளடக்கும் தொகையாகும்.

கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரிய குழாமிடமிருந்து தகுந்த பதிலை எதிர்பார்க்கிறோம்.

பெற்றோர்கள், மாணவர்கள் சார்பாக

வட்டகொடை சி.சிவகுமாரன்.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266

# கட்டுப்பாடற்றபகுதிக்கு அனுப்பப்படும் எரிபொருள், சீமெந்து என்பவை குறித்து 'விழிப்புடன் இருக்க' பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் முடிவு!

**பு**லிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு முன்னைய காலங்களில் தடைசெய்யப்பட்டிருந்த பொருட்களை அனுப்புவது தொடர்பாக பாதுகாப்பு சபைக்குள் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

சில பொருட்களின் தடையை தளர்த்துவதன் மூலம் எதிர்காலத்தில் மோசமான விளைவுகள் ஏற்படலாம் என கடந்தவாரம் நடைபெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளினால் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து இது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

15ம் திகதி முதல் வடபகுதிக்கு ஆறு பொருட்கள் தவிர்ந்த ஏனைய சகல பொருட்களும் வரையறைகளுடன் அனுப்பப்பட இருக்கின்றன. இதனால் ஏற்படப்போகும் விளைவுகள் குறித்து பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தலைமையில் கடந்தவாரம் நடைபெற்ற பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. இதன்போது அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகளுக்குமிடையில் முரண்பட்ட கருத்துக்கள் நிலவிய போது எரிபொருள், சீமெந்து ஆகியவற்றை கடுமையான வரையறையுடன் வடபகுதிக்கு அனுமதிப்பது என்றும் அவை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்று அவதானிப்பாளர்களைக் கொண்டு கண்காணிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டிருந்தது. ■

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கள்ள வாக்குப்போட்டார்கள் என்ற 'கறுப்பு முத்திரை' குத்திக்கொண்டார்கள்

### பேராசிரியர் கவலைதெரிவிப்பு

**யா**ழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு கள்ளவாக்குப் போட்டார்கள் என்ற கறுப்பு முத்திரை குத்தப்பட்டுள்ளது. இத்தகைய அவப்பெயர் தரக்கூடிய சத்தியத்துக்குப் புறம்பான செயல்களில் மாணவர்கள் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் கற்றலைவிட புறநிலை செயற்பாடுகளிலேயே கூடிய அக்கறை காட்டுகின்றனர். இது தவிர்க்கப்படவேண்டும் என்று யாழ். பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை தலைவரும் பேரவை உறுப்பினருமான பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் கலைப்பீட புதிய பீடாதிபதியாக பதவியேற்றிருக்கும் பேராசிரியர் ப.பாலகிருஷ்ணா ஐயரை கௌரவித்து கடந்தவாரம் நடைபெற்ற சிறப்பு நிகழ்வின் போதே பேராசிரியர் சிற்றம்பலம் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

தமிழ் இனத்தின் சுய நிர்ணயம் மரபுவழித் தாயகம் தமிழ் தேசியம் பற்றிக் குறிப்பிட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு கோரும் மாணவர்கள் தாமும் சமூக நலனில் அக்கறை கொண்டு செயற்பட வேண்டும். பல்கலைக்கழக மாணவர்களுக்கு நடந்து முடிந்த தேர்தலில் கள்ள வாக்குப் போட்டார்கள் என்ற கறுப்பு முத்திரை யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு குத்தப்பட்டுள்ளது. இத்தகைய அவப்பெயர் தரக்கூடிய செயல்களில் மாணவர்கள் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். இன்று தமிழ் சமுதாயம் ஒழுக்க நெறிகளில் நின்று பிறழ்வதுடன் பண்பாட்டுச் சீர்கேடுகளும் அதிகரித்துள்ளன. இந்த நிலையை மாற்றவேண்டியது பல்கலைக்கழக மாணவர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். பல்கலைக்கழக கல்விச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி மாணவர்கள் அறிவாற்றல் மிக்கவர்களாகத் திகழவேண்டும். பட்டத்திற்காக மட்டுமே படிப்பது என்ற தவறான எண்ணம் இன்றைய மாணவர்கள் மத்தியில் ஆழமாகப் பதிந்திருக்கிறது.

அந்த நிலை மாறி கல்வி என்பது தனி மனிதனின் ஆளுமையை வளர்த்துக்கொள்வதுடன் சமூகத்துக்கு நிறைவான சேவையை வழங்க வேண்டும் என்றும் திரு. சிற்றம்பலம் தனது உரையின்போது வேண்டுகோள் விடுத்தார். ■

## தமிழ்மொழி பாடசாலைகளில் அதிகப்படியான பண வசூலிப்பு

**சி**ல தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக மாணவர்களிடமிருந்து பெருவாரியான பண வசூல் நடைபெறுவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கிழக்கில் சில பாடசாலைகளில் வசதிக்கட்டணமும் மாதாந்தத் தவணைக் கட்டணமும் செலுத்தாத மாணவர்களுக்கு இலவச சீருடையையும் இலவச பாடப்புத்தகங்களையும் வழங்க சில அதிபர்கள் மறுப்புத் தெரிவித்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மொழி மூலப் பாடசாலைகளிலேயே சட்டவிரோதமான பண வசூலிப்பு பெருவாரியாக இடம்பெறுகின்றதென பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். ■

## "சமாதான முயற்சிக்கு மத்தியில் தாக்குதல் எதனையும் நடத்தவேண்டாம் என மேலிடத்து உத்தரவு"

### மருதானையில் கைதுசெய்யப்பட்ட தற்கொலைப்படை உறுப்பினர் வாக்குமூலம்

**அ**ரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சி நடைபெறும் சமயத்தில் எந்தவொரு தாக்குதலையும் நடத்த வேண்டாம் என்று தனக்கு தலைமையகம் உத்தரவிட்டிருந்ததாக கடந்த வாரம் கொழும்பு மருதானையில் கைதுசெய்யப்பட்ட தற்கொலைப்படை உறுப்பினர் பொலிசாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முக்கிய புள்ளிகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்துவதற்காக கொழும்புக்கு வந்த புலிகளின் தற்கொலைப்படையைச் சேர்ந்த ஒருவர் 15 கிலோ எடைகொண்ட கிளைமோர் குண்டொன்றுடன் கடந்த வாரம் மருதானையில் வைத்து கைதுசெய்யப்பட்டார். இவர் மாதம் மூவாயிரம் ரூபாய் வாடகை செலுத்தி மருதானை மாளிகாகந்த பிரதேசத்தில் அறை ஒன்றில் வசித்து வந்திருக்கிறார்.

வாழைச்சேனையில் பிறந்த இவர் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் கொழும்பு வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவருக்கு இருப்பிடம் வழங்கியிருந்த வீட்டு உரிமையாளரான முஸ்லிம் பெண்மணியும் மற்றொரு நபரும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர் கடந்த 11ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை பம்பலப்பிட்டி மெஜஸ்டிக் சிட்டி வர்த்தகத் தொகுதியில் நடமாடிய சமயம் கொழும்பு தெற்கு உளவு பிரிவினரால் அவதானிக்கப்பட்டுள்ளார். பின்னர் அவரை விசாரணை செய்த போது மருதானை வீட்டில் இருந்து இந்தக் குண்டும் இரண்டு சயனைட் வில்லைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சி-4 ரகத்திலான இந்த குண்டு கொழும்பில் இதுவரை காலத்தில் கைப்பற்றப்பட்ட புலிகளுக்குச் சொந்தமான மிகப் பெரிய குண்டாகும். இந்த நபர் கடந்த ஐந்து வருட காலமாக கொழும்பில் வெவ்வேறு இடங்களில் வசித்து வந்ததுடன் முக்கிய அரசியல் வாதிகள் தொடர்பான தகவல்களை திரட்டி மட்டக்களப்பு புலி பொறுப்பாளருக்கு அனுப்பி வந்துள்ளமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்திருக்கிறது.

இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கிளைமோர் குண்டு இதற்கு முன்னர் இராணுவ பஸ் ஒன்றில் பொருத்தி வெடிக்க வைக்க எடுக்கப்பட்ட முயற்சி ரிமோட் கொன்ட்ரோலில் ஏற்பட்ட சிறிய தவறினால் தோல்வியடைந்ததாகவும் இவர் பொலிஸாரிடம் கூறியிருக்கிறார். 17 வயதில் புலிகள் இயக்கத்தில் சேர்ந்ததாகவும் குண்டுகளை வெடிக்கச் செய்வதிலும் இலக்கு நோக்கி சுடுவதிலும் விசேடப் பயிற்சி பெற்றதாக கூறியுள்ளார். விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ●

## மல்டிபெரல் ரொக்கட் கொள்வனவுக்காக 3 நிபுணர்கள் வெளிநாடு பயணம்

**ம**ல்டி பரல் ரொக்கட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக பாதுகாப்பு அமைச்சின் மூன்று அதிகாரிகள் வெளிநாடு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது தேர்தலுக்கு முன்னர் பாதுகாப்புப் படைகளுக்காக வெளிநாடொன்றில் இருந்து கிராட் ரொக்கட்டுக்கள் 50 ஆயிரம் கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவற்றுக்கான நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக பிரச்சனைகள் எழவே இது சம்பந்தமான சில கணக்கு விபரங்கள் பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டது.

குறிப்பிட்ட ரொக்கட்டுக்களை வாங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சு 1133803 டொலர்களை செலவிட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தச் செய்திக்கு மறுப்புத் கடந்தவாரம் மறுப்பு தெரிவித்திருக்கும் பாதுகாப்பு அமைச்சு இது தொடர்பான விபரங்களை குறிப்பிட்ட செய்திப் பத்திரிகைக்கு அறிவித்திருந்தது. பாதுகாப்பு அமைச்சினால் பத்திரிகைக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதின் படி தற்போது மூன்று நிபுணர்கள் இந்த ரொக்கட்டுக்களை பரிசோதிப்பதற்காக வெளிநாடு சென்றுள்ளமை தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

"50 ஆயிரம் மல்டி பெரல் ரொக்கட்டுக்களை கொள்வனவு செய்ய பாதுகாப்புப்படை நடவடிக்கை எடுக்கவில்லை. எவ்வாறெனினும் இராணுவத்தின் தேவைக்காக இந்தவகை ரொக்கட்டுக்கள் இதைவிட குறைந்தளவில் வாங்கப்பட இருக்கின்றன. இதற்கான நிதி ஒதுக்கீடுகள் வழமையான நிதி வழங்கல் சுற்றுநிருபத்திற்கு ஏற்ப திறைசேரியினதும் பாதுகாப்பு அமைச்சினதும் அனுமதியுடன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் பணம் எதுவும் இதுவரை கையளிக்கப்படவில்லை.

இந்த ரொக்கட்டுக்களை கப்பலில் ஏற்ற முன்னர் பரிசோதிக்கப்படும். இவற்றை சோதிப்பதற்காக மூன்று நிபுணர்கள் தற்போது குறிப்பிட்ட நாட்டிற்கு சென்றுள்ளனர். பரிசோதனைகளின் பின்னர் அவர்கள் இங்கு திரும்பி வருவார்கள். பாதுகாப்புக் காரணங்களின் அடிப்படையில் இந்த ரொக்கட்டுக்கள் வாங்கப்படும் நாட்டையும் அளவையும் தெரிவிக்க முடியாதுள்ளது." இவ்வாறு பாதுகாப்பு அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த மல்டி பெரல் ரொக்கட்டுக்களை வாங்குவதற்கு புதிய அரசாங்கத்தின் கீழ் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

பிரிவினைவாத யுத்தம் நடைபெறும் நாடொன்றில் இருந்தே இந்த ரொக்கட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட இருக்கின்றன என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. ■

## இராணுவத் தளபதியிடம் விசாரணை

**க**டந்த தேர்தல் தினத்தன்று கண்டி மடவளைப் பகுதியில் இடம்பெற்ற 10 முஸ்லிம் இளைஞர்களின் கொலை தொடர்பாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் விஷேட பொலிஸ் குழு இராணுவத் தளபதியிடம் ஆறு மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக விசாரணை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தின்போது சில அரசியல் வாதிகளின் அடாவடித்தனங்களில் இராணுவத்தினர் பங்குகொண்டமை தொடர்பாகவும் இலங்கை இராணுவத்துக்குச் சொந்தமான ஆயுதங்கள் அரசியல் வாதிகளின் கைகளுக்குப் போய்சேர்ந்தது தொடர்பாகவும் இதன்போது கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. ■

## ரயில் அனர்த்தம் சதிவேலையாக இருக்கலாமோ என சந்தேகம்!

**16** பேரைப் பலிகொண்டு சுமார் 200 பேர் காயமடைய காரணமாக இருந்த ரயில் விபத்து நாசகார வேலையாக இருக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஞாயிறன்று கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த இன்டர்சிட்டி ரயில் ரம்புக்கனையில் தடம் புரண்டது. இந்த ரயில் விபத்து இயந்திரக் கோளாறு காரணமாக இடம்பெற்றிருக்கலாமென போக்குவரத்து அமைச்சின் பூர்வாங்க விசாரணைகள் தெரிவித்திருந்த போதிலும் இலங்கை ரயில்வே திணைக்களத்துக்கும் பொறியியலாளர்களுக்கும் சில ஊழியர்களுக்கும் இடையில் நிலவி வந்த கருத்து முரண்பாடு இத்தகைய நாசகார வேலை ஒன்றிற்கு வித்திட்டிருக்கலாம் என தற்போது சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

ரயிலின் கருவிகளில் சில தவறுகள் காணப்படுவதாக ரயில் சாரதி தனது குறிப்புப் புத்தகத்தில் எழுதி இருந்தபோதிலும் பொறியியல்துறை ஊழியர்கள் அக்கறை காட்டாமல் இருந்துள்ளமையும் அறியப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் விசாரணைகள் முடிவடையும் வரை இது குறித்து உறுதியாக எதனையும் தெரிவிக்கமுடியாதென ரயில்வே திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ●

# முரசம்

## ஜே.வி.பி.யின் விழிப்புணர்வு பிரசாரம்

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

இந்த நாட்டில் கடந்த இரண்டு தசாப்த காலமாக இடம்பெற்று வரும் போருக்கு செலுத்தப்பட்ட விலை லேசானதல்ல. பொருளாதார ரீதியில் கணக்கிட முடியாத அழிவு நேர்ந்திருக்கிறது. இதுவரையில் சுமார் 70 ஆயிரம் மனித உயிர்களை யுத்தம் பலிகொண்டுள்ளது.

இந்த அனர்த்தத்தில் இருந்து மீண்டு ஒரு நாடு என்ற வகையில் இலங்கைத் தீவு உருப்படவேண்டுமாயின் போர் ஓய்ந்து சமாதானம் மலரவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது.

யுத்தத்தின் பிரதான இரண்டு பங்குதாரர்களான புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் இதுவரைகாலமும் இருந்து வந்த சந்தேகங்களையும் கருத்து முறன்பாடுகளையும் நோக்கும்போது இந்த நாடு நிரந்தர அமைதியை நோக்கிய பயணத்தில் ஒரு அங்குலத்தைக்கூட கடக்கவில்லை என்றே கருத வேண்டியிருந்தது.

ஆனால் இன்றைய நிலையில் மிகச் சிறிய மாற்றம் தோன்றியிருக்கிறது. இரண்டு தரப்பினரும் வெவ்வேறு காரணங்களின் அடிப்படையிலாக இருந்தபோதிலும் ஏதோ ஒரு வகையில் விட்டுக்கொடுப்புக்கு தயாராக இருப்பதை உணர்த்தி வருகின்றனர்.

இலங்கை தேசத்திற்கு எதிர்காலம் என்ற ஒன்று அவசியம் என்று கருதினால் இத்தகைய விட்டுக்கொடுபக்கள் இன்றியமையாதவை.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மேற்கொள்ளும் சமாதான முயற்சி எந்தளவு தூரம் இறுதி வெற்றியை அடையும் என்ற ஐயப்பாடு முன்னோக்கி இருக்கின்றபோதிலும் அந்த முயற்சிக்கு குழிபறிக்காமல் இருக்கவேண்டியது சகல அரசியல் கட்சிகளினதும் சிவில் அமைப்புக்களினதும் தலையாய கடமையாகும்.

ஆனால் துரதிஷ்ட வசமாக அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை தவறாக அர்த்தப்படுத்தி சிங்கள மக்கள் மத்தியில் இன ரீதியிலான உணர்வலைகளைத் தூண்டும் முயற்சிகள் தென்னிலங்கையில் சில அரசியல் கட்சிகளால் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

குறிப்பாக மக்கள் விடுதலை முன்னணி இது விடயத்தில் தன்னால் முடிந்ததை செய்கிறது! வீடு வீடாகச் சென்று ரணில் புலிகளுக்கு நாட்டை தாரை வார்க்கப்போவதாக கூறிவருகிறது. கூட்டங்கள் நடத்தியும் கருத்தரங்குகள் வைத்தும் இந்தக் கருத்தை அடிப்படைவாத சிங்கள மக்கள் மத்தியில் வேரூண்றச் செய்ய முயற்சி செய்கின்றது. இது கண்டிக்கத் தக்கதொரு விடயமாகும்.

சமாதான முயற்சியின் முடிவுகள் எவ்வாறிருக்கப்போகின்றது என்பது வேறு பிரச்சனை. எந்தவொரு அரசியல் கட்சியும் அதனை குழப்பவேண்டும் என்று நினைக்கக்கூடாது.

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இனப்பிரச்சினைத் தீர்வில்

# கருத்தொருமிப்பு அரசியல் சாத்தியம்தானா?

**இன்றைய தீர்வு முயற்சிகளையும் தமது அதிகார நலன்களுக்காக பயன்படுத்த எவரேனும் சிந்திப்பார்களானால் அது நிச்சயம் இந்த சந்தர்ப்பத்தையும் நாசமாக்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை.**

சார்க் அமைப்பின் தலைவியாக நீண்டகாலம் பதவி வகித்த ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அந்தப் பதவியை நேபாள ஜனாதிபதியிடம் ஒப்படைக்கும் முன்னர் ஆற்றிய இறுதி உரை முக்கியமானதொரு கருத்தை வலியுறுத்துவதாக அமைந்திருந்தது.

சார்க் தலைவர்களின் மாநாடு என்பது ஒரு சர்வதேச அரங்கம். அங்கு வெளியிடும் கருத்து சர்வதேச வாக்குறுதியாக கருதப்படக் கூடியது. அந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

"இலங்கையின் புதிய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு நானும் உதவுவேன். எனது கட்சியும் அதற்கு உதவிபுரியும். இலங்கையின் இனப்பிரச்சனையை அரசியல் ரீதியாகவே தீர்க்கவேண்டும்." அங்கு தொடர்ந்து உரையாற்றிய திருமதி குமாரதுங்க, பாராளுமன்றத்தில் பெரும்பாண்மை பலத்தைப் பெற்று ரணில் விக்கிரமசிங்க பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டதன் மூலம் இலங்கையில் இருதரப்பு உடன்பாட்டுடனான கருத்தொருமிப்பு அரசியல் ஒன்றுக்குரிய சூழ்நிலை தோன்றியுள்ளது எனவும் குறிப்பிட்டார். இதில் இரண்டாவதாக குறிப்பிடப்பட்ட விடயம் தற்போதைய இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகளோடு முக்கியமாக கவனத்திற்கொள்ளத்தக்கது.

தான் தொடர்ந்தும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி வகிக்கப்போவதை மறைமுகமாக தெரிவித்திருக்கும் திருமதி குமாரதுங்க, தான் பதவியில் தொடருவதற்காக அரசாங்கத்துடன் செய்துகொள்ளும் உடன்பாடாக சமாதான முயற்சிகளை குழப்பாமல் இருக்க ஒப்புக்கொள்கிறார்.

சிலவேளை பிரதமர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க முகம்கொடுக்கப்போகும் மிகவும் தர்மசங்கடமான நிலைக்கு ஜனாதிபதியின் இந்தக் கூற்று கட்டியம் கூறுகிறது.

பிரதமரின் செயற் திட்டத்தில் முதல் வரிசையில் இருப்பது யுத்தம், சமாதானம் தொடர்பான நிகழ்ச்சி நிரல்கள் என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை. அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர் கடந்த ஒன்றரைமாத காலப்பகுதிக்குள் சமாதான முயற்சிகளுக்குகாக அரசாங்கத் தரப்பிலிருந்து செய்யப்பட்ட விட்டுக்கொடுப்புக்கள் பிரதமரின் இந்த எண்ணக்கருவை தெளிவாகப் புலப்படுத்தி நிற்கிறது.

தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் வேறுபடுத்தி அரசியல் நடத்தும் வழிமுறையை பொதுஜன ஐக்கிய முன்னணி கையாண்டது. இவ்விரு தரப்புக்கும் இடையில் கூடுமானவரையில் பிணக்கை தோற்றுவித்து அதன் மூலம் தமிழ் மக்களை தம் பக்கம் வென்றெடுக்கவும் புலிகளைத் தனிமைப்படுத்தவும் முன்னைய அரசாங்கம் திட்டமிட்டு செயற்பட்டது. ஆனால் யாதார்த்தத்தில் தலைகீழான முடிவே பொதுஜன ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்தது.

புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான போர் நடவடிக்கைகளால் பாதிப்புக்குள்ளான தமிழ் மக்கள் இன்னும் இன்னும் அரசாங்கத்தை விட்டு தூரமாகியதோடு தமது பிரதிநிதிகளாக புலிகளை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.


இதனால் புலிகளைத் தனிமைப்படுத்தி தமிழ் மக்களை வென்றெடுக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்திட்டம் எதிர்பார்த்தளவு வெற்றியைக் கொடுக்கவில்லை. ஆனால் ரணில் விக்கிரமசிங்க இதற்கு நேர் எதிரான கருத்தைக்கொண்டிருந்தார். 1996 முதலே ரணில் கூறிவந்த கருத்துக்கள் இதனை நன்கு புலப்படுத்துகின்றன. புலிகளை தமிழ் மக்களிடமிருந்து பிரிக்கவென முன்னெடுக்கப்படும் யுத்தம் வெற்றிபெறப்போவதில்லை என அவர் தொடர்ச்சியாக கூறி வந்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் இனப்பிரச்சனை தொடர்பான நிலைப்பாட்டில் இருக்கும் ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடாக இதனைக் கருத முடியும்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொள்கை வகுப்பாளர்களில் தீவிர புலி எதிர்ப்பாளர்களும் இடம்பெற்றிருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் இதே போன்ற புலி எதிர்ப்பாளர்கள் இல்லாமல் இல்லை. ஆனால் அந்தக் கட்சியின் நிகழ்ச்சி நிரலை தயாரிக்கும் வல்லமை படைத்தவர்களாக ஓரளவு தாராளமய கருத்துடையவர்களே இருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் அல்லது கொள்கை வகுப்பாளர்கள் தாராளக்கொள்கை உடையவர்கள் என எவ்வாறு கருத முடியும் என்ற கேள்விக்குகலாநிதி ஜயதேவ உயன்கொட இந்தியாவின் பிஸ்னஸ்லைன் என்ற சஞ்சிகைக்கு இவ்வாறானதொரு விளக்கத்தை அளிக்கிறார்.

"இங்கே லிபரல் வாதிகள் என்பது இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் மிகவும் நடுநிலையாக சிந்திக்கக் கூடியவர் கள்தான். அவர்கள் தீவிர கொள்கை ஒன்றில் கால் ஊன்றியிருப்பவர்கள் அல்ல. அதேபோல் இலங்கையின் பெரும்பான்மையின மக்களும் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்றின் மூலமே இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முடியும் என்று கருதுகின்றனர். நாம் இங்கே லிபரல் வாதிகள் எனக் குறிப்பிடுவது அரசியல் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்காக பேச்சுவார்த்தையை ஆதரிக்கும் குழுவினரையாகும்." இந்தப் பேட்டியின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும் அதிகாரம் இத்தகைய லிபரல் வாதிகளின் கையில் இருப்பதாகவும் ஜயதேவ உயன்கொட குறிப்பிடுகிறார்.



## எம்.பீ.எம். பர்ஸான்

மற்றொரு பிரபல அரசியல் விமர்சகரான கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீட பேராசிரியர் ரொஹான் எதிரிசிங்க சந்திரிக்கா குமாரதுங்க தொடர்பாகவும் இதே போன்றதொரு விளக்கத்தை அளிக்கிறார். அவரது கருத்தின்படி இலங்கை சுதந்திரக் கட்சிக்குள் லிபரல் கருத்துக்களை பிரதிநிதித்துவம் செய்பவர்கள் ஜனாதிபதி குமாரதுங்க மற்றும் அநுராபண்டாரநாயக்க குழுவினரேயாகும். அதனால் இவ்விரு தரப்புக்கும் இடையில் அதாவது அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் கருத்தொருமிப்பு ரீதியிலான உடன்பாடொன்றை எட்ட முடியும் என ரொஹான் எதிரிசிங்க வாதிடுகிறார்.

இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பில் எதிர்க்கட்சியுடன் இத்தகைய உடன்பாடொன்றுக்கு வர முடியுமாயின் அரசாங்கம் அதன் காலாண்டில் பெற்ற மிகப்பெரும் வெற்றியாக அதனைக் கருத முடியும். ஆனால் துரதிஷ்டவசமாக அவ்வாறானதொரு அரசியல் பிரவேசத்திற்கான கதவுகள் திறந்து இருக்கிறதா என்பது சிந்திக்கப்படவேண்டியதே.

ஜனாதிபதியை பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்ற கருத்தை ஆழமாகக் கொண்டிருக்கும் ஒரு குழுவினரும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கவே செய்கின்றனர்.

அரசாங்கத்திற்குள் உள்ள முக்கியஸ்தர்கள் பலர் இந்தக் கருத்தில் உறுதியாக நிற்கின்றனர். வேறு சிலர் தாராள சிந்தனையுடன் கருத்தொருமிப்பு அரசியலுக்காக வாதிடுகின்றனர். இவ்விரு பிரிவினருக்கும் மத்தியில் திருமதி குமாரதுங்கவுடன் ஒரு உடன்பாட்டைக் கண்டு இனப்பிரச்சனைத் தீர்வில் அவரது ஆதரவையும் பெற்றுக் கொள்ளும் சவால் ரணில் விக்கிரமசிங்கவின் முன்னிநிலையில் காணப்படுகின்றது. ஆனால் மேலோட்டமான அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு அப்பால் இந்த இரு தலைவர்களுக்கும் கட்சி நலன் சார்ந்த நிலைப்பாடுகள் இருக்கும் என்பதை நாம் இலகுவில் நிராகரித்துவிட முடியாது. சர்வதேச சமூகத்திற்கும் பத்திரிகைகளுக்கும் எத்தனை தூரம் சிரித்துக்கொண்டு பதில் சொன்னாலும் கூட ரணில் விக்கிரமசிங்கவும் சரி, சந்திரிக்கா குமாரதுங்கவும் சரி இனப்பிரச்சனை என்ற தமது அதிகாரங்களை பலப்படுத்தும் செயற் திட்டத்தையும் முன்னெடுக்க முயற்சிக்க மாட்டார்கள் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை. ஜனாதிபதி புதிய அரசாங்கத்திடம் தனது முக்கிய பொறுப்புக்கள் பெரும்பாலானவற்றை ஒப்படைத்துவிட்ட போதிலும் நாட்டின் நிர்வாகத்தில் அவரது கை முற்றாக செயலிலந்து போயுள்ளது என நினைக்கத் தேவையில்லை. இந்த இரண்டு பிரிவினரில் எவரேனும் இனப்பிரச்சனையின் இன்றைய தீர்வு முயற்சிகளையும் தமது அதிகார நலன்களுக்காக பயன்படுத்த சிந்திப்பார்களானால் அது நிச்சயம் இப்போதுள்ள சந்தர்ப்பத்தையும் நாசமாக்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் முயற்சிகள் தோல்விகண்ட பின்னர் மக்கள் மத்தியில் அவரது செல்வாக்குக் குறையும் என்று கணக்குப் போட்டு அதற்காக காய் நகர்த்தலில் ஜனாதிபதி ஈடுபட்டாலோ தமிழ் மக்களுக்கான தீர்வொன்றை வழங்க ஜனாதிபதி குறுக்கே நிற்கிறார் என்றொரு குற்றச்சாட்டை தயார்படுத்தி அதன் மூலம் திருமதி குமாரதுங்கவை பதவியிறக்கி நிறைவேற்றதிகாரத்தைக் கைப்பற்ற ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டாலோ நோர்வேக்காரர்கள் இம்முறையும் வெறுங்கையோடுதான் திரும்பிப் போக வேண்டிவரும். இந்த இரு தரப்பினரும் அவ்வாறு செய்ய மாட்டார்கள் என்று நம்புவோமாக. ■

# த.மா.கா.வும் கூட்டணியைவிட்டு வெளியேறியது

# அ.இ.அ.தி.மு.க. தன்னந்தனியே

மறைந்த கருப்பையா மூப்பனார் மகன் ஜி.கே. வாசனுக்கு மாநிலங்களவை இடம் இல்லை என புரட்சித் தலைவி கைவிரித்து விட, முறைத்துக்கொண்டு தமிழ் மாநில காங்கிரசும் கூட்டணியினரைவிட்டு வெளியேறிவிட்டது.

ஏற்கெனவே பாட்டாளி மக்கள் கட்சி, இடது சாரிக்கட்சிகள், காங்கிரஸ் என்று கூட்டணிக்கட்சிகள் ஒவ்வொன்றாக அ.இ.அ.தி.மு.கவுடன் தங்கள் உறவை முறித்துக் கொண்டுவிட்டன. மீதம் இருந்தது தா.மா.கா.தான். அதுவும் பிய்த்துக்கொண்டு விட்டது.

இவ்வாறாக கடந்த சட்டமன்றத் தேர்தல்களின்போது உருவாக்கப்பட்ட மதச்சார்பற்ற கூட்டணி இப்போது நிர்மூலமாகி விட்டது. பெப்ரவரி 21ம் நாள் நடைபெற விருக்கும் ஆண்டிப்பட்டி, வாணியம்பாடி மற்றும் சைதாப்பேட்டை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களை, அ.இ.அ.தி.மு.க. ஒற்றையாளாகவே சந்திக்கப்போகிறது. ஜெயலலிதா அசரவேயில்லை. யார்வேண்டுமானாலும் போகலாம். நாம் தனியாகவே இருப்போம் என்று திருவிளையாடல் சிவாஜி ஸ்டைலில் கூறிவிட்டார்.

மதச்சார்பின்மையின் ஏகப்பிரதிநிதி புரட்சித் தலைவிதான் என்று முழங்கிக் கொண்டிருந்த இடதுசாரிகளுக்கு முகத்தைக் கொண்டு எங்கே வைத்துக்கொள்வது என்றே புரியவில்லை.

ஆனால் அவர்களுக்கென்ன, இன்னொரு விளக்கத்தைக் கொடுத்துவிட்டு வேறு யாருடனாவது கூட்டணிசேர்ந்து தங்கள் கௌரவத்தை ஓரளவாவது காப்பாற்றிக் கொள்ள முயற்சிசெய்வார்கள். அவ்வளவுதான் ஆட்சியைப்பிடிப்பது ஒன்றும் அவர்களின் கனவு இல்லையே. ஆனால் ஜெயலலிதா போன்ற தலைவர்கள் ஆட்சியைக்கைப்பற்றுவதற்கு தாங்கள் காரணமாயிருக்கிறோமே என்ற கிலேசம் கொஞ்சமும் அவர்களுக்கு இருப்பதில்லை.

கடந்த சட்ட மன்றத் தேர்தல்களை எடுத்துக்கொள்வோமே. பாரதீய ஜனதாவுடன் கூட்டு சேர்ந்த தி.மு.க.வை தோற்கடிக்க வேண்டியது சரிதான்.அதற்காக ஜெயலலிதாவை மீண்டும் வளர்த்த விடவேண்டுமா என்ன? நாடாளுமன்றத் தேர்தலொன்றாலம் சரி, பா.ஜ.கவை ஆதரிக்கும் சக்திகள் அதிக இடங்கள் பெற்றுவிடக்கூடாததென்பதில் அக்கறை காட்டலாம்.

தமிழகம் போன்ற மாநிலத்தில் பா.ஜ.க. அணியில் இருக்கும் தி.மு.க. ஆட்சிக்கு வருவதால் அப்படியென்ன பெரும் தீங்கு வந்துவிடப்போகிறது? குறிப்பாக ஜெயலலிதாவின் வரலாறு தெரிந்தவர்கள், மீண்டும் அப்படிப்பட்ட நபர் ஒருவர் முதல்வராவதற்கு கைகொடுக்கலாமா? ஆனால் இடதுசாரிகளின் ஒரே அளவுகோல் பா.ஜ.க. எந்த அணியிலிருந்தாலும் எதிரணியிலிருப்பது என்பதுதான்.

முதலில் இதேபோலத்தான் காங்கிரசை மூர்க்கத்தனமாக எதிர்த்தார்கள். பா.ஜ.க. உட்பட மற்ற கட்சிகள் வளர்வதற்கு உரம்போட்டார்கள்.

தேவகௌடாவிற்கு பிறகு கருப்பையா மூப்பனார் பிரதமராகக்கூடிய வாய்ப்பிருந்தது.

மார்க்சிஸ்டுகள் கெடுத்தார்கள். மூப்பனார் காங்கிரசிற்கு வேண்டியவரென்று எதிர்த்தார்கள். குஜ்ராலால் காங்கிரசை சமாளிக்க முடியாமல், கூட்டணி அரசே கவிழ்ந்தது. தேர்தல் நடந்தது. பாரதீய ஜனதா ஆட்சியல் அமர்ந்துவிட்டது. இன்னும் சிறிது காலத்திற்கு அவர்களை அசைக்கவே முடியாது போலிருக்கிறது. இதற்கு யார் பொறுப்பேற்பது?

இப்போது பா.ஜ.க. முதல் எதிரியாகி விட்டது. அதை எதிர்ப்பதற்காக எதுவேண்டுமானாலும் செய்கிறார்கள். குறைந்த பட்சம் தாங்கள் ஆதரிக்கும் கட்சிக்கு மதச்சார்பின்மையில் ஓரளவாவது நம்பிக்கையிருக்கிறதா என்றுகூட எண்ணிப் பார்ப்பதில்லை. ஜெயலலிதா போன்ற ஒருவர் மதச்சார்பின்மையில் உறுதியாக இருப்பார் என்று நம்புவதைப் போல மடத்தனம் வேறெதுவும் கிடையாது.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித்தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் முடிந்தவரை சட்டமன்றத்திற்கு மூன்றாவது அணி அமைக்கவேண்டும் என்று முயன்று பார்த்தார். இந்தியக் கம்யூனிஸ்டுகள் கூட கூட்டணிக் கட்சிகளைத் துரும்பாக மதிக்கும் ஜெயலலிதாவுடன் இருக்கவேண்டுமா என்று யோசித்துக்கொண்டிருக்கும்போது வேகமாகப்போய் தங்களுக்கென்று சில சீட்டுக்களை வாங்கிக் கொண்டு, புரட்சித் தலைவி புகழ் பாடினர் மார்க்சிஸ்டுகள். சி.பி.எம். போக சி.பி.ஐயும் பின்தொடர்ந்தது. பார்த்தார் மூப்பனார் அவரும் அ.இ.அ.தி.மு.க. அணியில் இணைந்துவிட்டார்.

கூட்டணி அரசு வேண்டும என்று கூட இக்கட்சிகளால் நிர்ப்பந்திக்க முடியவில்லை. நஷ்டம் இக்கட்சிகளுக்குத்தான்.

சட்டமன்றத் தேர்தல்களில் வெல்வது ஜெயலலிதாவிற்கு வாழ்வா சாவா பிரச்சனை. வழக்குகளிலிருந்துதப்பிக்க ஒரே வழி அதுதான். எவரோடு வேண்டுமானாலும் கூட்டணி சேர அவர் தயார். அப்படித்தான் முதலில் பா.ஜ.க.வுடன், பிறகு தமாகாவுடன் என அவர் கைகோர்த்தார். ஆனால் கம்யூனிஸ்டுகளுக்கு அப்படியொரு பிரச்சனையில்லையே. வென்றாலும் தோற்றாலும் சில இடங்கள்தானே. அப்படியிருக்கையில் ஜெயலலிதா போன்ற ஒர நச்சுச் சக்தியினை எதற்காக வளர்க்கவேண்டும்?

ஏதாவது மூன்றாவது அணி அமைத்து கூடியவரை ஜெயலலிதாவிற்கு வரக்கூடிய பெரும்பான்மையினைக் குறைத்திருக்கலாமே. அவர் கட்டுக்குள் வைத்திருக்கலாமே. ஆனால் எதையும் கம்யூனிஸ்டுகள் செவி மடுக்கத்தயாரில்லை.

தேர்தல் பிரச்சாரத்தின்போதுகூட பா.ஜ.க.வை விமர்சிப்பதைத் தவிர்த்தார் ஜெயலலிதா. தனது ஒரே எதிரி கருணாநிதி தான் என்பதில் தெளிவாக இருந்தார் அவர். வெற்றி பெற்றவுடனேயே மத்திய அரசுடன் நல்லுறவை விரும்புவதாக அறிவித்தார். பா.ஜ.க.வின் அகில இந்தியத் தலைமைக்குத் தூது விட்டார். காஞ்சி சங்கராச்சாரியாரே இம்முயற்சிக்கு உதவியதாக கூறப்படுகிறது.

உள்ளாட்சித் தேர்தல் சமயத்தில், சட்டமன்ற வெற்றிகளுக்கு உறுதுணையாக விருந்த பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மகன் அன்புமணி மநிலங்களவையில் இடம்பெற அ.இ.அ.தி.மு.க. ஆதரிக்க முடியாது என ஜெயலலிதா கூறிவிட, பா.ம.க. வெளியேறியது. மார்க்கிஸ்டுகளும் கழன்றுகொண்டார்கள்.

ஏதோ ஒரு சில இடங்களை சி.பி.ஐ.க்கும் தாமாகாவிற்கும் விட்டுக்கொடுத்து ஓரளவு வெற்றியை ஜெயலலிதா மீண்டும் ஈட்டினார். அத்தோடு சி.பி.ஐ. மற்றும் தா.மா.காவினரின் தொண்டு முடிந்தது.

வேகமாகவே பா.ஜ.க.வை ஆதரிக்கத் தொடங்கினார் அவர். பயங்கரவாதத் தடுப்புச்சட்டமான போடோவை தீவிரமாக



ஆதரித்தார். இப்போது அ.இ.அ.தி.மு.க. எந்தக் கூட்டணியிலும் இல்லை. பிரச்சனைகளின் அடிப்படையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அது ஆதரவளிக்கும் என்று வேறு அறிவித்து விட்டார். வேறு வழியில்லாமல் சி.பி.ஐ. வெளியேறியது.

மூப்பனார் மறைவினால் ஏற்பட்ட காலியிடத்தை நிரப்ப நடந்த தேர்தலில் அவர் மகன் வாசனுக்கு ஆதரவை அளிப்பார் ஜெயலலிதா என த.மா.கா. நம்பிக்கை கொண்டிருந்தது. அதிலும் மண்ணையள்ளிப் போட்டார். தனது கட்சியாள் ஒருவருக்கு அந்த இடத்தை ஒதுக்கிவிட்டார். முணுமுணுத்துக்கொண்டே, இது மக்கள் விரோத ஆட்சி என்று வேறு குற்றச்சாட்டு வைத்துவிட்டு த.மா.க.வும் வெளியேறியிருக்கிறது.

இதிலே ஒன்றை கவனிக்கவேண்டும். மாநிலங்களவையில் பா.ம.க.விற்கோ, த.மா.க.விற்கோ இடங்களை விட்டுக் கொடுப்பதால் ஜெயலலிதாவிற்கு நஷ்டம் ஏதும் பெரிதாக வந்துவிடாது. ஆனாலும் அவர் கொடுக்கமாட்டார். அவ்வளவு அலட்சியம். இக்கட்சிகளால் ஏதும் ஆகப்போவதில்லை. மீண்டும் தேர்தல் என்றால் தேவைப்பட்டால், அழைப்பார். அவர்களும் வந்துவிடுவார்கள் என்ற மனப்பான்மைதான் அவரை இப்படியெல்லாம் செய்யத்தூண்டுகிறது.

நன்றி, நன்றி மறப்பது இதையெல்லாம் அவர் பெரிதாக என்றுமே எடுத்துக்கொள்வதில்லை. உண்மையான அரசியல்வாதி அவர். தன் காரியம் ஆனால் சரி, எதையும் செய்யலாம் என்றவொரு யதார்த்தமான அணுகுமுறை.

அவருக்கு வேறு யாரையும் விட பா.ஜ.க.வின் ஆதரவு அதிகமாகத் தேவைப்படுகிறது. எல்லா வழக்குகளிலும் உயர் நீதிமன்றத்தில் வெற்றி பெற்றுவிட்டார். தேர்தலில் போட்டியிடும் தகுதியினை மீண்டும் பெற்றுவிட்டார். முதல்வராகிவிடலாம் தான். ஆனால் உச்சநீதிமன்றம் என்றவொன்று இருக்கிறதே.

டான்சி வழக்குத் தீர்ப்பினை எதிர்த்து தி.மு.க.வினரும் சுப்பிரமணியம் சுவாமியும் மேல் முறையீடு செய்திருக்கிறார்கள். அதில் தோற்றுவிட்டால்? அதுவும் தலைமை நீதிபதி பரூச்சா கண்டிப்பான பேர்வழி. நடுங்கிக் கொண்டிருக்கிறார் ஜெயலலிதா.

இப்படிப்பட்டதொரு சூழலில் மத்திய ஆளுங்கட்சியின் ஆதரவு அவருக்குத் தேவைப்படுகிறதே. அதுவும் நாடு போகும் போக்கினைப் பார்த்தால் பா.ஜ.க.வை இன்னும் சிலகாலம் அசைக்க முடியாது என்றுதான் தோன்றுகிறது.

பொருளாதார ரீதியாக பிரச்சினைகள் அதிகமானாலும், பாகிஸ்தானை வைத்தே அவர்கள் காலத்தை ஓட்டிவிடலாம். எதிர்க் கட்சிகளுக்குள் ஒற்றுமையில்லை.

சோனியாவும் பீடத்திலிருந்து இறங்குவதாகத் தெரியவில்லை. இந்நிலையில் சரியானதொரு கூட்டணி உருவாகாவிட்டால் நிச்சயம் அடுத்த நாடாளுமன்றத் தேர்தல்களிலும் பா.ஜ.க. அணியே வெற்றிபெறும் என்று தோன்றுகிறது. அதாவது பொருளாதாரம் கடும் வீழ்ச்சியடைந்து, மக்கள் அதிருப்தி உச்சகட்டத்தையெட்டா விட்டால், அது ஒருபுறமிருக்க தமிழகத்தைப் பொறுத்தவரை இடைத்தேர்தல்கள் நடைபெறும் மூன்று தொகுதிகளில் ஆண்டிப்பட்டி, மற்றும் வாணியம்பாடி ஆகியவற்றை மற்ற கட்சிகளின் ஆதரவில்லாமல் தனியாகவே அ.இ.அ.தி.மு.க. கைப்பற்றிவிடும். சென்னையில் அமைந்துள்ள சைதாப்பேட்டையில்தான் தி.மு.க.விற்கு வாய்ப்பிருக்கிறது. அப்படியிருக்கையில் கூட்டணியைப் பற்றி கவலைப்படவேண்டிய அவசியம் ஜெயலலிதாவிற்கு இல்லையே. ஆண்டிப்பட்டி தேவரினமக்கள் அதிக எண்ணிக்கையில் வாழும் தொகுதி. அ.இ.அ.தி.மு.க.வின் கோட்டை. சசிகலாவிற்காகவும், பொதுவாகவே ஜெயலலிதா ஆட்சியில், அரசு இயந்திரத் தைப் பொறுத்தவரை தேவர்களே கொடி கட்டிப்பறக்கிறார்கள் என்றவகையிலும், அங்கே போட்டியிடவிருக்கும் ஜெயலலிதா அமோக வெற்றிபெறுவார் என்பதில் ஐயமேயில்லை.

வாணியம்பாடி முஸ்லிம்கள் நிறைந்த தொகுதி. மறைந்த அப்துல்லத்தீப் வெற்றி பெற்ற இடம். இன்னமும அ.இ.அ.தி.மு.க, பா.ஜ.க. அணியில் சேரவில்லையே. அந்த அளவில் முஸ்லிம்கள் ஆதரவு அக்கட்சிக்கு இருக்கும் என்று கணிக்கப்படுகிறது.

ஜனநாயகத்தின் அவலங்கள்தான் என்ன. தேவரின மக்களில் சிலருக்கு வாழ்வுகிடைப்பதால் ஒட்டுமொத்த சமுதாயத்தின் ஆதரவு, பிற்காலத்தில் இந்துத்துவ சக்திகளுடன் கைகோர்க்கக்கூடும் என்ற நிலையிலிருந்தாலும் இப்போதைக்கு அவர் எதிரணியில்தானிருக்கிறார் என்ற அளவில் முஸ்லிம்கள் ஓட்டு. சைதாப்பேட்டையில் கூட ஆயிரக்கணக்கில கள்ள ஓட்டுக்கள் போட்டு அ.இ.அ.தி.மு.க அங்கே வெல்லக்கூடும் என்று கூறப்படுகிறது. ஜெயலலிதா என்னவெல்லாம் செய்தார். செய்வார் இதையெல்லாம் யாரும் மனதில் கொண்டு வாக்களிப்பதில்லையென்பதே பொதுவான மதிப்பீடு. இதுதான் இந்திய ஜனநாயகத்தில் லட்சணம்.

சமீபகாலமாக சிலப்பதிகார நாயகி கண்ணகி தமிழக பத்தரிகைகளில் அதிகம் அடிபடுகிறார். கற்புக்கரசி கண்ணகி பெண்ணினத்திற்கு முன்மாதிரிதானா என்று தமிழினவாதிகள் கேள்வியெழுப்புவதில்லை. கோவலன் செய்த கொடுமையினையெல்லாம் பொறுத்துக்கொண்டு, இறுதியில் கணவனுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கா ஒட்டுமொத்த ஊரினையே எரித்தவர் கண்ணகி. இது பற்றி வாதம் எதுவுமேயில்லாமல் மிகச் சிறந்த தமிழ்ப்பெண்ணாக சித்தரிக்கப்பட்டு 1968ல் இரண்டாம் உலகத்தமிர் மாநாட்டின் போது அவருக்குச் சிலையே வைக்கப்பட்டது சென்னை கடற்கரையில்.

இப்போது அது திடீரென்று காணாமல் போய்விட்டது. போயஸ்தோட்டத்திற்கு வேண்டிய சில சோதிடர்கள், கோபக்கனல் வீசும் கண்ணகி பார்வையில் விழுந்தவண்ணமே, கோட்டைக்கு செல்லும் ஆட்சியாளர்களுக்கு அது நல்லதல்ல. மாநகருக்கே நல்லதல்ல என்று கூறியிருக்கிறார்கள். ஏதோ ஒரு சாலை விபத்தில் சிலையின் பீடம சேதமடைந்திருக்கிறது என்று கூறி, சிலையினையே அப்புறப்படுத்திவிட்டார்கள். இப்போது அது எங்கிருக்கிறது என்று எவருக்கும் தெரியாது.

உடனே பொங்கியெழுந்துவிட்டார் கருணாநிதி. ஆ.தம்பி, அடுக்குமா இந்த அநியாயம், தோள் தட்டு, புறப்படு மாநாட்டுக்கு என்று அறைகூவல் விட பொதுக்கூட்டங்களும் மாநாடுகளும் தமிழகத்தில்.

ஒரு புறம் பொதுச்சொத்தினை மூட நம்பிக்கைகள் காரணமாக தனது சொந்த சொத்தாக நினைத்து அப்புறப்படுத்தும் ஜெயலலிதா. பா.ஜ.க.வுடன் கைகோர்க்கும் போது வராத தமிழின உணர்வு இத்தகைய பிரச்சனைகள் வரும்போது பொங்கிக் கொப்பளிக்க, வீதிக்கு வரும் தி.மு.க. இன்னொரு புறம்.

இப்படி பெரிய திராவிடக் கட்சிகளுமே பம்மாத்துப்பேர்வழிகள் என மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். மூன்றாவது அணி ஒன்று உருவாகாத நிலையில் ஒன்றை மாற்றி ஒன்றை, தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனையின் உக்கிரத்தைப் பொறுத்து ஆதரிக்கிறார்கள். பெரிய அளவில் மக்கள் சினம் ஜெயலலிதா பக்கம் திரும்பாத இந்தக்கட்டத்தில் இடைத்தேர்தல்களிலும் வெற்றி பெற்றுவிடுவார். மீண்டும் முதல்வராகவும் ஆகிவிடுவார். அதன் பின்? பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

# கிழக்கு முஸ்லிம்களின் வரிப்பிரச்சினையும்

# ரவூப் ஹகீம் பிரபாகரனுக்கு எழுதிய கடிதமும்

புதிய அரசு பதவியேற்றது முதல் புரையோடிப்போன நாட்டின் இனப் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு ஒன்று காணப்படும் மக்களின் அவலங்கள் தீர்ந்து புதுவாழ்வு, புதிய அமைதிச் சூழ்நிலை உருவாகுமென்ற எதிர்பார்ப்புக்கள் மக்கள் மனங்களில் குறிப்பாக வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் மனங்களில் ஏற்பட்டு மனமகிழ்வு கொண்டனர்.

ஆனால் கிழக்கில் குறிப்பாக அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இந்த மனமகிழ்வு நிறைவானதாக தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஏற்பட்டதாக இல்லை.

அச்சமும், பீதியும் பல கிராம மக்களை குறிப்பாக முஸ்லிம் பிரதேசங்களில் மக்களை சலனத்திற்குள்ளாக்கியுள்ளது.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பல தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் ஆயுதபாணிகள் ஊடுருவி, மேற்கொண்டு வரும் கப்பம் கோரல், வரி வசூலித்தல், ஆட்கடத்தல், வாகனக்கடத்தல் போன்ற சம்பவங்களே அமைதிச் சூழ்நிலையிலும் மக்களிடையே அச்சத்தையும், பதட்டத்தையும், விசனத்தையும் ஏற்படுத்தக் காரணமாகும்.

சமாதான ஒளிக்கீற்று தெரிவதாகப் பெரும் எதிர்பார்ப்புக் கொண்ட மக்கள் ஆயுதபாணிகளின் இச்செயலால் நிலை குலைந்து போயுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள்தான் இத்தகைய செயலை முன்னெடுத்துச் செல்கின்றனரென பெரும்பாலானோர் கருதுகின்றனர்.

விடுதலைப்புலிகள் வெளியே வருவார்கள், இனி நாம் நிம்மதிப் பெருமூச்சு விடலாமென நம்பிக்கொண்டிருக்கும் மக்களுக்கு இத்தகைய செயற்பாடுகள் பெரும் ஏமாற்றத்தை கொடுத்துள்ளது.

விடுதலைப்புலிகள் இத்தகைய செயல்களில் ஈடுபடவில்லை அவர்களது பெயரில் வேறு யாரோ செய்கிறார்களென்ற ஒரு கருத்தை கவனத்தில் கொண்டாலும், இத்தகைய செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கத்தக்க வல்லமை புலிகளிடமுண்டு, அதை ஏன் செய்யாமலிருக்கிறார்களென்ற வாதமும் எழுவதைத் தவிர்க்க முடியாது. இந்நிலையில் கடந்த பொங்கல் தினத்தன்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹகீம் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் முக்கியத்துவம் பெறுகிறது.

"புலிகள் அமைப்பு இறுக்கமான கட்டமைப்பைக் கொண்டு இயங்குகின்றபோது உறுப்பினர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளின் பிரதிபலிப்பை நடை முறைகளின் போது முழுவதுமாக தவிர்க்க முடியாமல் போகலாம். எனவேதான், புலிகளுக்குள் இருக்கும் முற்போக்காளர்களின் கரம் வலு விழக்கும் சந்தர்ப்பங்களில் முஸ்லிம்கள் சந்தேகப்பட வேண்டியுள்ளது. வடக்கிலிருந்து முஸ்லிம்கள் முற்றாக வெளியேற்றப்பட்டு பதினொரு ஆண்டுகள் கடந்த பின்பும் கூட தமிழீழத்தின் ஆட்புலம் என்பது தமிழர்கள் என்று அடையாளம் காணப்படும் இந்துக்களையும், தமிழ் பேசும் கிறிஸ்தவர்களையும் மட்டுமே கொண்டது என்ற விதத்தில் புலிகள் செயற்படுவார்கள் என்று முஸ்லிம்கள் இன்னும் நம்பத் தொடங்கவில்லை என்ற செய்தியையும் சகோதரர் பிரபாகரன் அவர்களுக்கு கூற விரும்புகின்றேன்.



கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முஸ்லிம் விவசாயிகள் அனைவரதும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விளை நிலங்கள் பெரும்பாலும் செய்கை பண்ணப்படாமல் தடுக்கப்பட்டுள்ளது. பொரும்பாலான காணிகளுக்கான குத்தகையும் கிடைப்பதில்லை. உயிர்ப்பறிப்பை விடவும் தொழில் செய்து வாழும் உரிமை மறுக்கப்படுவது மிக மோசமான அடக்கு முறையாகும்." என்று ஹகீம் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த ஆகஸ்ட் மாத பிற்பகுதியிலிருந்து முஸ்லிம்கள் அச்சமும், பதட்டமும், அடக்குமுறைக்கு உட்படுவதான உணர்வோடும் இருப்பதாகத் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள ரவூப்ஹக்கீம், இந்தப் பதற்ற நிலமைக்கு தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் பாரிய பண வசூலிப்பில் ஈடுபடுவதே காரணமாகும். எனவும் குறிப்பிட்டிருக்கின்றார். முஸ்லிம்களைக் கடத்துவதும், அவர்களது அசையும் சொத்துக்களை எடுத்துச் சென்று பணயம் வைத்து விட்டுப் பணம் வசூலிக்கப்படுவதுமே இன்றைய நிலமைகளைச் சிக்கலாக்கியுள்ளது என நேரடியாகவே புலிகளை நோக்கி விரல் நீட்டியுள்ளார் ஹகீம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இக்கடி தத்தை எளிதாகத் தட்டிக் கழித்துவிட முடியாது.

உண்மை நிலையை, யதார்த்தத்தை உணர்ந்து விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இத்தகைய செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க முன் வர வேண்டும்.

வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் சமுகங்கள் இனியும் ஒருவரையொருவர் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலை தோன்றக் கூடாது.

அச்சமற்ற சூழ்நிலை மீண்டும் இங்கு மலர வேண்டும். பிரபாகரன் அதற்கு ஆவன செய்வாரா? அல்லது வேதாளம் மீண்டும் முருங்கை ஏறுமா? அங்கலாய்க்கிறார்கள் மக்கள்.

அவதானி

**Computer Hardware Engineering with Networking**

**Learn to** Assemble, Troubleshoot, Repair, Service & Network Computers •**100%** Practical Oriented •Beginners to Advance Level •Classes conducted by qualified and experienced lecturers **Only 6 Participants per batch**
•**Duration: 6 Days** •Course Fee: **3500/-**
**MS Office 2000** Rs. 3250/-, **MS Word & MS Excel** Rs. 2700/-
**Computing for Kids;** Age **7-9** (500/-),Age **10-12** (600/-) monthly
**Techno Way**, 185 / B, Galle Road, Dehiwala (Close to -Ebert Silva Service Station), **Hot Line: 077- 313278**


## விளம்பரப் பகுதி


**ரண்பொக்குணகம- நிட்டம்புவ**

ரண்பொக்குணகம வீடமைப்புத் திட்டத்தில் ஏ㎡ 11/14, இலக்கத்தில் அமைந்த 3படுக்கையறை, உபசரணை அறை, சமயலறை, குளியலறை மற்றும் எல்லா வசதிகளும் கொண்ட வீடு மற்றும்

**நீர்கொழும்பு**

நீர்கொழும்பு பெரியமுள்ளையில் கனால் ரோட்டில் 54ஆம் இலக்கத்தில் 25.40 பேர்ச்சஸில் அமைந்த எல்லா வசதிகளும் கொண்ட வீடு உடனே விற்பனைக்கு.

**தொலைபேசி: 031-59077, 01-236794**



**சிங்கையில் இலங்கையர்களுக்கான மங்களகரமான திருமண சேவைகள்**

அகில உலகில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையிலும் சமயமுறை படியிலும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். அதோடு பதிவு திருமணம் தங்கும் இட வசதி, போக்குவரத்து வசதி குறித்த நேரத்தில் சிறந்த முறையிலும், நிறைவான சேவைக்கும் நீங்கள் விரும்புவதை பெறுவதற்கும் எங்களை அழைக்கவும்,

**பணிப் பெண்கள் சேவை**

வீட்டு பணிப் பெண்களுக்கு உடனடி வேலை
வாய்ப்புகள் உங்கள் முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்

சிங்கப்பூர் விலாசம்:-

R.பரமசிவம்- S.மோகனதாஸ்
LAVENDER VIDEO CENTER (PVT)LTD
BLK-808 FRENCH ROAD
# 01-159 SINGAPORE 200808
TELE PHONE 2971367-3720592 (H.P)92714294
E-MAIL: VS BOY @ HOT MAIL.COM

இலங்கை தொடர்ப்புக்கு:-
ஏ.ரமேஷ்
01-259344



**லண்டன், பாரிஸ், பிராங்போர்ட்**
**ஹோமியோபதி சிகிச்சை**

தமிழ் நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்
Dr.ரா.தியாகராஜன் **DHMS, AMRSH (LON.)**

24.10.2001 முதல் ஐந்து நாட்கள் லண்டன், பாரிஸ், பிராங்போர்ட் நகரங்களுக்கு விஜயம் செய்ய இருக்கிறார். நீரிழிவு, ஆஸ்துமா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மை குறைபாடு, குழந்தை இன்மை மற்றும் நாட்பட்ட வியாதிகளுக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம்.

***லண்டன்: 079-84803488/ 07833341693***
email: homoeocare @ rediffmail. Com
9843051099 @ bplmobile. Com
தொடர்பு: 0091-9843051099 (இந்தியா), 0094-77602513 (இலங்கை)
அக்டோபர் மாத இலங்கை விஜயம்: 18.10.2001 முதல் 21.10.2001 வரை



**தபால் மூலம் விஞ்ஞானம்**

G.C.E. (A/L) ~ இரசாயனவியல்
Year - 9, 10, 11 ~ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
Year - 5 ~ ஆரம்ப விஞ்ஞானம்


ஆசிரியர்: குமார் சிவப்பிரகாசம்

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்
**P.T.C** 14, Covington Road, Batticaloa.



**மலையாள மாந்திரீகம்**





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்- எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளி நாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளி நாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**
T.P: 00941 342463 , 00941 470615, **தேவைகளுக்கு:-**

**39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி** (J.D.G.A.N)JP

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.


# 5வது ஆண்டு நினைவஞ்சலி

பிறப்்பு
**31 08 1964**



இறப்பு
**16 01 1997**

## சீவரத்தினம் உதயகுமார் (கலட்டி கண்ணன்)

எங்கிருந்தோ வந்தான் பாரதி பாடலில் கண்ணன்.
எங்கிருந்தோ வரவில்லை எம்மில்லத்தில் உதித்தவன்
இதயம் நிறையன்பால் இன்பத்தில் மகிழ்வித்தவன்


அன்பு மகனாய் ஆசை சகோதரனாய்
காதல் நிறை கணவனாய் கனிவுமிகு தந்தையாய்
பாசமிகு உறவினனாய் பரிவுமிகு நண்பனாய்
பண்பும் இனிமையும் இணைந்த கண்ணா-எம்
அன்புக்கும் ஆற்றலுக்கும் உரிய கண்ணா!

தீராத கவலையினை நிறைவாக்கி
தீயோர்வினையால் நின்னுரு மறைந்தாலும்
மாறாத நின் நினைவினை துயராக்கி-வற்றாத
மாருதியே எம் கண்களில் நீர்
இரவ பகல் சுழற்சியில் மாறினாலும்
இதயச் சுழற்சியில் மாறாத நின்நினைவில்
தொட்டிலிட்ட அன்னையும்
தோளிலிட்ட சகோதரியும்
மாலையிட்ட செல்வியும்
மடியில் அணைத்த செல்வங்களும்
கூடிப்பிறந்த அண்ணனும்
கூடிமகிழ்ந்த உறவுகளும்
இரத்தம் கசியும் இதயமுடன்
இன்றும் கலங்கித் துடிக்கின்றோம்.

எம் உடனே எம் உயிரில் எம்நினைவில்
எம்வாழ்வில்-எம் கடைசிக் காற்றில்
கலந்து நிறைந்த கண்ணா! கண்ணா!
கலட்டியம்மன் பாதகமலமதில்
காணாநின் உரு காண்கின்றோம்.
ஓம் சாந்தி... ஓம்சாந்தி... ஓம்சாந்தி...

நீங்கா நினைவுடன்
அம்மா, மனைவி, பிள்ளைகள், மருமகள் சந்தியா
சகோதர சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள், உறவினர்கள்.


**அஸ்மா நோய்க்கு வைத்தியம்**





* தொய்வு * இழுப்பு
* இளைப்பு * மாய்ச்சல்
* மூச்சுத்தட்டல் * மண்டைச்சளி
* நெஞ்சுச்சளி * தடிமன்
* இருமல் * கண்கடி
* மூக்கடைப்பு * பீனிசம்
* தலைவலி * தும்மல்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துக்களைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல்,குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

பாராட்டுக் கடிதங்கள் சில

ஊசிகள் போட்டும், காஸ் (புகை) பிடித்தும், சுகம் கிடையாமலும், பாடசாலைக்கு ஒழுங்காகப் போக முடியாமலும், ஏன் பரீட்சை எழுதிக்கொண்டிருந்த வேளையில் எத்தனை முறை நோயின் கொடுமையினால் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்ட நான் இப்பொழுது ஒன்றரை வருடங்களாக நிம்மதியாக மூச்சு விடுகிறேன் என்கிறார் **வெள்ளவத்தை** மூர் வீதியைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவன் றொஜர் இமானுவல் என்பவர்.

ஒரு நாள் மருந்துடனேயே இரண்டரை வருடங்களாக இருந்த மாய்ச்சல் அறவே போய்விட்டது என்கிறார் **காத்தான்குடியைச்** சேர்ந்த முகமட் லத்தீப் என்பவர்.

1992-ம் ஆண்டு தொடக்கம் என்னை வாட்டி, துன்பப்படுத்தி, தற்கொலை செய்ய இருந்த என்னை ஒரு மாதத்திற்குள் முழு சுகம் அடைய வைத்த Dr. சுறாஜ் சோமசுந்தரம் அவர்களின் வைத்திய சேவையைப் பாராட்டுகிறேன், என்கிறார் **அக்கரைப்பற்று** பனங்காட்டைச் சேர்ந்த க. தங்கவேலு மாஸ்ரர்.

ஆறு வருடங்களாக இந்நோயால் பட்ட தொல்லைகள் நீங்கி நிம்மதியாக இருக்கிறேன், என்கிறார் **மன்னார** எழுத்தூரைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி இராஜேந்திரம் என்பவர்.

பல வருடத் தும்மல், மூக்கால் நீர் வடிதல் பறந்து போனது என்கிறார் **மட்டக்களப்பு** பெரிய போரதீவு அண்ணாத்துரை.



ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்

டொக்டர்
சுறாஜ் சோமசுந்தரம்
**அஸ்மா சிகிச்சை நிபுணர்**

Ph.Dr(Ind); M.B.B.Sch (Cey)
Govt. Reg. No : A 1553 (1970)
25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை
மவுண்ட்லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஒடியன் தியேட்டர்-காலிவீதி)

**தொலைபேசி இல: 074-201582**

இவ்விடத்தில் பழைய நோயாளர்களும் முன் அனுமதி பெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4மணி முதல் 7மணி வரையும் செவ்வாய், வியாழன், சனி கிழமை நாட்களில் காலை 9மணி முதல் 12மணி வரையும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. புதிதாக வரும் நோயாளர்கள் மேற் கூறிய நாட்களிலும், நேரங்களிலும் தொலைபேசி மூலம்(074-201582) தொடர்பு கொண்டு உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன்அனுமதி பெற்றே (பதிவு செய்து) வரவேண்டும்.



அலசுவது-இராஜதந்திரி

# துரிதமடையும் நோர்வேயின் மத்தியஸ்த்தம்!

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு குறித்த பூர்வாங்க நடவடிக்கைகளை தாமதத்துக்கு இடந்தராமல் நோர்வே ஆரம்பித்துள்ளது.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கெஸன் தலைமையில் கொழும்பு வந்திருந்த நோர்வே பிரதிநிதிகள் முக்கியமான சந்திப்புகளை இருதினங்களில் மேற்கொண்ட பின்னர் ஒஸ்லோ திரும்பியிருந்தனர்.

கொழுப்பு வருவதற்கு முன்னர் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கெஸன்' இலங்கை இனப்பிரச்சனை சம்பந்தப்பட்ட விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் ஆகியோர் லண்டனில் எல்.ரி.ரி.ஈ.யின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தைச் சந்தித்திருந்தனர்.

இலங்கையில் நோர்வே பிரதிநிதிகள் நடத்திய பேச்சு வார்த்தைகளில் நிரந்தர போர் நிறுத்தம் குறித்தே விரிவான பேச்சுக்கள் நடத்தப்பட்டிருந்தன.

வடக்கு-கிழக்குப் பிரச்சனையைப் பொறுத்தவரை இராணுவ ரீதியான அணுகுமுறைகள் வலுவடைந்துள்ளமை மிகவும் துரதிஷ்டமானதாகவே இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கையின் பாதுகாப்புப் படைகளுக்கு சவால்களை ஏற்படுத்தும் விதத்தில் மிகவும் பலமான நிலையில் இருந்துவருகின்றனர்.

முன்பு பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்தங்கள் முறிவடைந்த போதெல்லாம் எல்.ரி.ரி.ஈ.யினரது தாக்குதல்கள் படையினரைத் திக்குமுக்காட வைத்திருந்தன.

கடந்த ஆண்டில் நான்கு மாதகாலம் தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை ஒருதலைப்பட்சமாக அறிவித்திருந்தனர். பின்னர் அந்த யுத்த நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டு மோதல் வெடித்தபோது படைத்தரப்பு பலமான இழப்புக்களுக்கே முகங் கொடுத்திருந்தது.

கடந்த இரு தசாப்த காலமாக வடக்கு-கிழக்கில் ஏற்பட்டுவந்த மோதல்களில் அழிவுகள் பெருகிச் சென்றனவே தவிர நிதானமான பேச்சுக்களுக்கு இடமிருந்திருக்கவில்லை.

அரசியல் பேச்சுக்கள் என்று ஆரம்பிக்கப்படும்போது ஆயுதங்களைக் கட்டிப் போடவேண்டியதே அவசியமானதாகின்றது.

யுத்தத்தையும் நடத்திக்கொண்டு, பேச்சுக்களையும் மேற்கொள்ளும் நிலை காணப்படுமேயானால், எவ்வகையிலும் சமாதானத்துக்கான ஓர் ஆரோக்கியமான சூழ்நிலையைக் கட்டியெழுப்ப முடியாது.

இதன் காரணமாகவே இலங்கையில் ஆயுதப்படைகளுக்கும், தமிழீழ வடுதலைப் புலிகளுக்குமிடையே தற்போது இருந்துவருகின்ற யுத்த நிறுத்தத்தை நிரந்தரமாகவே அமுல்படுத்துவது குறித்து அக்கறை காட்டப்படுகின்றது.

இருதரப்புமே ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் ஒரு புரிந்துணர்வை யுத்த நிறுத்தம் தொடர்பாகக் கட்டியெழுப்ப வேண்டுமென்பதில் ஆர்வங்காட்டப்பட்டு வருகின்றது.

கடந்தகாலங்களில் ஏற்படுத்தப்பட்ட யுத்தநிறுத்தங்ள் மிகக் குறுகிய காலமே நீடித்தன. அத்துடன் தகுந்த காரணங்களின்றி புரிந்துணர்வற்ற நிலையில் அந்த யுத்த நிறுத்தங்கள் முறிவடைந்துமிருந்தன.

உரிய விதத்தில் யுத்த நிறுத்தங்கள் ஏற்படுத்தப்பட்டு அவை நடுநிலையானவர்களால் கண்காணிக்கப்பட்டிருக்குமேயானால் மோதல்கள் ஏற்படுவதைத் தவிர்த்திருக்க முடியும்.

ஆனால் கடந்தகால யுத்த நிறுத்தங்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படாதிருந்ததுடன், அவற்றைக் கண்காணிப்பது தொடர்பாகவும் அக்கறை காட்டப்பட்டிருக்கவில்லை.

இந்தத்தடவை எல்.ரி.ரி.ஈ. கடந்த நத்தார் தினத்தில் யுத்த நிறுத்தத்தை அறிவித்ததும், அரசாங்கம் அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் மோதல் தவிர்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

இருப்பினும் கடந்தகால அனுபவங்களை மனதில் நிறுத்திவைத்துள்ள மக்களிடையே இந்த மோதல் தவிர்ப்பு நிலை எவ்வளவு காலம் நீடிக்கும்? என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

இலங்கை வந்திருந்த நோர்வே பிரதிநிதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தரப்புடனும், எதிர்க்கட்சி மற்றும் நான்கு தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு ஆகியவற்றுடன் சந்திப்புகளை நடத்தியிருந்தனர். இச் சந்திப்புக்களின்போது ஒரு நிரந்தர யுத்த நிறுத்தத்தின் அவசியம் வெகுவாகவே உணரப்பட்டிருந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம், எல்.ரி.ரி.ஈ.யுடன் இராணுவ ரீதியான மோதல்களை எவ்வகையிலும் தவிர்க்கவேண்டுமென விரும்புவதையே அறிய முடிகின்றது.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கான முயற்சிகளோடு, மறுபுறத்தே பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கும் புதிய ஆட்சியாளர்கள் திட்டமிட்டுள்ளனர். இந்நிலையில் மீளவும் ஒரு மோதல் ஏற்படுமேயானால் அதனால் ஏற்படும் விளைவுகள் முழு நாட்டையும் மிகவும் பாதிப்படையச் செய்வதாகவே இருக்கும்.

புதிய ஆட்சியாளர்களது மனப்பூர்வமான சம்மதத்தின் நிமித்தமே அரசியல் தீர்வு நடவடிக்கைகளை நோர்வே ஆரம்பித்துள்ளது. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளும் நோர்வேயின் மத்தியஸ்த நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வில் மத்தியஸ்தம் வழங்க முன்வந்த முதலாவது நாடு இந்தியாவாகும். ஆனால் இந்தியா தனது சொந்த நலன்களுக்கு முக்கியத்துவமளித்த நிலையிலேயே இலங்கை இனப்பிரச்சனையை அணுகியிருந்தது.

அத்துடன் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சனை அணுகப்படுவதில் ஏராளமான சிக்கல்களும் காணப்பட்டிருந்தன.

வடக்கு-கிழக்கைச் சேர்ந்த அரசியல் கட்சிகளிடையே முரண்பாடுகள், குத்துவெட்டுக்கள் மலிந்திருந்தன. ஏனைய தமிழ் அரசியல் அமைப்புக்களின் போக்கிலிருந்து வேறுபட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டைப் பேணி வந்தனர்.

இந்தியாவின் மத்தியஸ்தம் ஏற்பட்டிருந்தபோது வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக எந்தவொரு தமிழ் அமைப்பினாலும் இருக்க முடியாத நிலை காணப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளோடு ஏனைய தமிழ்க்கட்சிகள் முரண்பட்டிருந்தன. அத்துடன் இராணுவ ரீதியாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் அணுகப்படவேண்டுமென்ற நிலைப்பாட்டையே தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட தமிழ்க்கட்சிகள் பலவும் கொண்டிருந்தன.

வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு ஓர் அரசியல் தீர்வாக மாகாணசபை நிர்வாக முறையை இந்தியா முன்வைத்தபோது தமிழீழ விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்துமே அந்த நிர்வாக முறையை ஏற்றுக்கொண்டிருந்தன.



ஆனால் காலப்போக்கில் வடக்கு-கிழக்கில் மாகாணசபை நிர்வாகமுறை பயனற்றுப்போனதுடன், இந்தியாவின் தீர்வு முயற்சியும் தோல்வியைத் தழுவியது.

தற்சமயம் நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான சமரச நடவடிக்கைகளை நோக்கும்போது, தமிழீழ விடுதலைப்புலிகள், வடக்கு-கிழக்குப் பிரச்சனை தொடர்பாக அரசியல் ரீதியாகவும் ஒரு பலம் மிக்க நிலையில் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

கடந்த பொதுத்தேர்தலின்போது வடக்கு-கிழக்கில் பெரும்பாலான தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்துபோட்டியிட்டதுடன், தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சனைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஏகோபித்த முறையில் ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்திருந்தன.

தென்னிலங்கை அரசியல் வட்டாரத்தில் கூட, வடக்கு-கிழக்குப் பிரச்சனை குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலமே நல்ல முடிவுகளை எட்ட முடியுமென உணரப்பட்டுள்ளது.

நோர்வே சமாதான முயற்சிகளை ஆரம்பித்துள்ள நிலையில் சர்வதேச சமூகம், அம் முயற்சிகளுக்கு தனது ஆதரவை வழங்கியுள்ளது.

இந்நிலையில் அனைத்துக் கோணங்களிலும் இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கான உதவி, ஒத்தாசை என்பவை மிகவும் நல்ல முறையிலேயே தென்படுகின்றன.

இருந்தபோதிலும் இந்தியாவில் இன்றைய தமிழக மாநில அரசு இலங்கை இனப்பிரச்சனை குறித்து அண்மையில் வெளியிட்டுள்ள கருத்துக்கள் வருத்தத்துக்குரியவையாகவே இருக்கின்றன.

பூகோள ரீதியாக நோக்குகையில் இலங்கை பிரச்சனையில் தலையிட்டுள்ள நோர்வே, புவியின் வட துருவத்தில் இருக்கின்றது. ஆனால் இந்தியா இலங்கையின் அயல்நாடாகும். அத்துடன் தமிழக மாநிலம், இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இன்றியமையாத ஒன்றாகவே இருக்கின்றது.

இலங்கையில் இன ரீதியான வன்முறைகள் மூர்க்கமடைந்தபோது, வடக்கு-கிழக்குப் பிரதேச மக்கள் இந்தியாவின் தமிழக மாநிலத்திலேயே அடைக்கலம் தேடியிருந்தனர்.

இலங்கையின் பேரினவாத வன்முறையாளர்களுக்கெதிராக இலங்கைக்கு வெளியே தமிழகத்திலிருந்தே முதல்தடவையாகக் கண்டனங்கள் வெளிவந்திருந்தன.

தமிழக மக்கள் வெளிப்படுத்திய அனுதாபமும், ஆதரவும் காரணமாகவே இலங்கையின் பேரினவாத சக்திகளை அரசியல் ரீதியாக மட்டுமல்ல. இராணுவரீதியாகக்கூட எதிர்த்து நிற்கக்கூடிய வல்லமை வடக்கு-கிழக்கு மக்களுக்கு ஏற்பட்டிருந்தது.

ஆனால் இன்றைய தமிழக மாநில அரசு இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்கள் தொடர்பாகக் கொண்டுள்ள நிலைப்பாடு கவலையளிப்பதாகவே இருக்கின்றது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மரணத்தை ஆதாரங்காட்டி தமிழகத்தின் இன்றைய ஆட்சியாளர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரங்கட்டும் போக்கைக் கடைப்பிடிப்பதையே அவதானிக்க முடிகின்றது.

பிரதமர் ராஜீவ் காந்தியின் மரணம் துரதிர்ஷ்டமானதே. அதேசமயம் பிரதமர் ராஜீவின் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிக்கு அனுப்பப்பட்ட இந்திய இராணுவத்தினரால் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதையும் தமிழக ஆட்சியாளர்கள் மனதில் கொள்ள வேண்டியோராகின்றனர்.

இந்தியாவை இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக நம்பியிருந்த இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் மீது, இந்திய இராணுவம் மிகக் கடுமையாகவே நடந்துகொண்டிருந்தது.

தமிழக முதலமைச்சர் பன்னீர்ச் செல்வன் தலைமையிலான இன்றைய அ.இ.அ.தி.மு.க மாநில அரசு எவ்வளவு தூரம் ராஜீவ்காந்தி படுகொலையைக் கசப்பானதாகக் கருதுகின்றதோ, அவ்வளவு தூரம் கசப்பானதாகவே இந்திய இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் இலங்கையின் வடக்கு-கிழக்கு மக்கள் கருதுகின்றனர்.

ராஜீவ் காந்தியின் தாயார் இந்திராகாந்தி கூட இந்தியாவின் சீக்கிய தீவிரவாதிகளால் படுகொலை செய்யபப்பட்டிருந்தார்.

எனவே இந்திராவின் மரணம் தொடர்பாக சீக்கிய மக்களுடன் இந்திய அரசு பகைமை பாராட்டியிருந்தால் பஞ்சாப்பில் இன்றுவரை இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுவதாகவே இருந்திருக்கும்.

பிரிட்டனில் வட அயர்லாந்துப் பிரச்சனை மூர்க்கமடைந்திருந்த காலப்பகுதியல் பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் முக்கிய உறுப்பினரான மவுன்ட் பேட்டன் பிரபு ஐரிஷ் கெரில்லாக்கள் நடத்திய குண்டுத்தாக்குதலொன்றில் கொல்லப்பட்டிருந்தார்.

இருந்தபோதிலும் இக்கொலை காரணமாக வட அயர்லாந்துப் பிரச்சனையைத் தீர்ப்பதிலிருந்தும் பிரிட்டிஷ் அரசு விலகியிருக்கவில்லை.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் அணுகுமுறை எதிர்பார்த்த வெற்றியைத் தராதிருந்திருக்கலாம். ஆனால் இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரை இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியமானதாகவே இருக்கின்றது.

இதன் காரணமாகவே புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் இனப்பிரச்சனையை அணுகத் தொடங்கு முன்னர் இந்தியத் தலைவர்களைச் சென்று சந்தித்து வந்திருந்தார்.


இந்திய மத்திய அரசாங்கம் கூட இலங்கைப் பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கு ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவே உறுதியளித்துள்ளது.

ஆனால் தமிழக முதலமைச்சர் பன்னீர்ச் செல்வன் தமிழகத்தில் மீளவும் தமிமீழ விடுதலைப் புலிகள் காலூன்றுவதற்கு அனுமதிக்கலாகாது என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் கோரியுள்ளார்.

இந்திய மத்திய அரசு உட்பட சர்வதேச சமூகம் இலங்கை இனப்பிரச்சனைக் கான தீர்வொன்றைக் காண்பதற்கு ஒத்துழைக்க முன்வந்துள்ளது.

இந்நிலையில் தமிழக முதலமைச்சர் பன்னீர்ச்செல்வன் தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பாகக் கொண்டுள்ள நிலைப்பாடு இந்திய மக்களுடையதாகவோ அல்லது தமிழக மக்களுடையதாக இருப்பதாகவோ கொள்ள முடியாது.

ஜெயலலிதா அம்மையாரின் அ.இ.அ.தி.மு.க. சார்ந்ததாக மட்டுமே முதலமைச்சர் பன்னீர்ச்செல்வன் தெரிவிக்கும் கருத்துக்கள் இருக்கின்றனவென்றே கருதவேண்டியுள்ளது.



## அதிரடி அய்யாத்துரை

***யாழ்ப்பாணத்தில*** பொங்கலிட்டு ரூபவாஹினியில நேரடியாகக் காண்பிச்சவையல். கொழும்பிலிருந்து போன விருந்தினருக்கு பொங்கல் கொடுத்து வரவேற்பளித்த நிகழ்ச்சியில முன்னாள் அழகு ராணி ரோஸி சேனாநாயக்கவும் ஆனந்த சங்கரியாரும் பொங்கல் பரிமாறிக் கொண்ட காட்சி இனங்களுக்கிடையிலான நட்புறவு முயற்சிக்குக் கிடைத்த உச்சகட்ட வெற்றி?! கழுத்தில பூமாலையோடு நின்ற ரோஸி சேனாநாயக்காவின் அருகில் இருந்து சங்கரியார் பொங்கல் சாப்பிட்ட கண்கொள்ளாக் காட்சி இருக்கிறதே... அதைக்காண கண்ணிரெண்டு போதாது!

***யாழ்ப்பாணத்துல*** இருந்து நேரடி ஒளிபரப்பு என்றதும் பழசை எல்லாம் ஞாகப்படுத்தி வம்பளக்குறன் எண்டு நினைக்காதியல். இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான போது கிடைத்த சிறிய அமைதிக்காலத்துலயும் குடாநாட்டை படம் பிடிக்க தரைவழியா ரூபவாஹினிக் காரர் யாழ்ப்பாணம் பேனவையல். திரும்பி வாரதுக்குள்ள சண்டை தொடங்கிட்டுது. போனவையை அடிச்சுக் கலச்சுப்போட்டு ரூபவாஹினி வேனில புலிகள் ஓடித்திரிஞ்சவை!

***'தேங்க்யூ' சொல்வதும்,*** 'சொறி' சொல்வதும் ஒருத்தரின்ர நாகரிகமான பழக்க வழக்கங்களைப் பொறுத்த விஷயம். இந்த சொற்களை ஏற்றுக்கொண்டு அதற்கு மரியாதையா பதிலளிப்பதும் அதேபோல தனிமனித நாகரிகத்தின் தன்மையைப் பொறுத்தது தான். டக்ளஸ் பாராளுமன்றத்தில வைத்து சிவாஜிலிங்கத்தாரின் நிலை கண்டு 'சொறி' சொல்ல, தனது பக்குவத்தை வெளிப் படுத்தினார் அவர். அதே 'சொறி'யை மாவையிடம் கூறப்போய் சங்கடத்தில வீழ்ந்தார் டக்ளஸ். 'சொறி' என்று சொன்னதும் முகத்தைத்திருப்பிக் கொண்டாராம் மாவை. இத்தனைக்கும் சிவாஜிலிங்கத்தின் காலில் உண்மையாகவே காயம். மாவையின் தலையில் இருப்பது 'நாடகக்கட்டு!'

***வளர்த்த கடா*** மாப்பில பாயுதெண்டு மனம் நொந்து போயிருக்கிறார் சித்தார்த்தன். விநாயகமூர்த்தியார் தனியொரு எம்.பி.யா இருக்கைக்க அவரை பராமரித்துப் பாதுகாப்பளித்த தெல்லாம் சித்தர்தான் இப்போ விநாயர் தமிழ்க்கட்சிக் கூட்டமைப்புல பவர்ஃபுல் ஆள் எண்டதால... பழசெல்லாம் சுத்தமா மறந்துபோனார். மறந்தது மட்டுமல்ல நேரடியா சித்தரின்ர அடிமடியில கைவைக்கிற அளவுக்கே போயிட்டார்! வவுனியாவுல இயக்கங்களிடமிருந்து ஆயுதங்களைக் களையனும் என்று அழுத்தம் கொடுக்கப்போரதா ஊறெல்லாம் சொல்லித்திரியுறார் விநாயகர். அந்த 'ஆயுதங்களின்' நிழலில்தான் இத்தனை நாள் வாழ்ந்தோம் என்பதை மறந்த விட்டார் மனுஷன். நன்றி மறப்பது நன்றன்று விநாயகா!

***குறிக்கட்டுவானுக்கும்*** மன்னாருக்குமிடையில கப்பல் விடப்போறதா கேள்விப்பட்டிருப்பியல். யாருடைய கப்பல் எண்டு அறிஞ்சியலே... இந்து கலாசார அமைச்சர் தன்ர சொந்தக் கப்பலைத்தான் ஓட விடப்போறார். அமைச்சுப் பொறுப்பு எதுவாக இருந்தாலும் தன்ர வியாபார அரசியலுக்கு எதுவும் தடையில்லை என்று திரும்பவும் நிரூபிச்சுப்போட்டார்!

# ஒசாமாவை மீடியாக்கள் தான் வளர்த்தனவா?

## ஒரு ஆய்வாளரின் மாறுபட்ட பார்வை

செப்டெம்பர் 11ம் திகதி அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் சூத்திரதாரி எனக் கருதப்படும் ஒசாமா பின்லேடன் அத்தனை பாதுகாப்பு மிக்க இடங்களில் மிகப் பெரிய தாக்குதல் ஒன்றை வெற்றிகரமாக செய்து முடிக்க அவருக்குள் இருந்த பலம், பலவீனங்கள் என்ன என்பது குறித்து ஏராளமான கோணங்களில் ஆராய்ச்சிகள் நடைபெற்று முடிந்துவிட்டன.



மேற்கத்தியமயம் அடிப்படைவாதத்தின் மறுமலர்ச்சி, பனிப்போரும் அதன் முடிவில் மாற்றாக வந்த புதிய உலக நியதி போன்றவற்றின் தாக்கம் தான் அவரை இப்படி ஆக்கிற்று.

கற்கால சூழ்நிலையில் அவர் பதுங்கியிருந்தாலும் உலக வரலாற்றிலேயே திடுக்கிட வைக்கும் ஒரு பயங்கர வாதத் தாக்குதலை அதி நவீன முறையில் அவரால் செய்ய முடிந்திருக்கிறதென்றால் அதற்கு இந்த யுகத்தின் அதி நவீன தகவல் தொடர்பு சாதனங்களும் நவீன மீடியாவும் நவீன போர் உத்திகளும்தான் காரணம்.

ஒரு புராணக் கதாபாத்திரம் போல ஒசாமாவைப் பற்றி நமக்கு எல்லாம் தெரிந்துவிட்டதுபோல இருக்கிறது. அதேசமயம்

குண்டுவெடிப்புக்கு தாங்கள்தான் பொறுப்பு என்பதை தெரிவிக்க வேண்டுமானால் இலண்டனில் உள்ள அரபிப் பத்திரிகைகளுக்கு நேரடியாக ஃபக்ஸ் அனுப்பிவிட்டால் மிகுதியை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.

அமெரிக்காவில் முதல் முதலாக ஒசாமாவின் தலைக்கு விலைவைத்த போது, பாகிஸ்தானில் நூறு ரூபாய் தாள்கள் மாதிரி தன் படத்தை பிரசுரித்து ஜலாலாபாத் மற்றும் உள்ள நகரங்களில் வினியோகிக்க ஏற்பாடு செய்தார். இந்தப் புத்திசாலித்தனமான ஸ்டான்ட் அவ்ரை உலகின் முன்னணி இஸ்லாமிய வாதியாக உயர்த்திக் காட்டியது. இத்தனைக்கும் 1996வரை சி.ஐ.ஏ.யின் அஞ்சத்தக்க அடிப்

ஒசாமாவுக்கு கற்குகைகளுக்குள் இருந்து வெளி உலகத்துடன் தொடர்பு கொள்ள அதி நவீன தொடர்பாடல் கருவிகள் இருந்தமையே அவரது பலத்தின் ஆணிவேர் என்று புதிய கோணத்திலான கருத்தொன்றை முன்வைக்கிறார் ஜேர்ஸன் பார்க் என்ற விமர்சகர்.

கடந்த ஆண்டில் சர்வதேச மீடியாக்களில் அதிகமாகப் பேசப்பட்ட மனிதன் என்ற வகையில் ஒசாமா பின்லேடன் குறித்து ஜேர்ஸன் பார்க் மேல் நாட்டு சஞ்சிகை ஒன்றுக்கு எழுதிய கட்டுரையின் சில பகுதிகளை இங்கே தருகிறோம்.

அமெரிக்கா வேறு மாதிரி நினைத்தாலும் இப்படி ஒரு காட்சியை நீங்கள் கற்பனை செய்து பார்த்துக்கொள்ளலாம். சாலைகளேதும் தொடாத மலையும் சமவெளியும் கலந்த குக்கிராமம் அது. ஒரு மலை இடுக்கின் வழியே பார்த்தால் கிழக்கு ஆப்கானிஸ்தானின் கார்ட்டஸ் நகரமின் விளக்குகள் வெகு தொலைவில் மின்னுவது மெல்லிசாகத் தெரிகிறது. எங்கோ ஒரு நாய் குரைப்பதைத் தவிர மயான அமைதி காற்றில் கலக்கிறது. கிராமத்தில் ஒரு காம்பவுண்டுக்குள் இருக்கும் கட்டடங்கள் ஒரு குறிப்பிட்ட வீட்டைச் சுற்றி அரண்போல் அமைந்திருக்கின்றன.

முதல் மூன்று அரண்களைத் தாண்டினால் நான்காவது அரணில் கால்நடைகளை அடைத்து வைத்திருக்கிறார்கள்.

அடுத்துள்ள அந்த உயரமான கெஸ்ட் ஹவுஸில் மூன்று அறைகள். அந்த அறைகளின் மையத்தில் கனப்பு அடுப்பு வைக்கப்பட்டிருக்கிறது. ஜன்னலுக்கு கனமான ஜமுக்காலம் திரையாகத் தொங்குவதால் உள்ளிருந்து வரும் லாந்தர் வெளிச்சம் மங்கலாகத் தெரிகிறது.

உள்ளே இராணுவ உடைக்கு மேலே போர்வையைப் போர்த்தியபடி சாய்ந்து யோசித்துக்கொண்டிருக்கும் அந்த அரேபியரின் கண்களில் கனல்கக்கும் பிரகாசம் தெரிகிறது.

இரவு உறங்கிவிட்டு காலையில் கடுங்குளிரிலும் எழுந்து வழக்கம் போல தொழுகை நடத்தி இறைவனுக்கு நன்றி செலுத்தும் அவர் வேறு யாருமல்ல. ஒசாமா பின்லேடன் தான்.

இந்த யுகத்தால் இந்த யுகத்திறகாக இந்த யுகத்திலேயே உருவான மனிதர்.

அவரது தோற்றமும் வளர்ச்சியும் 30 ஆண்டுகளில் உலகில் நடந்த சரித்திர நிகழ்வுகளின் ரசவாதத்தினால் வடிக்கப்பட்டது.

அவரைப் பற்றி நமக்கு தெரியாதது நிறைய இருப்பது போலவும் இருக்கிறது.

**பின்லேடனின் பலம் எது?**


வேறென்ன 20ம் நூற்றாண்டின் சாரம்சமான தகவல் தொடர்பு சாதனங்கள்தான்.

ஆப்கானில் வந்து இறங்கியதுமே அவர் இந்த உலகத்துடன் இந்துகுஷ் மலைகளிலிருந்து ஒரு கடிதம் மூலம் தொடர்பு கொண்டார். "நீங்கள் என்னைப் பார்க்க முடியாமல் இருக்கலாம். ஆனால் நான் இன்னும் இருக்கிறேன். இன்னும் சக்தி வாய்ந்தவனாக இருக்கிறேன்" என்று சொல்வதுபோல இருந்தது. அவரது சக்தியான நவீன செட்டலைட் தொலைபேசிகள் ஈ-மெயில் வசதிகள் போன்றவற்றின் மூலம் உலகின் எல்லா மூலைகளிலும் உள்ள புலம் பெயர்ந்த ஆப்கானியர்களை தொடர்பு கொள்ள அவரால் முடிந்தது.

டோரா போராவிற்கு பின்லேடன் தன் மூன்று மனைவிகள் குழந்தைகள் சகிதம் வந்துசேர்ந்த பதிதில் இலண்டனில் உள்ள அரேபியப் பத்திரிகையாளர் அப்துல்பாரி அத்வான் ஒசாமாவை நேரில் சென்று பார்வையிட்டார். 1996ல் கடுங்குளிரில் அவரை அந்தக் குகைகள் ஒன்றில் பார்த்தபோது ஏராளமான கம்பியூட்டர்கள் அங்கே அடுக்கப்பட்டிருந்ததைப் பார்த்திருக்கிறார் அப்துல்பாரி. அவை அனைத்தும் செயற்கைக் கோள்களுடன் இணைக்கப்பட்டிருந்தன.

1998ல் நைரோபி, தாருஸ்ஸலாமிலுள்ள அமெரிக்கத் தூதரகங்கள் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல்கள் இந்த கருவிகள் மூலம்தான் நெறிப்படுத்தப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

வேறு திட்டங்கள் வேறு வழிகளில் ஒசாமாவின் ஆட்களைச் சென்றடையும். சி.டி.க்களில் பதிந்தும் கூரியர்கள் வழியாகவும் சதித்திட்ட முன்வரைவுகள் உத்தரவுகள் போய் இருக்கின்றன. பத்திரிகை அறிக்கைகள் பாகிஸ்தானின் விசுவாசமான பத்திரிகையாளர்களுக்கு அனுப்பப்பட்டன.



படைவாதிகள் பட்டியலில் பின்லேடனின் பெயர் இல்லை. பாகிஸ்தானில் 1997வரை ஒசாமைப் பற்றி யாரும் அதிகம் கேள்விப் பட்டதில்லை. ஆனால் இரண்டே வருடத்தில் தம் குழந்தைகளுக்கு பெயர் வைக்கும் அளவு ஒசாமா பின்லாடன் அங்கு மட்டுமல்ல உலகம் முழுவதும் பிரபலமாகினார்.

**எப்படி இது சாத்தியமாயிற்று?**

எல்லாம் மீடியா உருவாக்கிய மிகையான மாயைதான்.

மீடியாக்கள் மூலம் அவரது புகழ் பரவ கடுமையான அடிப்படைவாதிகள் அவரது வசியத்துக்குள் வந்தனர். அவருக்காக மனித வெடிகுண்டாகவும் மாறத் தயாரானார்கள். தூதரகங்களில் குண்டு வைத்தார்கள். யு.எஸ்.எஸ். கோல்ட் கப்பல் மீது குண்டு போட்டார்கள். சிவில் விமானங்களைக் கடத்தி கட்டடங்களில் மோதினார்கள்.

60-70களின் பூகோள அரசியல் நிகழ்வுகளில் பின்லேடன் பிறந்தார் என்றால் 90களின் நிகழ்வுகள் அலைபோல அவரை உயரே கொண்டு சென்றது.

ஆயிரக்கணக்கான இஸ்லாமிய இளைஞர்களுக்கு பின்லாடன் தலைமை தாங்கினார். ஒரு படை ரெடியானது. நவீன கருவிகளும் பயிற்சி முறைகளும் பணமும் தயாராக இருக்கவே தான் நினைத்ததை இந்துகுஷ் மலைச் சாரலில் மண்டியிட்டு அமர்ந்தபடியே ஒசாமாவால் சாதிக்க முடிந்தது. இப்போது ஒசாமா நம் ரீ.வி.திரைகளில் தோன்றாமல் இருக்கலாம். அவரது தீர்க்கமான குரல் எந்த ரேடியோவிலும் ஒலிக்காமல் இருக்கலாம். ஆனால் அவர் எங்கும் வியாபித்திருக்கிறார். பல தேசங்களில் பயத்தை விதைத்தபடி. அவருக்கு இருக்கும் இந்த சக்தி இப்போதைக்கு உலகில் யாருக்கும் இல்லை. இன்றைய தேதிக்கு இதுவே ஒரு சாதனை தான். இதற்காகவே கடந்த வருடத்தில் செய்தியை ஆக்கிரமித்தவன் என்று ஒசாமாவைச் சொல்லலாம்.

# இப்படியும் சொன்னார்கள்

விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட்ட அமைப்பாக மத்திய அரசினால் பிரகடனம் செய்யப்பட்டிருக்கும்போது அவர்களுடனான பேச்சுக்களுக்கு சென்னையில் தளம் அமைத்துக்கொடுப்பதற்கு அனுமதிக்கமுடியாது.

-தமிழக முதலமைச்சர்
ஓ.பன்னீர்ச்செல்வம்-

சர்வதேச சமூகமே இலங்கையில் அமைதி சமாதானம் ஏற்பட வேண்டும் என வளியுறுத்திவரும் போது புலிகளின் கோரிக்கையை நாம் ஒருபோதும் நிராகரிக்கக் கூடாது. அன்டன் பாலசிங்கம் சென்னையில் தங்கியிருந்து சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட இந்திய அரசு அனுமதிக்க வேண்டும்.

-மறுமலர்ச்சி தி.மு.க.
பொருளாளர் மு.கண்ணப்பன்-

பொதுத் தேர்தல் முடிவடைந்து 3 மாதங்களுக்குள் மற்றுமொறு தேர்தலை எதிர்கொள்வது பொதுமக்களால் இயலாத காரியமாகும். உள்ளூராட்சித் தேர்தலை 6 மாதங்களுக்கு ஒத்தி வைக்கும்படி அரசாங்கத்தைக் கோருவதென நாம் தீர்மானித்துள்ளோம்.

-பொதுஜன முன்னணியின்
செயலாளர் டி.எம். ஜயரத்ன-

உள்ளூராட்சித் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும். உள்ளூராட்சி மன்றங்கள் யாவற்றையும் நாமே கைப்பற்றுவோம். வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு காணும். அதன் பின் பொதுஜன ஐக்கிய முன்னணியினர் சகல வற்றிலும் தோல்வி கண்டுவிடுவர்.

-பாராளுமன்றக் கூட்டத்தில்
ஜோன் அமரதுங்க-

இனப்பிரச்சினைத் தீர்வின் போது முஸ்லிம்களின் நலன்களும் கவனத்தில் கொள்ளப்படுமாயின் தற்போது நடைபெறும் சமாதான முயற்சிகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தனது பூர்வமான ஆதரவை வழங்கும்.

-நோர்வே தூதுக்குழுவடனான
சந்திப்பில் ரவூப் ஹகீம்-

விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வினை ஐக்கிய தேசிய முன்னணி அரசு முன் வைக்கவேண்டும். அப்படிச் செய்தால் எவ்வித மாற்றங்களுமின்றி அதனை நாம் ஆதரிப்போம்.

-காத்தான்குடி கூட்டத்தில் நு ஆ
பிரதித் தலைவர் ஹிஸ்புல்லா-

தமிழரசுக் கட்சி அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் என்பன பதிவு செய்யப்பட்ட பாரம்பரியக் கட்சிகளாகும். இவை தமது தனித்துவத்தை விட்டுக்கொடுக்க மாட்டாது. புலிகள் இயக்கம் ஜனநாயக வழிக்கு வரும்போது புதிய கட்சி தமிழ் மக்களுக்கு அவசியமில்லை. இதற்கு மாறாக நாம் எதிர்பார்க்கும் தீர்வு கிட்டாமல் விட்டால் புதிய கட்சி பற்றி அப்போது சிந்திக்கலாம்.

-புதிய கட்சி குறித்து ஜோசப்
பரராஜசிங்கம் (த.வி.கூ.)-

நாம் பழமையான கட்சிகள். எமது தனித்துவங்கள் பேணப்பட வேண்டும். ஒரே அமைப்பாக வர நாம் பக்குவப்படவில்லை என்று யாராவது கருதினால் எமக்குள் பொது நல்களைவிட குறுகிய கட்சி மனோபாவங்களே மேலோங்கி நிற்கின்றன என்பதே அர்த்தமாகும். கூட்டமைப்பின் அடிப்படைக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதன் அவசியத்தைப் புரிந்துகொண்டு இக் குறுகிய மனோபாவங்களை நாம் களைய வேண்டும்.

-சுரேஷ் பிரேமச் சந்திரன்
(ஈ.பி.ஆர்.எல்.எப்)-

அரசுடன் பேச்சுவார்த்தைக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் புலிகள் கைச்சாத்திடும் போது அவர்கள் மீதான தடை நீக்கப்பட்டிருக்கவேண்டும். முழுமையான யுத்த நிறுத்தத்தோடு தடையை நீக்கியதன் பின்னரே எத்தகைய பேச்சுவார்தைகளும் ஆரம்பிக்கப்படவேண்டும்.

-நோர்வே குழுவிடம்
தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு
எம்.பி.க்கள்.-

நாட்டின் ஒருமைப்பாட்டை காக்க பாடுபடும் ஜே.வி.பி. தலைவர்களுக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. கைது செய்யப்பட்டுள்ள புலிகள் இயக்க உறுப்பினர்களை விடுதலை செய்வதற்காக தென்பகுதிச் சிறைகளிலிருந்து அவர்கள் வட பகுதிச் சிறைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். பேச்சுவார்த்தை என்று ஆரம்பித்து பலமுள்ள இயக்கமாக புலிகளை மாற்றியமைக்கவே ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிக்கிறது.

-ஐக்கிய தேசியக் கட்சிக்கு
ஜே.வி.பி. பகிரங்கக் கடிதம்-

# 400 டொலர்களுக்கு அதிகம் பாவிக்கப்படாத புதிய ஆத்மா விற்பனைக்கு உண்டு

அமெரிக்காவின் இணையத்தள ஏலவிற்பனை ஒன்றில் உலகில் இதுவரைகாலத்தில் இடம்பெற்றிராத பொருளொன்று ஏல விற்பனைக்கு விடப்பட்டிருந்தது.

சியாடெல் நகரின் நடைபெற்ற இந்த ஏலத்தில் எடம் பேர்ட்டல் என்ற மாணவர் இணையத்தின் ஊடாக தனது ஆத்மா விற்பனை செய்யப்படும் என அறிவித்திருந்தார்.

20 வயதான சியாட்டல் மாணவரின் ஆத்மா விற்பனைக்குண்டு அதிகம் பாவிக்கப்படாத புத்தம் புதிய ஆத்மா இது என குறிப்பிட்ட விளம்பரத்தில் தெரிவிக்கப்படிருந்தது. அயோமா பிரதேசத்தில் இருந்து கிடைத்த அழைப்பொன்றுக்கு அமைய ஒரு யுவதியினால் இந்த ஆத்மா 400 டொலர்களுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

விற்பனையின் பின்னர் பொருளை வாஙகியவருக்கு தனது ஆத்மாவை எவ்வாறு கையளிப்பது என்று தனக்குத் தெரியாதென விற்பனைக்கு முன்னதாகவே குறிப்பிட்ட மாணவர் இதை ஈ-மெயில் வர்த்தக நிலையத்திற்கு அறிவித்திருந்தார். யுவதி. பணம் செலுத்திய பின்னர் 'பொருளை' ஏலத்தில் இருந்து ஒதுக்கிவிட்டதாக இணையத்தளம் அறிவித்தது. பேர்ட்டல் இதன் பின்னர் தமது ஆத்மாவை விற்பனை செய்யக்கூடாதெனவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

# ஆண் + ஆண் + பெண் = ஒரு வித்தியாசமான செக்ஸ் கொலை

விபரீத உறவுகள் எப்போதும் விபரீத முடிவுகளையே தரும் என்பதை மற்றுமொரு முறை நிரூபித்திருக்கிறது. பெரம்பலூரில் நிகழ்ந்துள்ள ஒரு செக்ஸ் கொலை!

பெரம்பலூர் அருகே உள்ளது எசனை என்ற கிராமம். இக்கிராமத்தைச் சேர்ந்தவர் ராமதாஸ். இவரது மனைவி வசந்தா. சொந்தமாய் இருந்த சிறிய நிலத்தில் விவசாயம் பார்ப்பதுதான் தம்பதியின் தொழில்.

வசந்தாவைத் திருமணம் செய்திருந்தபோதிலும் ராமதாசுக்குப் பெண்கள் மீது 'அந்த' விஷயத்தில் ஈடுபாடில்லை. அவரது விருப்பமெல்லாம் வாட்டசாட்டமான இளைஞர்கள்தான். ஓரினச் சேர்க்கையில் நாட்டமுடைய ராமதாஸ், அடிக்கடி வெளியூர் செல்வாராம். அச்சமயங்களில் பஸ் ஸ்டாண்ட், கடைத்தெரு என பொது இடங்களில் கிடைக்கும் வாலிபர்களைத் தனது தாகத்திற்குப் பயன்படுத்துவது அவரது வழக்கம். கணவனின் இந்த முறையற்ற உணர்வு வசந்தாவை அதிர்ச்சி அடைய வைத்திருக்கிறது. மனதாலும், உடலாலும் தவித்துப் போனார்.

இந்நிலையில் இரண்டு வருடங்களுக்கு முன்பு கரூரக்குப் போயிருக்கிறார் ராமதாஸ். அங்கே அவர் வீசிய ஆசை வலையில் சிக்கினான் ஒரு வாலிபன். அவன் அழகரசன். விவசாயக் கூலி, வழக்கம்போல், ராமதாஸ் அழகரசன் மூலம் தன் உடல் இச்சையைத் தீர்த்துவிட்டு சாவகாசமாய்ப் பேசிக்கொண்டிருந்த போதுதான் சட்டென்று ஒரு யோசனை அவருக்குத் தோன்றியது.

'ஏன் அழகரசனை ஊருக்குக் கூட்டிச் சென்று நிரந்தரமாக 'வைத்துக்' கொள்ளக்கூடாது?' தீய எண்ணங்கள் செயல்வடிவம் பெற எப்போதும் தாமதிப்பதில்லை. ராமதாஸின் யோசனையும் தாமத மின்றிச் செயல்வடிவானது. அன்றிரவு பெரம்பலூருக்குக் கிளம்பிய பஸ்ஸில் அருகருகே அழகரசன், ராமதாஸ்!


சில நாட்கள்வரை பிரச்சனையில்லாமல் ஓடிய இந்த 'இல்லற'த்தின் ரகசியம் மெல்ல ராமதாஸின் மனைவிக்குத் தெரியவந்தது. அதுவரை தனது உணர்வுகளுக்கு வெளியே திருட்டுத்தனமாக வடிகால் தேடியவர் தைரியமாக அழகரசனைத் தனது அந்தரங்கத் தேவைகளின் ஆதர்ஷ புருஷனாக்கினார். பகலிலும் இரவிலும் மாறி மாறிக் கணவனுக்கும் மனைவிக்கும் கள்ளக் காதலனாய், உலகில் யாருக்கும் கிடைக்காத ஒரு அந்தஸ்து அழகரசனுக்குக் கிடைத்தது. 'கெட்டிக்காரனின் பொய்யும் புரட்டும் எட்டு நாளைக்கு' என்பது போல் கணவனின் கள்ளத் தொடர்பு மனைவிக்கும் மனைவியின், கள்ளத்தொடர்பு கணவனுக்கும் தெரிய வந்ததே ஒரு சுவாரஸ்யமான சம்பவம்.

ஒருநாள் வேலை விஷயமாக வெளியே போன ராமதாஸ் சொல்லியிருந்த நேரத்துக்கும் முன்னரே வீடு திரும்பினார். அப்போது தனது 'காதலன்' தன் மனைவியுடன் சல்லாபமான நிலையில் இருப்பதைக் கண்டார். இயல்பான மனிதன் உடனே அரிவாளைத் தூக்கி இருப்பான். ஆனால் விதிவிலக்கான ராமதாசுக்குக் கோபம் வரவில்லை. மெதுவாக அவர்கள் அருகே சென்றவர், அழகரசனுடன் தானும் உறவு கொண்டார்.

இந்த வித்தியாசமான முறை அவருக்கும் பிடித்துப் போய்விட, அன்றிலிருந்து இந்த உறவு அங்கீகரிக்கப்பட்ட உறவாக மாறிவிட்டது.




தினந்தோறும் செக்ஸின் ஆரம்பம் வசந்தாவுடனும் முடிவு ராமதாஸுடனும் என அழகரசன் ஒரு வித்தியாசமான 'குடும்ப' வாழ்க்கையைக் கடைப்பிடித்தான். தனது சேமிப்பாக வைத்திருந்த இருபதாயிரம் ரூபாயையும் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன் ராமதாஸிடமே கொடுத்து வைத்தான். முறையற்ற இத்தகைய உறவுகளில் எங்கேனும் சறுக்கல் நிகழ வேண்டுமல்லவா?



இவர்களது 'இனிய இல்லற'த்தின் சறுக்கலாக மாறி இவர்களை அம்பலப்படுத்தியது இந்தப் பண விவகாரம்தான்.

டிசம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் ஒருநாள் 'தனது சொந்த தேவைகளுக்காகப் பணம் தேவை' என்று கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டான் அழகப்பன். "என் மனைவியை இத்தனை நாள் இலவசமாக அனுபவித்துவிட்டு கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேற்கிறாயா?" என்று எத்தாளமாய்க் கேட்டு, பணத்தைத் தரமறுத்துவிட்டார். இதைக் கேட்டுக் கோபப்படாமல் அமைதியானான் அழகரசன். ஆனால் அது புயலுக்கு முந்தைய அமைதி என்பதை அப்போது ராமதாஸ் அறியவில்லை.

ராமதாஸின் மனைவி வசந்தாவுடன் சேர்ந்து கொலைத் திட்டத்தைத் தீட்டினான் அழகரசன். தனக்குப் 'பிரயோஜனமில்லாத' கணவனைக் கொன்றுவிட்டு ஆசைக்காதலன் அழகரசனுடன் உல்லாச வாழ்க்கை வாழப் போகிறோம் என்ற எண்ணமே வசந்தாவின் மூளைக்குள் பட்டாம்பூச்சிகளைப் பறக்க வைத்தது. இருவரும் சேர்ந்து தீட்டிய சதித் திட்டத்தின்படி ராமதாஸின் தலையில் பெரிய கல்லைத் தூக்கிப் போட்டுக் கொன்று உடலைத் தூக்கிக் கிணற்றில் வீசினர்.

ஜனவரி இரண்டாம் தேதி விடியற்காலை நான்கு மணிக்கு நடந்த இந்தக் கொலையை மோப்பம் பிடித்த போலீசார், அழகரசனைப் பிடிக்குள் கொண்டுவந்து விசாரித்தனர். அப்போதுதான் அழகரசன் மேற்படி 'அந்தரங்க' உறவைக் கதையாகக் கூறினான். இதைக் கேட்டு போலீசாரே முகம் சுளித்தனர்.

"ராமதாஸ் ஒரு ஹோமோசெக்ஸுவல். ஒரு கட்டத்துக்கு மேல் அழகரசனால் இந்த உறவு முடியாமல் போக, கொடுத்த பணத்தை வாங்கிக்கிட்டு விலகிப் போயிடலாம்னு நினைச்சிருக்கான். பணத்தையும் தராமல், அவனையும் விடாமல் தொந்தரவு செய்யவே, ராமதாஸைக் கொலை செய்கிற முடிவுக்கு அழகரசன் வந்திருக்கான். இந்த கேஸில் அழகரசனைக் கொலையாளியாகவும், கைக்குழந்தையோடிருக்கும் ராமதாஸின் மனைவி வசந்தாவைச் சாட்சியாகவும் போட்டு கேஸை நடத்தப்போறோம். இயற்கைக்கு முரணான உறவு எதில் முடியுமென்பதற்கு இந்த கேஸ் ஒரு உதாரணம்" என்றனர் பொலிஸார்.

"இப்ப எனக்க 21 வயது. பதினாலு பயசுல கல்யாணம் ஆச்சு. என் தாய்மாமன் (அம்மாவின் தம்பி)ராமதாஸையே எங்கம்மா எனக்குக் கல்யாணம் பண்ணி வச்சாங்க. அவர எனக்குப் பிடிக்கல. ஆனால், அவர் கிட்ட சொத்து இருக்குங்கறதாலயும், தாய்மாமன்ங்கிறதாலயும் கட்டாயப்படுத்திக் கல்யாணம் பண்ணிவச்சாங்க. அப்ப அவருக்கு வயசு 29. கல்யாணம் ஆன இத்தன வருஷத்துல ஒரு நாள்கூட அவர் எனக்குப் புருஷனா எந்த 'சுகத்தையும்' குடுத்ததில்ல. இந்தக் குழந்த ராஜேஷ்கூட (கையிலிருக்கம் பதின்மூன்று மாத ஆண்குழந்தையைக் காட்டுகிறார்) அழகரசனுக்குப் பிறந்ததுதான். அழகரசன் என் புருஷனைக் கொன்ன பிறகு அவரோட சேர்ந்து எங்கயாவது போய் நிம்மதியா, சந்தோஷமா வாழலாம்னு நினைச்சேனே தவிர, நான் என் புருஷனைக் கொல்லலை... கொல்லலை... கொல்லலை..." என்று கதறியபடியே முகத்தை முடிக்கொள்கிறார் ராமதாஸின் மனைவி வசந்தா.

ராமதாஸின் வீடிருக்கும் எசனையில் அக்கம்பக்கத்தில் விசாரித்த போது "அவுங்க ஒட்ட ஆளுங்கன்றதால நாங்க அவுங்கள்ட்ட எந்தப் பேச்சுவார்த்தையும் வச்சிக்கிறதில்ல. ரெண்டு வருசத்துக்கு முன்னாடி அந்தக் கவுண்டர் பையன் அழகரசனைக் கூட்டிக்கிட்டு வந்து வீட்ல தங்கவச்சிக்கிட்டாரு. அவுங்க சொந்தக்காரங்கன்னு நாங்க நெனச்சோம். ஆனால் இப்பத்தான் தெரியுது. அவுங்க இப்படிப்பட்ட ஒரு கருமம் புடிச்ச வாழ்க்கை வாழ்ந்திருக்காங்கன்னு" என்று முகம் சுழிக்கிறார்கள் அயலவர்கள்.

ஷாலு

# மனித உருவத்தின் போட்டோ பிரதி

கடிதம் ஒன்றை போட்டோ பிரதி எடுப்பது போல மனிதனையும் நகல் எடுத்து ஒரே மாதிரியான எத்தனை மனிதர்களை வேண்டுமானாலும் உருவாக்கிக் கொள்ளலாம். 'இந்தச் சாதனை மனிதகுல வரலாற்றில் ஒரு மாபெரும் பாய்ச்சல், என்கிறார்கள் விஞ்ஞானிகள். ஆனால், அதற்கு மதத் தலைவர்களும், சமூகத் தலைவர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

## குளோனிங் என்பது என்ன?

நாம் எழுதும் கடிதத்திற்கு இன்னொரு பிரதி வேண்டும் என்றால் என்ன செய்கிறோம்? கார்பன் பேப்பர் வைத்து எழுதுகிறோம். அப்பொழுது நமக்கு இன்னொரு நகல் கிடைக்கிறது. அல்லது எழுதிய கடிதத்தை 'ஜெராக்ஸ்' செய்தால்எத்தனை நகல்கள் வேண்டுமானாலும் கிடைக்கும், இல்லையா? 'குளோனிங்' என்பது இதுதான். விலங்குகளையும், மனிதர்களையும் இவ்வாறு 'நகலாக்கும்' (Cloning) செய்து கொள்ள முடியும் என்பதுதான் இதன் அடிப்படை.



மனித குளோனிங்.

உலகின் புருவங்களை உயர்த்திய, 'நறநறப்பு'களை உண்டாக்கிய டாலி என்கிற ஆட்டுக்குட்டியை உருவாக்கிய ஃகாட்லாந்து நாட்டு விஞ்ஞானி இயான் வில்மட் 'குளோனிங் தொழில் நுட்பம் மூலம் மனிதர்களை உருவாக்க விரும்பினால் நிச்சயம் செய்து காட்ட முடியும்" என்று பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் அப்போது அறிவித்தார்.

அன்று அவர் சொன்னதற்கு இன்று விஞ்ஞானிகள் 'பிள்ளையார் சுழி' போட்டு விட்டார்கள் 'ஆதார செல்கள்' (Stem Cells) ஆராய்ச்சியில் இது ஒரு மைல்கல் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இதன் பின்விளைவுகளை யூகித்துப் பலநாடுகள் மனிதனை குளோனிங் செய்வதற்குத் தடை விதித்துள்ளன. இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, கலிஃபோர்னியா ஆகிய நாடுகள் 'இதன்மூலம் மனித குலத்திற்கு நன்மைகள் உண்டு என்றாலும் தீமைகள் அதைவிடவும் அதிகம்' என்று கூறி குளோனிங் ஆராய்ச்சியின் கதவு களை முடச் சொல்லி உத்தரவிட் டுள்ளன.

மனித குளோனிங்கிற்கு எதிராக சமயத் தலைவர்களும் சமூகத் தலைவர்களும் கச்சை கட்டிக் கொண்டு களத்தில் இறங்கினாலும் 'இந்த முயற்சியைக் கைவிடுவதாக இல்லை' என்று இந்த ஆய்வை நடத்திய 'அட்வான்ஃட் செல் டெக்னாலஜி இன்க்' (ACT) அறிவித்துள்ளது.

குளோனிங்கால் நூற்றுக்கணக்கில் ஐன்ஸ்டீன்களும் மகாத்மா காந்திகளும் உருவானால் மகிழ்ச்சிதான். ஆனால் நூற்றுக்கணக்கான பின்லேடன்களையும் உருவாக்க முடியும் என்பதால் உலகம் முழுவதும் எதிர்ப்பு அலை கரை புரள்கிறது.

## மனித குளோனிங் எப்படி?

1. மனித உடலில் எங்கிருந்தாவது ஒரு செல்லை எடுத்துக் கொள்ள வேண்டும். பின்பு அதன் உட்கருவை அதிலிருந்து பிரித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

2. ஒரு பெண்ணின் சினை முட்டையில் இருக்கும் உட்கருவை நீக்கிவிட்டு அங்க முதலில் சொன்ன செல்லின் உட்கருவை வைத்துவிட் வேண்டும்.

3. பின்பு இந்த சினைமுட்டையை ஒரு வாடகைத் தாயின் கருப்பையில் வைக்கவேண்டும்.

4. வழக்கம்போல் ஒன்பதுமாதங்கள் வளர்ந்து குழந்தை உருவாகி விடும். இப்படி எத்தனை குழந்தைகளை வேண்டுமானாலும் உருவாக்கிக் கொள்ள முடியும்.

இப்படி பிறந்த குழந்தை எந்த மனிதரின் (ஆணாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை, பெண்ணாகவும் இருக்கலாம்) உடல் செல்லியிருந்து உருவானதோ அந்த மனிதனையே உரித்து வைத்திருக்கம். இம்மியும் பிசகாமல் ஒரே அச்சில் வார்த்த மாதிரி இருக்கும்.

## குளோனிங் நன்மைகள்

"குளோனிங் செய்து மனிதனை நகல் செய்யும் ஆராய்ச்சி உள்ளுறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சையில் எல்லையில்லாத நன்மைகளைச் செய்ய வல்லது" என்று கிசிஜி ஆராய்ச்சி நிறுவனத்தின் துணைத் தலைவரான விஞ்ஞானி ராபர்ட் பி.லான்சா கூறுகிறார். "நாங்கள் ஒன்றும் ஒரே மாதிரி பல மனிதர்களை உருவாக்கி உலகில் உலவவிடப் போவதில்லை. நீரிழிவு மனித அவயவங்களைச் செயலிழக்க வைக்கும் பார்க்கின்சன்ஸ் நோய், பல்வேறு வகையான புற்று நோய்கள், ஆட்கொல்லி நோயான எய்ட்ஸ், முடக்குவாதம் போன்ற நோய்களிடமிருந்து மனிதகுலத்தைக் காப்பாற்றும் முயற்சியே களோனிங்" என்று விளக்கம் அளித்திருக்கிறார் அவர்.

வயதானால் மனித உடலில் செல்கள் அழியும். குளோனிங் முறை மூலம் செல்களைப் புதுப்பித்து முதுமையை விரட்டலாம் என்றும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். "என்றும் பதினாறாக 'மார்கண்டேயன்' போல் இளமையுடன் இனிதர்களை வைத்திருக்கச் செய்யும் இந்த ஆராய்ச்சி மருத்துவ உலகில் புதிய சகாப்தத்தை உருவாக்கியுள்ளது. இதற்குக் காரணமான குளோனிங்கை ரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்பதை விட்டுவிட்டு 'குய்யோ, முறையோ' என்று கூக்குரல் இடுவது ஏன்?" என்று கேட்கிறார்கள் விஞ்ஞானிகள்.

மனித குளோனிங் தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் வெளிநாட்டுச் செய்தித்தாள்களின் முதல் பக்கத்திலேயே இடம்பிடித்து வரும் இந்த நிலையில் நம் முன் எழுகிற கேள்வி 'இந்த விஞ்ஞான சாதனையை வரவேற்பதா? அல்லது முகத்தைத் திருப்பிக் கொண்டுவிடுவதா? என்பதுதான்.

## விடை தேடும் கேள்விகள்:

தன்னைப் போல ஒரு குளோனை உருவாக்கி தன்னுடைய பழுதுபட்ட உடல்பாகங்களுக்குப் பதிலாக அதன் உறுப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது இந்தக் கண்டுபிடிப்பின் உச்சக்கட்ட சாதனை. அத்தோடு ஆதார செல்களைப் பயன்படுத்தி தனித்தனியே மனித உறுப்புகளை வளர்த்து உருவாக்கி விடலாம். உதாரணத்திற்கு இதய நோயாளி ஒருவருக்கு மாற்று இதயம் தேவைப்பட்டால் வேறெங்கும் தேடிப்போக வேண்டாம். குளோன் இதயத்தைப் பெருத்திக் கொண்டு விடலாம். கத்திரிக்காய் மாதிரி... மனித உறுப்புக்கள் இப்படி மலிந்து போவது எதில் கொண்டு போய் விடும்?

மாற்று உறுப்புகளைப் பொருத்துவதற்காக மட்டும்தான் என்றில்லை, பல நோய்களுக்கு எதிரான சோதனைகளை நடத்திப் பார்ப்பதற்கு ஆய்வக மாதிரிகளாகவும் களோனிங் நகலைப் பயன்படுத்த முடியும். இதன்மூலம் மருந்துகள் இல்லாத பல வியாதிகளுக்குத் தீர்வு காணமுடியும் என்பது உண்மைதான் என்றாலும் மனிதனை இவ்வாறு 'சோதனை எலி'யாக ஆக்குவது சரிதானா? உங்கள் உடலுக்குத் தேவையான உதிரிபாகங்களை இன்னொரு கருவினை அழித்து எடுத்துக் கொள்ளலாமா? என்றெல்லாம் மதவாதிகள் கேள்விகளை எழுப்புகிறார்கள். ஆனால், "கரு என்பது உயிருணர்வு இல்லாத ஒரு வளரும் செல்களின் தொகுப்பே. பல மாதங்கள் கழித்துத்தான் அது 'மனிதன்' ஆகிறது என்கிறார் டாலி என்ற முதலாவது குளோனிங் ஆட்டை படைத்த விஞ்ஞானி வில்மட். ஒரு டாலியை உருவாக்க 276 முறை அவர் சோதனை மேற்கொண்டர். மனித குளோனிங்கின் போது இது போல் ஏற்படும் 'குறைப்பிரசவங்கள்' கொலைப் பட்டியலில் தானே இடம் பெறும்!

குழந்தை பெறுவதற்கு ஆண்கள் தேவையில்லை என்று பெண்கள் முடிவெடுத்துவிட்டால் ஆண் இனமே அழிந்துவிடாதா? ஓரினச் சேர்க்கையில் விருப்பம் கொண்ட பெண்கள் பெருக மாட்டார்களா? இயற்கையின் சமநிலை (Balance of nature) இதனால் பாதிக்கப்படாதா? ■

திரையுலக மறுபக்கம் 221

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# நடனப்புயல் நடிகரின் சில்மிஷங்கள்

'மனதைத் திருடிய படத்துக்காக நடனப்புயலுக்கு ஜோடி தேடித்திரிந்த தயாரிப்பாளரினதும் இயக்குநரினதும் கண்களில் பட்டவர்தான் மந்திரத்தின் பெயரைக் கொண்ட 'கா' நாயகி. முதல் நாள் படப்பிடிப்பே ஊட்டியில் இடம்பெற்றது. கிளாமர் காட்சிகள் சில எடுக்கவேண்டிய நிலையில் எப்படிக் கேட்பது என்று தயங்கித் தயங்கி இயக்குநர் நிலைமையை விளக்க, சில நிமிடங்களிலேயே தனது மேடு பள்ளங்களைக் பளிரெனக் காட்டியபடி சிலிரெனச் சிரித்துக்கொண்டு வந்தார் நாயகி.

பிறகென்ன ஏராளமான காட்சிகளில் தாராளமாகவே நடித்துத் தள்ளி விட்டார். நாடி நரம்புகள் எல்லாம் விறைத்து நின்ற இயக்குநரின் அனைத்துத் தேவைகளையும் ஊட்டிக் குளிரையும் பொருட்படுத்தாது திருப்திகரமாகச் செய்துகொண்டிருந்த அதே வேளை, நடனப்புயலின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவும் நடந்துகொண்டதால் இப்படம் வெளிவர முன்னரே நடன நாயகனின் ஏனைய சில படங்களிலும் புக் செய்யப்பட்டார். அது மாத்திரமன்றி நாயகன் தன்னோடு அந்நியோன்யமாக இருக்கும் நடிகைகளுக்காக புக் பண்ணும் கன்னிமராவிலும் ரூம் புக் பண்ணி இரவு பகல் பாராது நடிகைக்கு டூயட் பாடல்களுக்கான நடனங்களைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். நடிகையும் பீல்டுக்குப் புதிது என்பதால் நடனத்தில் உள்ள நெளிவு சுழிவுகளை எல்லாம் சளைக்காது நடிகருடன் ஒத்துழைத்துக் கற்றுக்கொண்டார்.

இந்த நட்பில் யார் கண்பட்டதோ அல்லது நாயகனுக்கு நடனம் சொல்லிக்கொடுத்து அலுத்துவிட்டதோ? தெரியவில்லை. கடைசிக்கட்ட படப்பிடிப்பு பாண்டிச்சேரியில் நடைபெற்றபோது நடனம் சரியாகப் பண்ணவில்லை என்று படப்பிடிப்புக் குழுவினர் முன்னிலையிலேயே கன்னாபின்னா என்று திட்டித் தீர்த்துவிட்டார். இதனால் ஆத்திரமடைந்த நடிகை, நடனப்புயலுக்கு வழங்கிவந்த ஒத்துழைப்புக்களை எல்லாம் வாபஸ் பெற்றதோடு கடைசி நாளன்று அவருக்குச் சொல்லாமலேயே சென்னை திரும்பிவிட்டார். திரும்பியவர் சும்மா இருந்துவிடவில்லை. இவரின் இன்னொரு படத்திற்காக வாங்கிய அட்வான்ஸையும் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

நடனப்புயல் இதற்கெல்லாம் அசந்துவிடுவாரா என்ன? அவர்தான் இந்த விடயத்தில் பழம் தின்று கொட்டைபோட்டவராச்சே. உடனே இன்னொரு ஹீரோயினைப் பிடித்துவிட்டார். அவரும் இதே பெயரைக்கொண்ட நாயகிதான். டான்ஸ் மாஸ்டர் ஒருவரின் இளைய மகள். அவரின் அக்கா தொலைக்காட்சித் தொடர்களில் கலக்கி வருகிறார். பார்ப்பதற்கு அக்காவைப்போல் இருந்தாலும் நடிகை கவர்ச்சி மற்றும் அந்த விசயங்களில் தாராளமயமாக்கல் கொள்கையை கடைப்பிடிக்கிறாராம்.

முதல்நாள் படப்பிடிப்பு நடைபெற்ற பொழுதே கூச்சமில்லாமல் நடனப் புயலுடன் ஆட்டம் போட்டவர் படப்பிடிப்பு இல்லாத நேரங்களிலும் உயிர், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்து நடனப்புயலுக்கு ஏற்றமுறையில் தியாகங்களைச் செய்து வருகிறாராம். அதனால்தான் என்னவோ இவர் சகலவிதமான நடனங்களிலும் தேர்ச்சி பெற்று வருவதாக நடிகையின் கடைக்கண் பார்வையைப் பெற்றுவரும் ஏனைய திரையுலகப் புள்ளிகள் நடிகையைப் பாராட்டுகின்றனர்.



சங்கவி

## வாய்ப்புக்காக அபிநயம் காட்டும் மோனல்

மோனலை வைத்துப் படமெடுத்தவர்கள் அவரைக் கண்டாலே தலைதெறிக்க ஓடுகிறார்கள்.

அவரோ "நேற்று நைட்தான் இப்படி நடிக்கக் கற்றுக்கிட்டேன் பார்க்கிறீர்களா?" என்று கேட்டபடி முகத்தை என்னென்னவோ எல்லாம் செய்கிறாராம். இதனைத் தாங்க முடியாத தயாரிப்பாளர்கள் சிலர் வாசலில் வாட்ச்மேனைப் போட்டு மோனல் வந்தால் சிக்னல் கொடு என்று சொல்லித் தப்பிக்கிறார்களாம். ஆனால் வாய்ப்புக் கேட்கிறேன் என்றபடி மோனல் காட்டும் அபிநயத் தொல்லைகளோ குறைந்தபாடில்லை.

## அடுத்த மலே

'ரோஜாக்கூட்டம் படத்தில் லோரன்கம்-மும்தாஜும் இணைந்து ஒரு பாட்டுக்கு டான்ஸ் ஆடியிருக்கிறார்கள். ஹீரோ ஆகியும் ஒரு பாட்டுக்கு டான்ஸ் ஆடுவதை கௌரவக் குறைச்சலாக லோரன்ஸ் நினைக்கவில்லையாம். அதுவும் மும்தாஜ் கூட டான்ஸ் என்றால் கேட்கணுமோ? "மல மல மலே..." பாட்டுக்கும் ஒரு படி "மேலா சுப்பம்மா... சுப்பம்மா...." என்ற இந்தப் பாடல் அமைந்திருக்கிறது. "அதனால் இந்த ஒரு பாட்டுக்கு மட்டும் டான்ஸ் ஆட ஒப்புக்கொண்டேன்"என்றார் மும்ஸ்....

## உதயமாகிறது இளம் இயக்குநர் சங்கம்

பாலச்சந்தரும் பாரதிராஜாவும் நவக்கிரகங்கள் போல் எதிர் எதிர்த் திசையைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பாலச்சந்தரின் பெப்சி அமைப்புக்கு தமிழ்ப் பெயர் மாற்ற வேண்டும் என பாரதிராஜாவின் தலைமையிலான இயக்குநர்கள் போராட்டங்கள் நடத்துகின்றனர். இவர்கள் நடத்திய கண்டனக் கூட்டத்தில் "பாலச்சந்தரைக் கொலை செய்வேன்" என செல்வமணி பேசியபோதுகூட பாரதிராஜா கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டார்.

இது இப்படியிருக்க இவர்கள் இருவரையும் கணக்கில் எடுக்காமல் புது இயக்குநர் சங்கமொன்று உருவாகிக் கொண்டு இருக்கிறது.

முழுக்க முழுக்க இளைஞர் பட்டாளத்தால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் புதிய சங்கத்தில் லிங்குசாமி, சரண் போன்ற இளம் இயக்குநர்கள் முன்நிற்கின்றார்கள். இவர்கள் எல்லோருமே ஒன்றாகச் சேர்ந்து திருட்டு வி.சி.டிக்கு எதிராக குரல்கொடுப்பதே நோக்கமாம். அம்மாவைச் சந்தித்து வி.சி.டி. திருடர்கள்மேல் குண்டர் தடுப்புச் சட்டத்தைப் பிரயோகியுங்கள் என்று கோரிக்கையும் வைக்கப்போகிறார்களாம். எப்படியோ பெரிசுகளால் செய்ய முடியாததை இவ் இளைய ரத்தங்கள் செய்துமுடித்தால் சரி.

## குரங்குச் சேட்டை பண்ணும் கமல்

உலக நாயகன் கமல் நடிக்கும் அடுத்த படம் 'நரன்' இப்படத்தில் கிட்டத்தட்ட மனிதக் குரங்குச் சேட்டைகளை அப்படியே தனது உடல் பாகங்கள் மூலம் வெளிப்படுத்தி நடிக்கவுள்ளார் புதுமைவிரும்பும் கமல். இதற்காக ஒரு குரங்கை வாங்கி வீட்டில் வைத்து கதாபாத்திரத்திற்கு ஏற்ப பயிற்சி எடுக்கப்போவதாக தனது நெருங்கிய சகாக்களிடம் சொல்லியுள்ளார்.



பிரபுதேவா-லைலா
படம்: அள்ளித்தந்த வானம்



## 2001 சினிமா ஒரு பார்வை

**வெளியான நேரடிப் படங்கள்:**

'அசத்தல்', 'அழகான நாட்கள்', 'அசோகவனம்', 'அள்ளித்தந்த வானம்', 'ஆனந்தம்', 'ஆளவந்தான்', 'ஆண்டான் அடிமை', 'ஈரநிலா', 'உள்ளம் கொள்ளை போகுதே', 'என் இனிய பொன் நிலாவே', 'என்புருஷன் குழந்தை மாதிரி', 'கலகலப்பு', 'கபடி கபடி', 'கடல்பூக்கள்', 'கண்ணுக்கு கண்ணாக', 'கண்ணா உன்னை தேடுகிறேன்', 'காசி', 'காமக்னி', 'காற்றுக்கென்ன வேலி', 'காதலுக்கு காணிக்கை', 'கிருஷ்ணா', 'குட்டி', 'குங்குமப்பொட்டு கவுண்டர்', 'கோட்டை மாரியம்மன்', 'சமுத்திரம்', 'சாக்லெட்', 'சித்திரம்', 'சிட்டிசன்', 'சிகாமணி ரமாமணி', 'சீறிவரும் காளை', 'சூப்பர் குடும்பம்', 'சொன்னால்தான் காதலா', 'டும் டும் டும்', 'தவசி', 'தாலி காத்த காளியம்மன்', 'தில்', 'தீனா', 'தீர்ப்புகள் மாற்றப்படலாம்', 'தோஸ்த்', 'நந்தா', 'நரசிம்மா', 'நட்சத்திர காதல்', 'நாகேஸ்வரி', 'நிலாக்காலம்', 'நினைக்காத நாளில்லை', 'நீலாம்பரி', 'நெருப்பு', 'பத்ரி', 'பாண்டவர் பூமி', 'பார்த்தாலே பரவசம்', 'பார்வை ஒன்றே போதுமே', 'பிரியாத வரம்வேண்டும்', 'பூலோகமாலும் பொஞ்சாதி', 'பூவே பெண் பூவே', 'பூவெல்லாம் உன் வாசம்', 'பெண்கள்', 'பொன்னான நேரம்', 'ப்ரண்ட்ஸ்', 'மஜ்னு', 'மனதைத் திருடிவிட்டாய்', 'மறுவிசாரணை', 'மனமே மயங்காதே', 'மாயன்', 'மின்னலே', 'மிட்டாமிராசு', 'மிடில் கிளாஸ் மாதவன்', 'ரிஷி', 'வல்லி', 'லவ்சேனல்', 'லவ் மெரேஜ்', 'லிட்டில்ஜான்', 'லூட்டி', 'வாஞ்சிநாதன்', 'வின்லதாதன் ராமமூர்த்தி', 'விண்ணுக்கும் மண்ணுக்கும்', 'வீட்டோட மாப்பிள்ளை', 'வேதம்', 'ஸ்ரீ ராஜராஜேஸ்வரி', 'ஸ்டார்', 'ஷாஜகான்', '12பி.

**2001ல் அறிமுகமான நடிகர்கள்**

ஷாம், சஸ்வர், பெண்ட்லி மிச்சம், ஷொடுக்கு பாண்டி,கருணாபூமிகா, மோனல், காயத்ரி ஜெயராம், ரீமாசென், அஞ்சலா, ஜெயாரே, விஜயலட்சுமிஷிதா,ரிங்கி கண்ணா, ரிச்சா பலோட், உமா, சிந்து, காவேரி, காவ்யா மாதவன், திவ்யாஸ்ரீ, ஸ்வேதா.

**இயக்குநர்கள்**

ஏ.ஆர்.முருகதாஸ், அழகப் பெருமாள், சரவண சுப்பையா, லிங்குசாமி, கௌதம், ரவி, குமரேசன், ராஜ்மருது, முரளி கிருஷ்ணா, ஸ்ரீதர்பிரசாத், எஸ்.தயாளன், ஏ.எல்.ராஜா, புருஷோத்தமன்

**மலையாளத்திலிருந்து தமிழுக்கு:-**
கமல், விளையன், சித்திக், ஷாஜி ...

**தெலுங்கில் அறிமுகமாகி தமிழுக்கு:-**
திருப்பதிசாமி (மறைவு) அருண்பி... தேஜா, உதய் சங்கர்

**தமிழ் சினிமாவின் இழப்பு**

நடிகர் திலகம் சிவாஜி கணே...

**திருமணம் செய்து கொண்டவர்கள்.**

வையாபுரி, கிங்காங், தேவயா... குமாரன்), மீரா(சுரேஷ்), டைரக்டர... அன்பழகன், பாடகர்கள்:- திப்பு, ... வெங்கட் பிரபு, ஹரிணி.

**அதிகப் படங்களில் நடித்த நடிகர்:-** ...
விஜயகாந்த் (4), பிரசாந்த் (4), பிரபு... நடிகை ரோஜா(8).

**காமெடி நடிகர்:** விவேக்(20).

இந்த ஆண்டின் சிறந்த நடிகர் ... யாரென்று தமிழ் சினிமா டொட்கொ... இதழ் வாக்கெடுப்பில் தேர்ந்தெடுக்... கள்.

## காதோடு ...

வாணலில் தந்த நாயகி ... இதுவெல்லாம் சகஜமப்பா ... போட்டுவிட்டார். அதனால் ... அவர்மேல்தான் தாகம் அதி... இறந்த சோகத்தையும் மூட... படத்துக்கு புக்பண்ணுங்கள ... எனவே நடிகையைத் தேடி... அதன் இருந்தால் அட்வான்ஸ... என்று நடிகை கூறிவிட்டார... அவட்டோர் ஆட்டிங்குக்கு ... கிறாராம் அந்தக் குண்டு ...

ஆக்ஷன் அரசா இயக்க... கொண்ட படத்தில் இவருக்கு ... நடிக்கிறார். நடிகையின் ... மொடல் அழகியை புக் செ... பித்த நாள் முதல் அவருக்... கடற்கரை மணலில் உருளு... யிருக்கிறார் ஆக்ஷன் கிங் ... கிளாமர் ஆட்டிஸ்ட் அல்ல ... டர் வேற. இங்கு எடுக்கிற ... கூறிவிட்டு நீங்களும் வேண்ட... என்று மும்பைக்கே பறந்து... கரெக்டரில் நடிக்க இருக்கு... நம்ம 'மல மல மலே' தான்...

சோடாப்புட்டிக் ... மனோ' இயக்குநர் இயக்கு... ண்டெழுத்துப் படத்தில் ம... நடிக்கிறார். ஒருவருக்கு ஜோ... கதாநாயகியும் இன்னாள் சி... படம் பாதி முடிந்த நிலையி... பதில் வேறுயாரையாவது ந... ஹீரோ அடம்பிடிக்கிறாராம... பிடிபட்ட செக்ஸ் டாக்டர் ... கிறதாம். இந்த ... மலையாள இ... வேண்டவே வே... அவங்க கலக்கும் ... படங்கள்தான் எ... அப்புறமென்ன இ... இப்படிப் புலம்புகி...

## புலம்ப வைக்...

'புதுமை மாறாத ... நுடன் 'தமிழன்' ப... கோடம்பாக்கத்துக்கு ... அழகி பிரியங்கா தயா... கொண்டு இருக்கிறா... இதுவரை எடுத்த ப... தயாரிப்பாளர் உமக அ... போய் விட்டாராம். ... பரவாயில்லை, ஏதா... வது பார்க்கக்கூடி... இதுகளெல்லாம் ... என்று புலம்பிக் ... றார். வேறு வ... னொரு அழ... இரண்டாவது ... சேர்க்கவிரு...

ம
தி
பாலா

# வில்லன் வாய்ப்பே வேண்டாம் சாமி

'சாம்ராட் அசோகா' படத்தில் வில்லத்தனமான வேடத்தில் அஜித் நடித்ததைப் பார்த்த தயாரிப்பாளர் ஒருவர் சல்மான்கான்-ஐஸ்வர்யாராயை வைத்துத் தயாரிக்கும் இந்திப் படமொன்றில் வில்லத்தனமான கரெக்டரில் நடிக்க அஜித்துக்கு அழைப்பு விடுத்தார். கேட்கும் சம்பளம் கொடுக்கிறேன் என்று அவர் கூறியும் நடிக்க முடியாது என்று மறுத்துவிட்டார் அஜித்.



சரத்குமார்-இயக்குநர் பவித்திரன்
படம்: புகழ்

## சினி விசிட்

## ...சொல்லுகிறோம்

...விசயத்தில் கொஞ்சம் கறார். சினிமாவில்
...ற விசயத்துக்குத்தான் நடிகை நடா
...களின் கடைக்கண் பார்வையெல்லாம்
...போன ஹீரோ ஒருவர் தனது தந்தை
...விட்டு. எப்படியாவது எனது அடுத்த
... கறாராகச் சொல்லிவிட்டாராம்.
... தயாரிப்பாளரிடம் வேறு தொந்தர
...ருப்பித் தந்துவிட்டு வந்துவிடுவேன்
...னிலும் 'வரட்டுக்கும் வரட்டுக்கும்
... வரட்டுக்கும்...' என்று மார் தட்டு

...ரிக்கும் 'திருப்பதியான்' பெயர்
...டியாக சவுந்தர்யமான நடிகை
... கரெக்டருக்காக, மும்பை
...தார்கள். படப்பிடிப்பு ஆரம்
...வரும் குளியல் காட்சிகளும்
...சிகளுமாக எடுத்துத் தள்ளி
...கிப்போன நடிகை நான
... நீங்கள் சொன்ன கரெக்
...வேறு. என்று கோபமாகக்
...ங்க படமும் வேண்டாம்
...ராம். தற்போது அந்தக்
...டிகை யார் தெரியுமா?

... போட்ட ஒல்லியான
...பா'வான இர
... ஜெயராமர் இரட்டை வேடத்தில்
...க நடிப்பவர், முன்னாள்
... நடிகையுமான ப்ரியமானவர்.
..."அந்த நடிகை வேண்டாம். அவருக்குப்
... வையுங்கள்" என்று மலையாள
... என்று விசாரித்ததில், சமீபத்தில்
...ரத்தில் நடிகையின் பெயரும் அடிபடு
...யம் விவகாரமானால் தன்னுடைய
...திக்கப்படும் என்பதால் தான்
...ம் என்கிறாராம். "இன்னைக்கு
...ங்கள் 'சில்பான்ஸ்'
... ஹீரோவுக்குத் தெரியாதா?
... வேண்டிக்கிடக்கு?"
... ஒரு உதவி டைரெக்டர்.

## மினி சினி

❀ நடிகர் சூரியாவின் கால்ஷீட்டுகளை அப்பா சிவகுமார்தான் பார்த்துக்கொள்ளுவார் என்று நினைப்பீர்கள். அதுதான் இல்லை. சூரியாவின் அம்மாதான் கதை கேட்கிறார். வீட்டிற்குப்போனால் முத்துமுத்தான கையெழுத்தில் கால்ஷீட் விவரங்களை எழுதி வைத்திருப்பதைப் பார்க்கலாம்.

❀ பிரியங்கா சொப்ராவும் விஜயும் இணைந்து சொந்தக் குரலில் 'தமிழன்' படத்துக்காக பாடப்போகிறார்கள். கிளுகிளுப்பான வார்த்தைகளால் பாட்டெழுதியிருப்பவர் கவிஞர் வாலி.

❀ அஜித், விஜய், பிரசாந்த், சூர்யா, விக்ரம் இப்படி முன்னணி இளம் ஹீரோக்களின் அடுத்த எந்தப் படத்திலும் ஜோதிகா இல்லை. ஜோதிகா சீசனுக்கு கபம் போட்டுவிட்டனர்.

❀ யுவன் சங்கர்ராஜா இசையமைக்கும் படங்களுக்கு பின்னணி இசையில் மேற்பார்வை செய்வதோடு சில ஆலோசனைகளை வழங்குவதையும் வழக்க மாக்கிக்கொண்டுள்ளார் இளையராஜா.

❀ சங்கவிக்குத் இப்போது தமிழில் அவ்வளவாகப் படங்கள் இல்லை. ஆனால் தெலுங்கில் கைநிறைய படங்கள் இருக்கின்றன. ஆகவே ஹைதராபாத்தில் சொந்த வீடு வாங்கி குடியேறிவிட்டார்.

❀ 'நந்தா' படத்தில் காமெடியனாக அறிமுகமான கருணாஸ், இப்போது அரை டஜன் படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். அது மட்டுமல்ல, படத்திற்கு 2 இலட்சம் சம்பளம் கேட்கிறார். அவருடைய தம்பி நாகாவும் அடுத்து நடிக்க வருகிறார்.

❀ பூர்ண சந்திரராவ் தயாரிப்பில் வின்சண்ட் செல்வா இயக்கத்தில் விஜய் நடிக்கும் 'யூத்' படத்தின் நாயகி யார் தெரியுமா? ஷாஹீன். இவர் 'சரதிலா' படத்தில் நாயகியாக நடித்தவர்தான்.

❀ 'ஏலேலோ' படத்துக்கு முன்னால் 'மிஸ்டர் பிளாட்போம்' என்னும் படத்தை இயக்கும் பார்த்திபன் அதில் நடிக்க சிம்ரனின் தங்கை ஜோதியை நாடினார். கதையைக் கேட்ட சிம்ரன் நான் நடிக்கிறேன் என்று சொன்னதோடு சம்பளத்தையும் குறைத்துக் கொண்டார்.



## ...கிறார் பிரியங்கா

...மை' என்ற விளம்பரத்
... தயாரிப்பாளர்களால்
...ழைத்து வரப்பட்ட உலக
...ளரை புலம்ப வைத்துக்

...தைப் போட்டுப்பார்த்த
...யைப் பார்த்து மிரண்டு
...ப்பு வராவிட்டாலும்
... ஒரு கோணத்திலா
...ாதிரி இல்லையே.
... உலக அழகிகள்
...ண்டு இருக்கி
...லாமல் இன்
... பெண்ணை
...யகியாகச்
...ரர்கள்.

...ராஜ்.

...த்.

...(ராஜ
... பி.சி.
...திரன்.

... (4),
... (8).

...கைகள்
...நிலைய
...ட்டவர்

**நடிகர்கள்**
அஜித் 21%, கமல் 20%, விஜய் 19%

**நடிகைகள்:-** சிம்ரன் 21%, ஜோதிகா 20%, தேவயானி 10%

**துணை பாத்திரம்:-** கரண் 16%

**கவர்ச்சி நடிகை:** மும்தாஜ் 16% (36 தான் பொருந்தும்)

**வில்லன் :** ரகுவரன் 20%

**நகைச்சுவை நடிகர்கள்:-**
விவேக் 65%
வடிவேலு 7%
கவுண்டமணி 10%

**பாடகர்:** எஸ்.பி.பி. 26%

**பாடகி:** அனுராதா ஸ்ரீராம் 26%

**இசை:** ஏ.ஆர்.ரகுமான் 54%

**இயக்குநர்:** மணிரத்னம் 26%

முகப்பில் | ரம்யா கிருஷ்ணன் | மீனா | நெப்போலியன்

## ரோஜாவின் வாய்க்கொழுப்பு

ரோஜா நடித்த படங்களில் 'கடவுள்' 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' தவிர மற்றப் படங்களில் எல்லாம் அவரை அஜால் குஜாலாகவே பயன்படுத்தினர்.

அப்படிப்பட்ட ரோஜா கமலோடு நடிக்கத் தூதுமேல் தூது விட்டார். ரஜினியோடு நடிச்சிட்டேன். கமலோடும் நடித்தால் அது என் பாக்கியம் என்று சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால் கமல் அவரைக் கண்டுகொள்ளவேயில்லை.

பெப்ஸி-படைப்பாளி பிரச்சனை வந்தபோது பெப்ஸியை ஆதரித்தார் கமல். இதனால் ஆர்.கே. செல்வமணி தலைமையில் ஒரு கும்பல் கிளம்பிப்போய் கமல் வீட்டில் பூங்கொத்து வைத்து அவமானப்படுத்தினார்கள். கமல் தனக்கு வாய்ப்புத் தராத கோபமும் தன் காதலனை கண்டுகொள்ளாத ஆத்திரமுமாய் கமலைச் சகட்டு மேனிக்கு விமர்சனம் பண்ணி வந்தார்.

தன் அழகு மூலம் பாலப்பட்ட இந்த சமுதாயத்தை வாழ வைத்த இந்த ரோஜா தமிழ் நாட்டுக்காரர் இளிச்ச வாயர்கள் என்பதை புரிந்து வைத்துக்கொண்டு இருக்கிறார்.



மும்தாஜ்
படம்: விவரமான ஆளு

## துயரின் மொழி

எதையும் எழுதாதே
வார்த்தைகள் வலுவிழந்துபோய்
வெகு நாட்களாகிவிட்டன!
***
மனதின் பொருமல்களையெல்லாம்
ஓர் ஓவியமாய் வரைந்தனுப்பு
முடிந்தவரை புரிந்து விட்டுப்
போகின்றேன்
முடியாதவை
உன் கனத்தின் அடையாளம்.
***
இன்னும் இருக்கின்றன!
கீற்றுகளினூடு நிலா கசிய
கை கோர்த்து நடந்த மணற்பரப்பு,
சிறு வெள்மணலை கூட துள்ளியெழா
கோரைக் களப்பாத்திர் பேரமைதி,
நீ வலித்த துடுப்பு,
நானெறிந்த வலை,
நமைச்சுமந்த தோணி,
சிக்கிப் பாய்ந்த
'கொடுவா' மீன் கிழித்த பீத்தல்.
***
அழு! வாய்விட்டழு!
துரத்தித் துரத்தி பந்தடித்த ஊரை
நினைத்தழு!
கையாலாகா உன் உறவுகளை
நினைத்தழு!
போத்தல் கழுத்தாய்
துயர் அடைக்கும் போதெல்லாம்
அழுது தீர்த்துவிடு!
இனி இறுகிப்போக எதுவுமில்லை
உன்னிடம்
இதயத்தைத் தவி!

மனோகவி - திருக்கோவில்.

## மனிதம் செத்து 2002 ஆயிற்று...

அவன்
தன்னை இறைகுமாரனென்றும்
தேவனின் பிள்ளையென்றும்
நினைத்ததாலேயே
சிலுவையில் அறையப்பட்டான்...!
***
மனிதர்
அவருக்கு முள்முடி
சூடியும்
வாரினால் அடித்தும்
எச்சில் துப்பியும்
நையாண்டி செய்தும்
மீட்பரை நன்றாகவே
மரியாதை செய்தனர்..!
***
ஆணிகள் கைகளில்
இரக்கமின்றி இறங்குகின்றது..
இரக்கமற்றவர் தம்
இறைகுமாரனை
சிலுவையில் அறைகின்றனர்...!
***
சுத்தியலின் அலறல்
கேட்கிறது..
மீட்பரின் பாதங்களில்
ஆணிகள் ஏறுகின்றன...!
எலும்புகள்
உடைபடுகின்றன..!
***
வலி...
தாங்க முடியாத வலி...
இதயம்
எலும்பு மச்சைகளினூடே
உடலெங்கும் பாய்கிறது..!
***
தம்முடைய
மக்களே சிலுவையில்
அறைவதால்
அவருக்கு
வலி தெரியவில்லை...!
***
சிலுவை நிறுத்தப்படுகிறது
மக்களின் மொத்த
பாவத்தையும் சேர்த்தே
சுமந்து
பரிதாபத்துக்குரியவர்களை
இட்சிக்கிறார் இறைகுமாரன்...!
***
வழிப்போக்கர் ஏசுகிறார்கள்
பிரதம பூசகர்கள் தூசிக்கிறார்கள்
திருடர்கள் பரிகசிக்கிறார்கள்..!
***
சிலுவை சுமந்த
இறைகுமாரன்
இறக்கப் போகிறார்...
பூமி எங்கும்
இருள் சூழ்ந்து விட்டது..!
***
இறக்கும் போதும்
இரக்கம் கொண்டு
இறைவா.. என்பொருட்டு
இவர்களை மன்னித்தருளும்..
இது
இறப்பல்ல...
இவர்களின்
இறுதி பாவங்களின்
இறுதி ஊர்வலம்
மன்னியும்.. என்று
உயிரை விட்ட
இறைகுமாரனே..!
இன்னும்...
இவர்கள் திருந்தவில்லை!
இங்கே...
இவர்கள்...
மீண்டும் மீண்டும்
நீ...
சிலுவை சுமக்கவே
விரும்புகின்றனர்...!
***
இறைவா
இனிமேலும்
இங்கு வந்து
பிறக்காதீர்..
ஏனெனில்
இங்கு..
மனிதம் செத்து
கி.பி.2002 ஆயிற்று.
***

சண்முகம் சிவகுமார்-
கொட்டகலை.

## தேன்கிண்ணம்

## மௌனக் காதல்

நீயும் நானும்
தினம் தினம் சந்திக்கின்றோம்
உடனே ஏன்
மௌனிக்கின்றோம்!?
எனக்குப் புரியவில்லை
உனக்குப் புரிகின்றதா?
***
மௌனமாய்-நீ
நிலம் பார்க்க
நாணத்தோடு வானம் பார்க்கிறேன்-
நான்
சோகமாய் எமைப் பார்க்கிறது
நம் காதல்!
***
சிறகடித்துக் கொண்டிருந்த மனம்
சிறைப்பட்டுக் கொண்டு
பதறுகின்றது பயத்தில்...
நீ பேச மாட்டாயா?
***
என்னால் முடியவில்லையடி...
இதயம் இடித்து
என்னை
பிடித்துத் தள்ளுகின்றதே!
உனக்குள்ளும் இப்படியா?
***
யாரோ சொன்னதாய் ஞாபகம்
ஆண்பிள்ளைச் சிங்கமென்று...
அன்று முறுக்கிய மீசையை
இன்று தடவிப் பார்க்கிறேன்
உண்மையா என்று!
***
நீ
நிலம் பார்த்தாவது
ஒரு வார்த்தை பேசு.
நான்
ஏந்திக் கொள்வேன்
***
நம் மௌனம்-இனி
வேண்டாம் நமக்கு!

எஸ்.பிரேம் ஆனந்த்-
அக்கரைப்பற்று.

## காதல் என்னும் தூறலில்

காதல் வந்து
புகுந்து கொண்டால்..!
இதயப்பை ரணமாகித்
துடி துடிக்கும்...!
***
காதல் செய்யும்
மௌனத்தால்..!
தினம் தினம்
நகங்களைத் தின்று
துப்பினேன்...!
***
காதலின் முகவரி தேடி...?
விழித்தபடி கனாக் கண்டு
விறைத்திருந்தேன்...!
***
தொற்றி விட்ட
காதலில் தோற்றுவிடக்
கூடா தென்று..!
என்னுள் தினமும்
படபடத்தேன்...!
***
உப்புக் குளமாய்
கண்கள் அழுது
இமைக்க மறந்தது..!
யார்..? கண்களைத்
துவட்டி விடுவார்.
தோகையே... பதில் கூறு...!
***
காட்டுத்தீயாய்
காதல் பரவித்துடித்தது...!
இன்னும் தூறாத மேகமாய்
தூரத்தில் ஏனடீ.. நீ...
***
உள்ளத்தில் வண்ணமாய்
பச்சை குத்தினேன் எவரும்
இச்சை
கொள்ளக்கூடாதென்று...!
***
ஹனுமனாய்.. நெஞ்சை
கிழித்திடுவேன் உன்
உதடுகள் சொன்னால் மட்டும்.
***
திருட நினைத்தேன்
சிக்கியது...! அவள்
கைக்குட்டை மாத்திரம்..!
சலவை செய்யவில்லை அதில்
பதிந்த முகம்
கலைந்து போகும் என்று..!
***
முள்மீது விழுந்த
வண்டாய் உதிரம்
சொட்'ற ஒழுகும்
வரை மலரே...!
உன் பூஜைக்காய்
தவமிருப்பேன்...!
***


எஸ்.ரதன்-மூதூர்.

## உனக்காக ஒரு அறை

ஏய் பெண்ணே...
நான் மழைக்குக் கூட
ஒதுங்கியதில்லை.
உன் மனதை விட்டு
எப்படி ஒதுங்கியிருப்பேன்.
அன்பே...
என் இதய வீட்டில்
ஒரே ஒரு அறைதான்
எஞ்சி இருந்தது.
அதையும் உனக்காக
ஒதுக்கி விட்டேன்.
பெண்ணே...
இதன் பின்னும்
என்னால் இன்னுமொரு அறை
கட்டிக் கொள்ள முடியாது.
அப்படி கட்டுவதானால்
அது என் இறுதிப் பயண
கல்லறையாகத்தான் இருக்கும்.

அலாவுடீன் ஏ.எல்.ஏ.பாபு-லவ்லேன் திருமலை.

## பேனா நண்பர்கள்



பெயர்: செ. நவநீதன்,
வயது: 19
முகவரி:
கல்குடா வீதி,
பேத்தாழை.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: எஸ். ராஜேஷ்,
வயது: 23
முகவரி:
Al Jeraid Est.
P.O.Box-228
AL-Jubail 31951.
K.S.A.
பொழுது போக்கு:
கிரிக்கெட்.



பெயர்: ஏ.எம்.ஜிப்ரி
வயது: 28
முகவரி:
252, ஆலிம் வீதி,
மாளிகைக்காடு-02,
காரைதீவு (கி.மா.)
பொழுது போக்கு:
வானொலி, பத்திரிகை.

## உன்னைக் கொஞ்சம் வாலிபம்

ஒவ்வொரு தடவையும்
நான்
தீக்குளிக்கின்றேன்
மௌனமாக
நீ என்னைக் கடந்து
செல்லும் போதெல்லாம்
***
நானும் உன்னைப்
பார்வையால்
விழுங்கிக் கொண்டு
விலகிச் செல்கின்றேன்
அறிமுகமில்லாத ஒருவனாய்.
***
நமது நகர்வின் நடுவில்
சிக்கிக்கொண்ட..
நம் இதயம்
மூச்சுத்திணறிக்கிடக்கிறது.
***
மனச்சாட்சியை மட்டும்
மௌனத்தால்
மறைத்துக்கொண்டு
முகங்களை ஏனோ!
கண்ணீரில்
புதைத்து விடுகிறோம்.
***
என் எதிரில்
நீ வரும்போதெல்லாம்
உணர்வுகள்
உயிர் குடிக்கிறது.
இதயமும் செத்துத்
துடிக்கிறது.
***
அன்பே! இனியும்
நாம் ஒன்றாக நடந்த
நம் உறவுப் பாதையில்
சேர்ந்து நடக்க
உன் பாதங்களுக்கும்
சொல்லிவை..

இறக்காமம்-
எம். நவாஸ் சௌபி.




## தன்னை வெல்வதே வெற்றி

இளைஞனே இப்படி புரட்சி செய்வதால் பயன் என்ன? உனக்கு முன்னால் பெரிய சுவர் இருப்பதை நீ பார்க்கவில்லையா? என்று கேட்டார் காவலர்களில் ஒருவர்.

சுவர் இருப்பது தெரிகிறது. ஆனால் அது முற்றிலும் பழுதடைந்து கிடக்கிறது. ஒரு முறைதட்டினால் போதும் அது கீழே விழுந்துவிடும் என்று பதிலளித்தான் மாணவன்.

அப்பொழுது அந்த மாணவனுக்கு வயது பதிமூன்று அந்த மாணவன் தான் லெனின். அந்த இளமையிலேயே அவருடைய உள்ளத்தில் புரட்சி மூலம் புதுமையான உலகை உருவாக்க முடியும் என்று நம்பினார்.

அவருடைய நம்பிக்கை வீண் போகவில்லை புதியதோர் உலகினை உண்டாக்கிக் காட்டினார். எப்படிப்பட்ட நிலைமையையும் சமாளிக்கும் சக்தி நம்மிடமே உள்ளது.

எப்பொழுதும் வாழ்க்கையில் நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். மனச்சோர்வுக்கும் வீண் பயத்திற்கும் இடம் கொடுத்து விடக்கூடாது.

கப்பல் முன்னேறிச் செல்லும்போது காற்று சாதகமாக இருந்தால் இன்னும் வேகமாகச் செல்கிறது. எதிர்காற்றாய் இருந்தால் வேகம் குறைந்து முன்னேறுவது கடினமாகிறது.

எதிர்காற்றாக இருக்கிறதே என்று கப்பல் சாதகமான காற்று வீசும் வரை ஓரிடத்தில் நின்று கொண்டிருப்பதில்லை.

சத்துள்ள பானம் நோயாளிக்குக் கொடுக்க வேண்டும் என்று ஒரு டாக்டர் கூறியதை ஜேம்ஸ் ஹார்லிக்ஸ் கேட்டார். உடனே செயலில் இறங்கினார்.

எப்படியும் சத்துள்ள பானத்தைக் கண்டு பிடித்து நோயாளியின் சோர்வைப் போக்கி புது தெம்பு கிடைக்குமாறு செய்ய வேண்டும் என்பதில் கவனமாக செயல்பட்டார்.

பலவிதமான உணவுப் பொருட்களை அரைப்பதும் காய்ச்சுவதுமாக இருந்தார் எதுவும் பாலில் கரைத்து குடிப்பதற்கு தயாரிக்க முடியவில்லை.

ஆனாலும் தன்னுடைய செயள் முறையை விட்டுவிடவில்லை. தொடர்ந்து ஆராய்ந்து கொண்டே இருந்தார். இறுதியில் சத்துள்ள பானத்தை கண்டுபிடித்தார்.

அந்த புதிய பானத்திற்குத் தன்னுடைய பெயரை வைத்தார். இன்று உலகம் முழுவதும் ஹார்லிக்ஸ் பவனி வருகிறது. தனி மனிதனுடைய கண்டுபிடிப்பு கோடிக் கணக்கான மக்களுக்குப் பயன்படுகிறது.

தன்மீது நம்பிக்கை வைத்து செயல்பட்டபடியினால் தான் அரிய பானத்தை உண்டாக்க முடிந்தது.

நம்மால் செய்ய முடியாதது என்று எதுவும் இல்லை. நம்முடைய நிலைக்கு தக்கவாறு முயன்றால் நிச்சயம் வெற்றி அடைய முடியும். வெற்றியை வெளியில் தேடி அலைய வேண்டியது இல்லை. வெற்றி கிடைக்கும் வரை ஓயமாட்டேன் என்று இரவு பகலாக நம்பிக்கையுடன் செயல்படவேண்டும் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்காகத் தான் வாழ்ந்து வருகிறோமே தவிர தோல்வி அடைவதற்கு அல்ல!

மேல்நோக்கி அடி எடுத்து வைக்கிறோம் என்றால் கீழே சிலவற்றை விட்டுச் செல்கிறோம். மற்றொருவனுக்காக வலிமை உள்ளவனாக இருக்க முடியாது. தனக்காகத்தான் வலிமை உள்ளவனாக இருக்கமுடியும்.

பிறருக்காக வெற்றி பெற முடியாது தனக்காகத்தான் வெற்றி பெற முடியும். மற்றொருவனை வென்றவன் காலம் வரும்பொழுது தோல்வி அடையலாம். ஆனால் தன்னை வென்றவன் ஒரு போதும் தோல்வி அடைய முடியாது.

தன்னையே நம்பி இருப்பது போன்று நிச்சயமானது வேறு ஒன்றும் இல்லை. தன்னை நம்பியவர்கள் தான் வாழ்க்கையில் வெற்றி பெற்று இருக்கிறார்கள் என்பதனை என்றும் நினைவில் வைக்க வேண்டும்.

## இந்தவாரம் உங்கள் பலன்

20.01.2002தொடங்கி 26.01.2002வரை

**மேடம்:**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்,) கருமங்களில் தடை, வீண் மனஸ்தாபம், செய்தொழில் பாதிப்பு உண்டு. உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புக்களால் தொல்லைகள் சேரும். மாணவர்கள் கல்வியில் கவனம் எடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 01.

**இடபம்:**
(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை,) குடும்ப நன்மை, நண்பர்கள் உதவி, பணக்கஷ்டம், மறைமுக எதிர்ப்புண்டு. உத்தியோகத்தில் வீண் சிரமங்கள் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் எடுக்கவும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த் இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

**மிதுனம்:**
(மிருக சீரிடத்து பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) கருமங்களில் வெற்றி, காரியானுகூலம் பொருள்வரவு, தொழிற் சிறப்புண்டு. உத்தியோகத்தில் எதிர்பார்த்த நன்மைகள் வந்தடையும். மாணவர்கள் கல்வியில் கூடிய முயற்சி எடுக்கவும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் அவதானமாக இருக்கவும்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

**கர்க்கடகம்:**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) பெரியோர் நன்மை, முயற்சிக்களில் வெற்றி, அந்நியர் உதவி, பொருள் வரவுண்டாகும். உத்தியோகத்தில் உயர்வுகளை தரும். மாணவர்கள் கல்வி சிறப்படைவர். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 05.

**சிங்கம்:**
(மகம்,பூரம்,உத்தரத்து முதற் கால்) பொருள் விரயம், மனக் கவலை, பிள்ளைகளின் சுகயீனம், செலவு மிகுதி உண்டு. உத்தியோகத்தில் பிரச்சனைகள் தோன்றும். மாணவர்களுக்கு கல்வியில் மந்தம் ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள், குறைந்த வருமானம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 02.

**கன்னி:**
(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை,) மனக்குறை நீங்கும், முயற்சிகளில் வெற்றியுண்டாகும். பணவரவு, தேகாரோக்கியம் சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் முன்னேற்றம் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 07.

### சோதிட மாமணி தில்லை

**துலாம்:**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்,) தொழில் கஷ்டங்கள் தீரும். பணவரவு சிறந்து விளங்கும். நண்பர்கள் உதவியுண்டு. உத்தியோகத்தில் வீண் சிரமங்கள் ஏற்படும். மாணவர்கள், கல்வியில் கூடிய கவனமெடுக்கவும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 04.

**விருட்சிகம்:**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை பெரியோர் நன்மை, தேகாரோக்கிய சிறப்பு, அன்னியர் சகவாசம், காரியங்களில் வீண் தடையுண்டு.உத்தியோகத்தில் மறைமுக எதிர் புண்டாகும். மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சி தடைப்படும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### கிரக நிலை

மகரம் - சூரியன், புதன், வெள்ளி.
மீனம் - செவ்வாய்.
இடபம் - சனி.
மிதுனம் - வியாழன், இராகு.
தனு - கேது.

**சந்திரன்: மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்**

**தனு:**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழிற் சிறப்பு, காரியானுகூலம், பொருள்வரவு வீண் குறை கேட்டல், பெரியோர் பகை ஏற்படும். உத்தியோகத்தில் கஷ்டங்கள் தோன்றும். உத்தியோகஸ்தர்கள் கவனமுடன் செயற்படவும். மாணவர்களுக்கு நன்று. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 06.

**மகரம்:**
(உத்திராடத்து முன்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை) பணவரவு, காரியானுகூலம் வெளியிட நன்மை, பெரியோர் அனுகூலம் ஏற்படும். உத்தியோகஸ்தர்கள், மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சியுண்டாகும். வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 07.

**கும்பம்:**
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழில் சிறப்பு, காரியங்களில் வெற்றி, பணவரவு உண்டாகும். உத்தியோகத்தில் வீண் சிரமங்கள் தோன்றும். மாணவர்கள் கல்வியில் கூடிய சிரத்தை எடுப்பது நல்லது. வியாபாரிகள் இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்:-03.

**மீனம்:**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி,) பெரியோர் அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி வெளியிடவாழ்க்கை, அன்னியர், சகவாசம், உத்தியோகத்தில் மேலதிகாரிகளுடன் வீண் பகை உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்:-05.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## பெண்கள் முகத்திற்குப் பவுடர் பூசும்போது...



பெண்கள் முகத்தில் பவுடர் பூசும் போது சில முக்கிய விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். முகத்திற்குப் பூசும் பவுடர் நல்ல தரமானதாக தோலுக்குத் தீங்கு விளைவிக்காததாக இருக்கவேண்டும். சில பவுடர்கள் தோலில் அரிப்பையும் அலர்ஜியையும் ஏற்படுத்துவதோடு, முகத்தில் பருக்களையும் உருவாக்கி நீங்காத வடுக்களையும் ஏற்படுத்திக் கோரப்படுத்தி விடும்.

பவுடரின் மணம் இதமாகவும் குளிர்ச்சியூட்டுவதாகவும் அதிக நெடியற்றதாகவும் இருக்க வேண்டும். உதட்டுச் சாயம் பூசுதல், கண்ணுக்கு மை தீட்டுதல், புருவத்தை ஒழுங்கு படுத்துதல், கிரீம் தடவுதல் போன்ற பிற முக ஒப்பனைகள் முடிந்த பிறகுதான் கடைசியாகப் பவுடர் பூசும் ஒப்பனையை வைத்துக் கொள்ள வேண்டும். பவுடர் பூச மிருதுவான மெல்லிய மடித்த துணியைப் பயன்படுத்தலாம். அல்லது காட்டன் மற்றும் உல்லனில் தயாரித்த பஃவைப் பயன்படுத்தலாம். அது சுத்தமாக இருக்க வேண்டும். அதைப்பவுடரில் லேசாகத் தோய்த்து முகத்தில் அழுத்தித் தேய்க்காமல் சிறிதாக ஒத்தி, சீராகப் பூச வேண்டும். முகத்தில் எல்லா இடத்திலும் பூச வேண்டும். கூடியவரை கண்ணிலும் உதட்டிலும் பவுடர் படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

பவுடர் பூசிய பிறகு கடைசியாக மெல்லிய துணியாலோ அல்லது இதற்கென உள்ள பிரஷ்களினாலோ முகத்தில் அதிகமாகத் திட்டுத் திட்டாகப் படிந்திருக்கும் பவுடரைத் துடைத்துச் சீர் செய்ய வேண்டும்.

கழுத்து, முக்கின் பக்கவாட்டு ஓரங்கள் காதுகளின் ஓரங்கள் ஆகியவற்றை முக்கியமாகக் கவனித்து, பவுடர் அதிகமாகத் தெரிந்தால் அவற்றை லேசாகத் துடைத்து எடுத்து விட வேண்டும்.

## வீட்டுக் குறிப்புக்கள்

★ மெழுகுவர்த்தி எரியும்போது சீக்கிரம் எரிந்து உருகிவிடும். அதை தடுக்க முதலில் மெழுகுவர்த்தியை சிறு கிண்ணம் ஒன்றினுள் விட்டு நிற்குமாறு செய்துவிட்டு எரிய விடுங்கள். பிறகு பாருங்கள். மெழுகுவர்த்தி உருகி வழியாமல் நீண்ட நேரம் எரியும்.

★ பால் கெட்டு திரைந்து போகும் போல இருந்தால் ஒரு துளிசோடா உப்பைப் பாலில் போட்டுக் காய்ச்சுங்கள். பால் திரைந்துபோகாது.

★ அரிசிமாவு, ரவா மாவு இவை இரண்டையும் சம அளவில் கலந்து ரவா தோசை தயார் செய்யும் பொழுது ஒரு டேபிள் ஸ்பூன் கடலை மாவையோ வறுத்து அரைத்த உளுத்தம் பருப்பு மாவையோ கலந்து தோசை வார்த்து பாருங்கள். தோசை மொறு மொறுவென்று தனிச் சுவையுடன் இருக்கும்.

★ நெய் ஜாடியில் நெய்யைவிட்டு, ஒரு சிறு வெல்லக் கட்டியைப் போட்டு மூடிவிடுங்கள். நெய் மூன்று மாதங்கள் வரை கெடாமல் இருக்கும்.


செல்வாஸின் 7

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் 🄲

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

தொழில்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 26-01-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


### இந்த வாரம் யாருக்கு சல்வார்?

**அரசாங்க கட்டப்பாட்டில் இல்லாத பகுதியைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

த. சசிகலா,
மெயின் வீதி, புதுக்குடியிருப்பு-05.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

"நீங்க ரெகுலரா குடிப்பீங்களா?"

"எப்பயாவது டென்ஷன் அதிகமா இருந்தா கொஞ்சம் குடிப்பேன்...!"

அலமாரியில் மேல்நாட்டு பாட்டில்கள் நிறைந்திருந்ததைப் பார்த்து, "கொஞ்சமான்னா எதுக்கு இத்தனை பாட்டில்-?" என்றாள் அனிதா.

"வேலைல டென்ஷன் அதிகம். நான் எடுக்கற ஒரு டிஸிஷன்ல கோடி ரூபா லாபம் வரும்... கோடி ரூபா நஷ்டம் வரும்- அதனால சில வேலைகளில் ரிலாக்ஸ் பண்றதுக்காக ஒரே ஒரு ஸ்மால் அடிச்சுட்டு, சௌராஸ்யா, குலாம் அலி காஸெட் எல்லாம் போட்டுக் கொஞ்சம் கேப்பேன். என்ன நீ, இத்தனை விசாரிக்க ஆரம்பிச்சுட்ட, இத்தனை சீக்கிரமா?"

"வேற என்ன பழக்கம்இருக்கு உங்க கிட்ட?"

"வேற என்னன்னா? ஆபீஸ்ல சிகரெட் பத்த வைப்பேன்... மேலாக. இன்ஹேல் பண்ண மாட்டேன். வீட்டில குடிச்சா அண்ணாச்சிக்கு பிடிக்காது. அது எதுவும் தீவிரமா பழக்கமில்லை..."

"நேரா என்னைப் பார்த்துச் சொல்லுங்க. வேற ஏதாவது...?"

"வேற ஏதாவதுன்னா?"

"என்னை நேராகப் பார்த்துச் சொல்லுங்க. கல்யாணத்துக்கு முன்னாடி பெண்கள் சகவாசம் இருந்திருக்கான்னு?"

அவன் முகம் சற்று இறுகியது. "இப்ப அது தெரியறதினால எப்படி நம்ம லைஃப் மாறப் போறது, சொல்லு?"

"இல்லை தெரிஞ்சு வெச்சுக்கலாம்னுதான்-"

"சொல்லிரட்டுமா-சொல்லிரட்டுமா?"

"சொல்லுங்க!"

"இல்லை..." என்றான் புன்னகையுடன் "எத்தனையோ வெளிநாட்டுக்குப் போறப்ப ஷோவெல்லாம் பார்த்திருக்கேன். ஃப்ளோர் ஷோ, ஸ்ட்ரிப்டீஸ் எல்லாம் போயிருக்கேன். லைவ் செக்ஸ் பாத்திருக்கேன். எல்லாம் பார்த்ததோட சரி. ஆனா, என்னைப் பொறுத்த வரைவயில் எல்லாம் சினிமாப்படம் பார்க்கற மாதிரிதான்! நண்பர்கள் கூட்டிட்டுப் போவாங்க. அதோட வெட்டிருவேன்... காரணம் என்ன தெரியுமா?" அவளை நேராகப்பார்த்துச் சொன்னான். "பயம்!"

அவன் சிகரெட் பற்ற வைத்தான்.

ஜன்னலைத் திறந்து, "வீட்டில சிகரெட் குடிக்க மாட்டேன்னு சொன்னீங்களே..?" என்றாள் அனிதா.

"அண்ணாச்சி கொடைக்கானல் போயிருக்காரு... அம்மாகூட...!" கையால் புகையை விரட்டிக்கொண்டு, கால் இன்ச்சுக்கு மேல் புகைக்காமல் அணைத்துவிட்டான்.

"அனிதா! நாம புதுசா வாழ்க்கையை துவங்கறதனால நமக்குள்ள எதுவும் பாசாங்கு வேண்டாம்... பொய் வேண்டாம்னுதான் இதெல்லாம் சொல்லிடறேன். அதை எடுத்துக்கறதுக்கு உண்டான பக்குவம் உனக்கு வேணும். நான் இருக்கறது பணம் பண்ற பிஸினஸ்ல... அதில் இருக்கிற முரண்பாடுகள், சிக்கல்கள் எல்லாத்துக்கும் விலையாத்தான் இந்தப் பழக்கங்கள்! ஆல்கஹால் இத்தனை வெச்சிருக்கேனே... எப்பவாவதுதான் எடுத்துப் பேன்... பயப்படாத, இது பழக்கமாய்டாது... என்ன சொல்ற?"

"எனக்கு இதெல்லாம் நெனச்சுப் பார்க்கக் கூட முடியாது. எங்க வீட்டுல ரேடியோல சினிமாப் பாட்டுக் கேட்டாலே திட்டுவாங்க..."

"அப்படி ஒண்ணும் உங்க வீட்டுல கல்யாணத்துக்கு அப்ஜெக்ட் பண்ணலையே!"

"எல்லாரையும் விலைக்கு வாங்கிட்டீங்க!"

"அப்படியெல்லாம் சொல்லாதே. உன் நல்லதுக்குத்தான் சம்மதிச்சிருக்காரு உங்கப்பா! அவருக்குத் தாராள மனசு, நல்ல மனசு!"

"கொஞ்ச நாள் நான் அம்மாவோட இருந்துட்டு வரேன்..."

"மறுபடி ஆரம்பிச்சுட்டியா நீ"

"இங்க ரொம்ப 'லோன்லி'யா இருக்கு."

"உன் ப்ரெண்ட் மதுவைக் கூட்டி வெச்சுக்க!"

"நான் போகணும்!"

"பாரு..." அவன் அருகில் வந்தான். "உனக்குப் பிடிவாதம்னா எனக்கும் பிடிவாதம் உண்டு. நீ இங்கதான் இருக்கணும். இதுதான் உன் வீடு இனிமே! ஒரு ஐடியா... உங்க அப்பா அம்மாவையும் கூப்பிடு. கொடைக்கானல்ல எங்க பங்களா இருக்குது... ஸாரி, நம்ம பங்களா...! ஒரு வாரம் போயிட்டு வாங்க! மேல்நாடு போறதுதான் போஸ்ட்போன் ஆயிருச்சே!" என்றான் வைரவன்.

"கேட்டுப் பார்க்கறேன். அவங்க வருவாங்களானு தெரியாது..."

"கேக்கற முறைல கேட்டா வருவாங்க..."

"எனக்கு கார் அனுப்புங்க,"

அவளை ஆயாசத்துடன் பார்த்தான்.

"கார் அனுப்ப வேண்டாம். நம்ம வீட்டில எத்தனை கார் இருக்கு தெரியுமா? மொத்தம் பதினெட்டு. அதுல எதை வேணா எடுத்துட்டுப் போலாம். போய்ட்டு சாயங்காலத்துக்குள்ள வந்துரு. நாம ஆரம்பிச்ச பாடத்தைத் தொடரவேண்டாமா?" என்றான் வைரவன்.

"அனிதாவுக்கு வெட்கமாகவும் அருவருப்பாகவும் இருந்தது.

"ஏப்பா... உங்களுக்கு வேற சப்ஜெட் கெடையாதா?"

"இருக்கு, ஹவாலா மார்க்கெட்!" என்று அவளை அணைத்து கழுத்தில் முத்தம் கொடுக்கும்போது கை விஷமம் செய்தது. அவளைப் பின்புறத்தில் தட்டி விட்டு அவன் புறப்பட்டபின், அனிதா அந்த அறையை விட்டு வெளியே வந்து தோட்டத்துக்குச் சென்றாள். பெயர் தெரியாத பறவைகளின் குரல்கள் கேட்டன. அவுட் ஹவுஸ் பக்கம் நடந்தாள். வேணி என்கிற பெண் துணி துவைத்துக் கொண்டிருந்தாள். கலர் கலராக புடவைகளும் ஸ்கர்ட்டுகளும் பரவியிருக்க, காய்ந்த துணிகளை இஸ்திரி போடுவதற்கு ஒருவன் காத்திருந்தான். அவனுடன் சிரித்துப் பேசிக்கொண்டிருந்த வேணி, அனிதாவைப் பார்த்ததும் பதற்றப்பட்டு, "அம்மா... நீங்க இங்க... இதுக்கெல்லாம்..."என்று திணறினாள்.

"வரக்கூடாதா?"

"இல்லீங்க... பெரிய ஐயா பார்த்தா கோவிப்பாரு"

"இது என்ன தர்மசங்கடம்? நான் வீட்டுப் பின்பக்கம் வந்தா பெரியய்யா எதுக்குக் கோவிக்கணும்?"

"பெரியய்யா கொடைக்கானல் போயாச்சு..." என்றான் இஸ்திரி போடுபவன்.

"அம்மா! என் பேரு துரைங்க... நேத்திக்கு அநியாயமா நாயைக் கொன்னுட்டாருங்க. நல்ல விசுவாசமுள்ள நாய்ங்க!"

"நான் எதும் சொல்லலைப்பா... எங்கம்மா காலைக் கடிச்சுதுன்னு சொன்னேன்... அவ்வளவுதான்..."

"என்னமோ போதாத காலம்... செயினை அவிழ்த்து விட்டிருந்தாங்க. பெரியம்மாவைப் பார்த்ததும் லேசா தாங்க, வெறுமனே கவ்விருச்சுங்க..."

"கவ்வலை... நல்லா பல்லு பட்டுருச்சு" என்றாள் வேணி, அனிதாவின் கட்சியை எடுத்துக் கொண்டு.

"வேணி! உனக்கு எத்தனை சம்பளம்?"

"சம்பளம்னு முந்நூறு ரூபாய் தராங்க.






**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

ஆனா, வீடு கொடுத்திருக்காங்க. ஸ்கூலுக்குப் போக உடுப்புங்க எல்லாம் நம்ம வீட்டுதுங்க..."

"சின்ன புள்ளையிலிருந்து இது இங்கதான் இருக்குது!" துரை சொன்னான்.

"என்ன படிக்கிறே?"- அனிதா கேட்க,

"எட்டு... ரெண்டு முறை ஃபெயிலாயிட்டேங்க!" என்றாள் வேணி.

"எங்கங்க... சினிமா பாட்டு உசிருங்க. படிப்பு எங்க வரும்?"

"வேணி, உன் பாடப் புஸ்தகத்தையெல்லாம் எடுத்துக்கிட்டுவா!"

"எப்பங்க?" என்றாள், அச்சத்துடன் ஆச்சரியத்துடன்!

"மத்தியானம்! இந்த வீட்டுல எனக்கு போர் அடிச்சுப் போச்சு..."

"அபி அம்மாவேட வெளையாடுங்க... சிதாராவைக் கூப்பிட்டுக்கங்க!"

"சிதாரா யாரு?"

"வைரவன் ஐயாவோட அக்கா மகளுங்க!"

"அவங்க இங்க இருக்காங்களா?"


"ஆமா... ஆனா, கல்யாணத்துக்கு வரலை. அவங்களுக்குத்தான்..." என்று ஆரம்பித்த வேணி, பாதியில் நிறுத்திக் கொண்டாள்.

[அனிதா வருவாள்...]

## பாப்பா முரசு சிறுகதை

# தன்னம்பிக்கை!

முன்னொரு காலத்தில் மாயபுரி என்ற ஊரில் வணிகன் ஒருவன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள், பக்கத்து கிராமத்திற்கு செல்ல வேண்டும் எனபதற்காக ஆற்றங்கரையை அடைந்தான்.



அங்கிருந்த படகுக்காரர்கள் அனைவரும் மறுகரைக்குச் சென்று விட்டனர். எனவே, எப்படியும் அந்த ஊரை அடைய வேண்டும் என்பதால் என்னசெய்வது என்று தெரியாமல் தவித்தான்.

ஆற்றங்கரை ஓரத்தில் ஒரு முனிவர் அமர்ந்திருந்தார். அவரிடம் சென்று, "சுவாமி! நான் அக்கரையை அடைய வழி சொல்லுங்கள்; எனக்கு நீச்சல் தெரியும் இருந்தாலும் இவ்வளவு பெரிய ஆற்றை எப்படி நீந்திச் செல்வது?" என்று சொன்னான்.

முனிவர் அவன் கையில் ஒரு சின்ன துணி முட்டையை கொடுத்தார். "இந்த முட்டையை பிரிக்காமல் கையில் பிடித்துக்கொண்டு நீந்திச்செல். நிச்சயமாக மறு கரையை அடைந்தவிடுவாய். உனக்கு சக்தியை தரும் விசயம் இந்த முட்டையில் இருக்கிறது; களைப்பே தெரியாது," என்றார்.


உற்சாகத்துடன் அந்த சிறு முட்டையை கையில் பிடித்துக் கொண்டு நீந்தினான் வணிகன். முக்கால்வாசி ஆற்றை சுலபமாக நீந்தி கடந்துவிட்டான். இன்னும் கால்வாசி தூரம் தான் இருந்தது. அப்போது 'இந்த முட்டையில் என்னதான் இருக்கிறது?' என்று நினைத்துப் பிரித்துப் பார்த்தான்.


அதில் ஒரு சின்ன கல் தான் இருந்தது. அதை கண்டதும் அதிர்ச்சி அடைந்தான் வணிகன்.

'ஐயோ இந்த முட்டையில் ஏதோ விசேட சக்தி இருப்பதாக நினைத்தேனே... வெறும் கல்லை வைத்து கொடுத்திரக்கிறாரே... எஞ்சியுள்ள தூரத்தை எப்படி நீந்திக் கடப்பேன்' என்று நினைத்தான்.

மறுநிமிடம் அப்படியே தண்ணீரில் முழ்க ஆரம்பித்தான் வணிகன். தன்னம்பிக்கையை இழந்ததும், நீந்தும் சக்தியும் அவனை விட்டுப் போனது.


எந்தவிஷயத்தையும் செய்து முடித்துவிடுவோம் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும்; இதை எப்படி என்னால் செய்ய முடியும் என்று நினைத்தால் எந்த காரியத்தையும் செய்ய முடியாது போய்விடும். ■





படத்தில் மறைந்திருப்பது என்ன என்பதை அறிய புள்ளிகளை வரிசையாக இணைத்தப் பாருங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **26.01.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **430**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 428

**பரிசுக்குரியவர்:**
எம்.ஏ.எம். அஷ்ரப்,
திப்பிட்டிய, அலவதுகொட, கண்டி.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| வி.ராகுலன்,<br>பரமனைனார் கோயில் வீதி, ஆரையம்பதி-01. | இராசேந்திரம் ஜனார்த்தனி,<br>கலைமகள் ம.வி., நெளுக்குளம், வவுனியா. |
| காலித் உஸ்மான்,<br>மகியங்கனை வீதி, பதுளை. | எஸ். டிலுக்ஷிகா,<br>இந்து தேசிய கல்லூரி, புஸ்சல்லாவ. |
| எம். ஆர். எம். றிப்ஸான்,<br>வரக்காமுறை, உக்குவெல. | அ. அமலதாஸ்,<br>ஆனந்தபுரி, திருமலை. |
| ச. டொரின் நிஷாந்தினி,<br>ஸ்ரீ கதிரேசன் த.ம.வி., தெரனியகல. | மகேந்திரன் ஜூட் மெதியூ,<br>அம்பேதன்ன த.வி., மத்துகம. |
| எம்.என்.எஃப். றிஸ்னா,<br>துருக்கரகம, கஹட்டகஸ்திகிலிய. | கு. கணேசநாதன்,<br>முத்துவெல மாவத்தை, கொழும்பு-15. |

## உண்மையா? பொய்யா?

**காந்தத்தை தொடர்ந்து அடித்தாலோ, அதிகமாக சூடு படுத்தினாலோ, ஏன் அது காந்த சக்தியை இழக்கிறது?**

காந்தத்தில் உள்ள ஒவ்வொரு அணுவும் சிறிய காந்தம்தான். ஒவ்வொரு அணுவும் ஒரே வகையில் சேர்ந்துள்ளன. அதனால் அதற்கு காந்த சக்தி கிடைக்கிறது. காந்தத்தை தொடர்நது சுத்தியால் அடித்தாலோ, கீழே போட்டாலோ, சூடு படுத்தினாலோ அந்த அணு துகள்கள் கலைந்து விடும். இதன் மூலம் காந்தம் தனது காந்த சக்தியை இழந்துவிடும். நிரந்தர காந்தங்களை கூட கடுமையாக கையாண்டால் காந்த சக்தியை இழந்துவிடும்.

**மிக அதிக உணவை சாப்பிட்டால் விக்கல் வருவது ஏன்?**

சரி: அதிக அளவு உணவு சாப்பிடுவதாலும், தண்ணீர் குடிப்பதாலும் வயிற்றில் எரிச்சல் ஏற்பட்டு விக்கல் வரும் என்று டாக்டர்கள் கூறுகின்றனர். குரல் வளையில் நெருக்கடி ஏற்படுவதால் விக்கல் ஏற்படுகிறது.

**உடலில் இருந்து எடுக்கப்பட்ட சிறிது நேரத்திற்குள் கண் மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமா?**

சரி: கண் தானம் கொடுப்பவர் இறந்து மூன்று மணி நேரத்திற்குள் கண்ணை எடுக்க வேண்டும். பின்னர் உடனடியாக அதனை சோதனை செய்து கண் மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டும்.

**தலையில் தொப்பி அணியாமல் இருப்பதால் வெளியேறும் வெப்பம் அதிகமானதாக இருக்காது என்பது உண்மையா?**

தவறு: கடும் வெய்யிலில் தலையில் தொப்பி அணியாமல் சென்றால் மொத்த உடல் வெப்பத்தில் 40 முதல் 50 சதவீத வெப்பத்தை ஒருவர் இழப்பார். இதயம் எவ்வளவு வேகமாக செயல்பட்டு தலைக்கு ரத்தத்தை அனுப்புகிறதோ அதனை பொறுத்தும் இது மாறுபடும்.

**கரும் பச்சை நிற பெயின்ட் அடிக்கப்பட்ட கார்கள் அடிக்கடி விபத்திற்குள்ளாகும் என்பது சரியா?**

சரி: மெர்சிடஸ் பென்ஸ் கார் நிறுவனம் காரின் பாதுகாப்பான வர்ணம் பற்றி ஆய்வு செய்தது. கரும் பச்சை கார் தான் பார்வையை அதிகம் மறைக்கும் என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது. பாதுகாப்பு நோக்கில் பார்த்தால் பளீர் மஞ்சள், பளீர் ஆரேஞ்ச் வண்ணம்தான் சிறந்தது. சிலர் நீலம் மற்றும் மஞ்சள் பொருத்தமானது என்றும், சாம்பல் கலர்தான் மோசமானது என்றும் கூறுகின்றனர்.

**மீன்கள் பறக்குமா? பறக்காதா?**

சில மீன்கள் தண்ணீருக்குள் இருந்து மேலே 20 அடி உயரம்வரை எழும்பி, சர்ரென்று மேலே மிதக்கும். தனது துடுப்பை அசைசாமல் இருப்பதால் இவை சுமார் 1300 அடி தூரம்வரை மிதக்கும். அதன் பிறகுதான் துடுப்பை அசைத்து மீண்டும் தண்ணீரில் விழும். இதைப் பார்த்துத்தான் மீன்கள் பறக்கின்றன என்கிறார்கள்.

**உணவு வகைகளை டப்பியில் அடைக்கும் முறை முதல் முதலாக எப்போது நடைமுறையில் வந்தது தெரியுமா?**

1812ல் டான்கின், ஹால் என்ற இங்கிலாந்துக்காரர்களால் லண்டனில்தான் முதல்முதலாக உணவை டின்களில் அடைக்கும்முறை நடைமுறைக்கு வந்தது. முதன் முதலாக மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, காய்கறிப் பொருட்கள், சூப்புகள், கரட்டுகள் போன்றவற்றை அடைத்து வைத்தனர். இவற்றை புதிய நாடுகள் கண்டுபிடிக்க கடல் பயணம் மேற்கொள்பவர்களே அதிகம் பயன்படுத்தினர்.

**சைவ உணவு சாப்பிடும் விலங்குகள் உண்டு, அசைவ உணவு சாப்பிடும் தாவரங்கள் உண்டா?**

அமெரிக்காவில் உள்ள கரோலைனா மாகாணத்தில் காணப்படும் 'வினஸ் ப்ளைடிராப்' எனும் செடி சுத்தமான அசைவம்!

இதழ்கள் அனைத்தையும் விரித்து வைத்துக்கொண்டு காத்திருக்கும். தேன் குடிக்க வரும் பூச்சிகள் அதில் உட்கார்ந்தவுடன் இதழ்கள் அனைத்தையும் மூடி பூச்சியை 'லபக்' செய்துவிடும்

இது தவிர சன் டியூ, பிட்சர் போன்ற அசைவ தாவரங்களும் உலகில் உள்ளன! ■

## ரோபோ

ரோபோ என்ற வார்த்தையை உருவாக்கியவர் செக்கோஸ்லாவோகியா நாட்டு நாடக எழுத்தாளரான கேரல் சேபெக் என்பவர் 'ரொபோட்டா' என்பதற்கு செக் மொழியில் வேலைக்காரன் என்று பொருள்.

* உலகின் மற்ற நாடுகளை விட ரோபோக்ளை அதிகம் பயன்படுத்துவதால் ஜப்பானை ரோபோக்களின் தீவு என்கிறார்கள்.

* பெண் ரோபோக்களை ரோபோட் ரிக்ஸ் என்றும், வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் ரேபோக்களை ப்ரோபாட் என்றும் பெயர்.

* சிம் ஒன் என்ற ரோபோவை தெற்கு கலிகோர்னியா மருத்துவப் பல்கலைக் கழகத்தில் நோயாளியைப் போல் பயன்படுத்துகிறார்கள். பல்வேறு இதயக் கோளாறுகளால் பாதிக்கப் பட்டிருப்பதைப்போன்ற புரோகிராம்கள் இதில் உள்ளன.

* ஸ்னூப்பி என்ற ரோபோவை கலிபோர்னியாவில் பயன்படுத்துகிறார்கள். இது பொலிசக்கு உதவி செய்கிறது. வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்தல், மற்ற ஆபத்தான சூழ்நிலைகளின்போது உதவுதல் ஆகிய பணிகளைச் செய்கிறது. நாசாவில் விண்வெளி ஆய்வு மையத்தில் வால்டோ என்ற ராட்சத ரோபோ வேலை செய்கிறது. இதன் கையின் நீளம் சுமார் 50 அடி. ■

# அவள் வருவாள்.......



**உக்குவளை-நந்தலாலா**

அந்த ஆடம்பரமான மாளிகைக்குள் பல விலையுயர்ந்த வெளிநாட்டுக்காரர்களும் பல பணக்காரர்களும் வந்து கொண்டிருந்தார்கள். கோடீஸ்வர பிராமணனின் மகன் கண்ணாவுக்கு அன்று பிறந்தநாள். பல சொத்து செல்வங்களுக்கு அவன் மட்டுமே வாரிசு. வந்தவர்களெல்லாம் அவனை வாயார வாழ்த்தினார்கள். அந்த ஆடம்பர மாளிகைக்குள் யாராலும் நுழைய முடியாத அளவுக்கு மதில் எழுப்பப்பட்டிருந்தது. முற்றத்தில் ஒரு சிறிய பூந்தோட்டம், பக்கத்தில் ஒரு அழகான புறாக் கூடு. பலவிதமான புறாக்கள் உள்ளே சல்லாபித்துக் கொண்டிருந்தன. ஓர் அழகான நீர்த்தொட்டி, பழைய காலத்து அரசர்கள் வாழ்ந்த மாளிகைபோல பிரமாண்டமான உறுதியான தேக்கு மரங்களால் அந்த மாளிகை அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அது அவனின் இருபதாவது பிறந்தநாள், சென்ற வருடத்திற்கும் இந்த வருடத்திற்கும் இடையில் அவன் தடுமாறிப்போயிருந்தான். காரணம் காதல் எனும் நோய் அவனையும் விட்டுவைக்கவில்லை. அவனின் நினைவிலும் கனவிலும் தேவியே குடிகொண்டிருந்தாள். அவளை பார்க்கணும், பேசணும் என்று அவன் மனம் தவித்தது. வெளித்தோற்றத்தில் அவன் மற்றவர்களுக்காக சிரித்தான். மனதினுள் அவன் தேவியைப் பார்க்கணும் பார்க்கணும் என்று தவித்தான். அந்த நிலவு அவன் வீட்டுக்கு வர மாட்டாள். இல்லை இல்லை வர முடியாது. அவள் ஒரு கீழ்சாதிப் தோப்பில் மலர்ந்த ஏழை ரோஜா. அவன் தனது அறைக்குள் போகிறான். தனது முகத்தை கண்ணாடியின் முன் காட்டுகிறான். அவன் அவளை சந்தித்த முதல் நாள் மனத்திரையில் அசைகிறது. அவன் பருவம் எட்டாத வயது, பாடசாலை போக கசப்பு. பருவத்தின் ஆரம்பத்தின் பின் அன்று தான் முதன் முதலாக காலை அவனுக்கு சொந்தமாகியது. இயற்கையை ரசித்தான். புறாக்களுடன் கதைத்தான். அவனையும், அவன் வீட்டையும் அழகு படுத்த ஆரம்பித்தான். பூக்கள் எல்லாம் அவனுக்காகவே பூத்ததுபோல அவைகளை பார்த்து சொக்கிப் போனான். அவன் பூந்தோப்புக்கு வரும் வண்ணாத்திகளை அவனை மறந்து பார்த்தான். அவ்வளவு காலமும் பாசம் வைக்க அம்மாவும், அப்பாவும் இருந்தார்கள், ஆனால் அவனுக்கு பருவத்தின் மாற்றம் இன்னும் அன்பு வேண்டும் என்று வேண்டியது. பலரும் அவன் அழகை பார்த்தனர். அவன் அவளைமட்டும் பார்த்தான். அவன் பாடசாலை விட்டு வீட்டுக்கு காரில் வருவது வழக்கம். பாதிதூரம் வரும்போது அந்த ஒற்றையடி பாதையில் அவள் மாத்திரம் தனியாக பாடசாலைவிட்டு அந்த அழகான பாதத்தை மெதுமெதுவாக எடுத்து வைத்துப்போவாள். ஒரு தடவை பார்த்தவன் தடுமாறிப் போனான். அவள் கண்கள் கவிதை சொன்னது. அவள் எனக்காகத்தான் பிறந்திருக்கிறாள் என்று நினைத்துக் கொண்டான். காரில் போவது கசந்தது. ஒரு தடவை வீட்டில் சாக்குபோக்கு சொல்லி நடக்க ஆரம்பித்தான். அவளைப் பார்த்தான், சிரித்தான், அவள் அசையவே இல்லை. அவனுக்கு கோபம் கோபமாக வந்தது. தொடர்ந்தான்... அவள் மெதுமெதுவாக அவனிடம் தோற்றுப்போக ஆரம்பித்தாள். அவளுக்கு அவள் பெற்றோர்கள் வைத்த பெயர் ஏதோ: ஆனால் அவன் அவளை "தேவி" என்றான்.

"கண்ணா.." என்று அவனின் அம்மா உள்ளேயிருந்து கூப்பிடவும் நினைவுக்கு வந்தவனாக, திரும்பவும் திருடமுடியாத அந்த அழகான பாடசாலை நாட்களை ஏக்கத்துடன் திரும்பி பார்க்கிறான்.

ஒரு அழகான ஓடை அமைதியான அழகான இயற்கையழகு சார்ந்த இடம். அங்கு ஒரு குடிசை. அந்த பெண்நிலா பிறந்த இடம். அந்த குடிசையில் ஓர் குப்பிவிளக்கின் ஒளியில் அவளும் அவனை நினைக்கிறாள். ஒரு அழகான கவிதையை அவனுக்கு எழுதியவளாக. கவிதையில் அவன் சிறைப்பிடிக்கப்படுகிறான். **("வாழ்க்கை என்னும் பயணத்தில் நான். அதில், யார் யாரோ ஏறுகின்றார்கள். யார் யாரோ இறங்குகின்றார்கள். நீ மாத்திரம் என்னுடனே வருகிறாய். ஓ... என் சுவாசம் நீயாயிற்றே...")** அவனின் அன்பான முகத்தை நினைத்தவளாக படுக்கையில் விழுகிறாள். இன்று அவளுக்குள் ஒருத்தி கவிதை வடிப்பவளாக அவளை வளர்த்தவன் அவன். அவனை பார்த்த பின்னால்தான் அவள் கவிதை எழுதினாள். ஒருவரை ஒருவர் கண்டநாளிலிருந்து எதையோ தொலைத்து விட்டவர்கள் போல் தேடிக்கொண்டார்கள். அந்த ஏழை நிலவு பணக்காரனை அழகாக இதயத்தில் செதுக்கிக்கொண்டாள். அவளினுள் அவன் ஓவியமானான்.

☆☆☆

**அ**வளை பார்க்க அவன் துடித்தான். திடீரென ஒரு நாள் அவன், அவள் வாசல் வந்து நின்றான். "அம்மா இல்லை..." தரையைப் பார்த்துக்கொண்டே சொன்னாள். உடம்பு நடுங்கியது. "நான் உன்னைத்தான் பார்க்க வந்தேன். என்னுடன் பேச மாட்டாயா..? எனக்கு உன் பக்கத்தில் இருக்கணும்" அவன் புலம்பினான். அவள் மீது பைத்தியமானான். "பசிக்கிறது" என்றான். அவளுக்கு வெட்கமாக இருந்தது. 'பழைய சோறும் தக்காளி சொதியும்' என்று சொல்ல. அவனே பழைய சோற்றையும், தக்காளி சொதியையும் போட்டு சாப்பிட்டான். அவளை நேசித்துக்கொண்டே சாப்பிட்டான். "உனக்கு ஒருவாய் ஊட்டி விடட்டா" என்றான். பயத்தினாள் அவளுக்கு பசிக்கவில்லை. அவள் அவனை ஆசையாக ஒரு தடவை நன்றாக பார்த்தாள். அவன் பார்க்கும் போது பார்வையை விலக்கிக் கொண்டாள்.

"இன்று உனது சாப்பாட்டை நான் சாப்பிட்டுவிட்டேன் எனக்காக இன்று நீ பசித்திரு அப்போது என்னை திட்ட நினைப்பாயே அதிலாவது என்னை நீ நினைக்கணும்..." என்று அவளை வம்புக்கு இழுத்தவன் அவள் பக்கத்தில் வந்தான். அவள் கண்களைப் பார்த்தான். அழகான கண்கள் அவனுடன் காதல் பாஷைகள் பேசியது.

"எனக்கு நீ வேணும் என் உயிரைவிடவும் உன்னை நேசிக்கிறேன்" என்றான். அவள் துடித்துப் போனாள். அவள் உயிரல்லவா அவன். அவளின் இரத்த நாளங்களிலெல்லாம் அவன் இருப்பது அவனுக்கு தெரியாதே...

"நீ ஏதாவது தாயேன்" அவள் ஏழையாக இருந்தாள். குனிந்தவன் அவள் பாதத்தில் சப்தமிட்டுக் கொண்டிருக்கும் ஒற்றை கொலுசை கழற்றினான். பிறகு தனது கைவிரல் மோதிரத்தை கழற்றியவன் மெதுவாக அவள் கையைப்பற்றி பிடித்து அவள் விரலில் மோதிரத்தை அணிவித்தான். அன்று இரவு அவன் கொலுசையும், அவள் மோதிரத்தையும் ஒருவருக்கும் தெரியாமல் முத்தமிட்டுக் கொண்டார்கள். அவன் தனிமையை நேசித்தான். தனிமை அவனுக்கு அவளின் அழகான நினைவுகளை வாங்கிக் கொடுத்தது. அவளை நினைக்கும் போதெல்லாம் அவன் சந்தோஷமாக இருந்தான். இடைக்கிடையே அவளை பார்க்கணும் என்ற கவலையும் எட்டிப்பார்த்துவிட்டு சென்றது.


☆☆☆

அந்த நிலவின் அழகில் அவளின் குடிக்கார மச்சினன் மயங்கிப் போனான். "சுயம்பரம்" என்றான். அவள் "நேசிக்கிறேன்" என்றாள் கண்ணனை. மச்சினன் போதையிலும், தனக்கு கிடைக்காதே என்ற கவலையிலும் உளறினான் உண்மைகளை. பணக்காரன் கொதிதெழுந்தான். "பிராமணன் கீழே பார்ப்பதா..? இளவரசன் குடிசையை நேசிப்பதா...?" காதலிக்க தெரிந்த கண்ணனுக்கு தைரியம் மங்கலாக நின்றது. குடிசை தீக்கிரையானது. நிலவு புண்ணானது, மிரட்டினார்கள், பணமில்லாத ஏழை சாதியை விரட்டினார்கள். மானம் இருந்தது பணமில்லாத ஏழையிடம். நிலவுக்கு வீட்டில் இரத்தம் கசிந்தது. பணக்கார அம்மாவும் அப்பாவும் அவனை மிரட்டி வைத்தனர். அவள் அழுதாள். அமைதியாக அழுதாள். அந்த ஓடையும் சலசலத்தது. தனது குடிசை வீட்டை திரும்பவும் ஒரு தரம் திரும்பிப் பார்த்துக் கொண்டாள். தான் கால் நனைத்து விளையாடிய ஓடைத் தண்ணீரில் தன் இதயத்தையும், காதலையும் கழுவிக்கொண்டாள். இறந்த மனதுடன் நடக்கலானாள். பெட்டி படுக்கையுடன் அவர்கள் அமர்ந்திருந்த ரயில் மெதுவாக நகரத்தொடங்கியது. அவள் மனது மட்டும் அவனைத் தேடியது. அவன் தடையை உடைத்தான். குடிசையில் அவன் உயிரை பார்க்க ஓடோடி வந்தான். குடிசையில் நிலவு மறைந்து போயிருந்தாள். நெஞ்சு வெடித்தது. தலைக்கனத்தது. ஏதேதோ புலம்பினான். கதறி அழுதான். வெறித்துப்பார்த்தான். நினைப்பதையெல்லாம் நினைவில்லாது செய்தான். ரயில் நகர்ந்த நாள் அவன் காணாமல் போனான். அவன் கொலுசும் மறந்து போனதால் ரயில்தளம் அவனுக்கு வீடானது. மழையிலும் வெயிலிலும் வானம் மாத்திரமே அவனுக்கு குடை. அவன் தனியாக சிரித்தான். பணக்கார அம்மா அப்பாவும் அழுதார்கள். எத்தனையோ இரவுகள் போனது. அது அவனுக்கு தெரியாது. அவனுக்கு தெரிந்ததெல்லாம் ரயில் வந்து நின்றதும் இறங்குபவர்களை பார்ப்பதும்தான். அன்று ரயில் வந்தது. நிலவு ஒரு சின்ன மலருடன் இறங்கினாள். அவனைப் பார்த்ததும் நிலவுக்கு இரத்த ஓட்டம் வேகமாகியது. அவள் கண்களை அவளால் நம்பமுடியவில்லை. அவன் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தான். அவனை யாருமே கண்டு கொள்ளவில்லை. அவள் பொட்டுக்குச் சொந்தக்காரன் கருணையுள்ளம் கொண்டவன். பக்கத்தில் போய் பார்த்தவன் "பாவம் செத்துப்போய் இருக்கிறார்" என்றான். அவள் இதயத்தில் பூகம்பம் வெடித்தது. "நான் பாவி பாவி" என்று துடித்தாள். அன்று அழகான செதுக்காத ஓவியம் அவன். இன்றோ அசுத்தமான சிற்பமாக உணர்வுகளற்று உறங்கிக் கொண்டிருந்தான். இது என்னால் தான் என்று கத்தி அழவேண்டும் போல இருந்தது அவளுக்கு. அவன் முகத்தை ஒரு தரம் பார்த்தாள். எதையோ தேடித்தேடி அலுத்துப் போனவன் போல... இருந்தது. யாரோ இருவர் அவனை எடுத்துப் போக 'சல்' என்ற சப்தத்துடன் அவன் பையிலிருந்து ஒரு கொலுசு விழுந்தது. அவளால் அழமுடியவில்லை. அழுவதற்கு உணர்வும் இருக்கவில்லை. அந்த கொலுசையும் அவனுடனே எடுத்துச் சென்றார்கள். அன்றைய இரவு அவளுக்கு நீண்டதாக இருந்தது. தனது பொட்டுக்காரனுக்கு ஒரு துரோகம் செய்தவளாக அவள் காதலனை நினைத்து அவன் பெயரை தனக்குள்ளே மெதுவாக சொல்லிக்கொண்டவாறு ஒரு துளி கண்ணீர் விட்டாள். ●

# நீண்ட கறுத்தக் கார்

அந்தோனிப்பிள்ளையின் கடைசி ஆசைப்படி அவர் அந்த நீண்ட கறுத்தக் காரில் போகவேயில்லை.

இரண்டு வாரங்களுக்கு முன் அந்தோனிப்பிள்ளையின் ஒரே மகன் சொன்னான் "அப்பா ரவுணில புதுசா திறந்திருக்கிற கடைக்கு நம்மட காரைக் கேட்டாங்க அதுவும் சவம் ஏத்துறத்துக்காகத்தான். இஃரிமேல் எங்களால எதுவுமே முடியாது. நீங்க படுக்கையில விழுந்த இந்த ஒரு மாதத்தில் கையில இருந்த காசெல்லாம் முடிஞ்சது. இனி உங்கட மருந்து, அது இது என்று செலவுகளுக்கும் வேணும்" அந்தோனிப்பிள்ளை மகனை வெறுமையாகப் பார்த்தார். "என்னப்பா அப்பிடிப் பார்க்கிறியள் இது வரைக்கும் பத்து வருஷமா அந்தக் கார் சவம்தானே ஏத்தியிருக்கு. பிறகேன் யோசிப்பான். உங்களுக்கு அந்தக் காரென்றால் உசிர்தான். முப்பத்தைந்து வருட சொந்தம்தான். என்ன செய்யிறது வேறு வழி தெரியல்ல." என்றவாறு எழும்பிப் போனான். கடைசியாகக் காரை ஒரு தரம் கஸ்டப் பட்டுப் பார்த்துக் கொண்டார்.



அவன் 35 வருடச் சொந்தம் என்றது மனதில் ஏதேதோ எண்ணத்தையெல்லாம் தொட்டுச் சென்றது. தன் இருபத்தைந்து வருட கடின உழைப்பின் பிறகு சொந்தமாக்கிக் கொண்ட தன் ஒரே சொத்து அந்த நீண்ட கறுத்தக்கார். இன்னும் பதினைந்து வருஷம் வாடகைக்காராகச் சீவனம் நடந்தது. கடைசியாய் அமரர் ஊர்தியாகப் பத்து வருஷம் உழைச்சது. இப்போதும் அதே தொழிலுக்குப் போகிறது. ஆனால் அதன் இருபத்தைந்து வருஷ சாரதியாய், சொந்தக் காரனாய் வாழ்ந்த அந்தோனிப்பிள்ளை இப்போது இல்லை. அது ஜடம் அதுக்கு இந்தப் பிரிவு பற்றித் தெரிந்திருக்காது.

ஆனால் அந்தோனிப் பிள்ளை?

மகனுக்கு ஏதோ சில ஆயிரங்கள் கிடைத்திருக்க வேண்டும். அதன் பிறகு மருந்துகளும், சாப்பாடும் ஒழுங்காக, சத்தாக வந்தது; அந்தோனிப் பிள்ளையைத் தவிர இரண்டு கிழமைகள் எதைப் பார்த்தாலும் நீண்ட தாய்க் கறுப்பாய்த்தான் தோன்றியது. அதன் பிறகு அந்தோனிப் பிள்ளையும் ஜட மாகிவிட்டார் அந்த நீண்ட கறுத்தக் காரைப் போல.

மகன் முன்னால் வாயில் துணி போட்டுத் தலையில் தண்ணீர்க் குடத்துடன் கையால் குடத்தைப் பிடித்தபடி நடக்கிறான். பின்னால் அந்தோனிப்பிள்ளை. எத்தனையோ பிணங்களை ஏற்றிச் சென்றவரை நான்கு பேர் பாடையில் வைத்துச் சுமந்து செல்கின்றனர். பின்னால் சுமாராய் ஒரு கூட்டம். அந்த நீண்ட கறுத்தக் கார் கடைசிவரை அவரோடு வரவேயில்லை. அது ஜடம் அதுக்கு அந்தப் பிரிவு தெரிந்திருக்காது.

அந்தோனிப் பிள்ளையின் கடைசி ஆசைப்படி அவர் அந்த நீண்ட கறுத்தக் காரில் போகவேயில்லை. ●

**'மிர்த்தா'**

# கண்ணாமூச்சி ரே... ரே... 8

## பட்டுக்கோட்டை பிரபாகர்

“நாளைக்கு ராத்திரி மதுலதாவை அந்த பங்களாவுக்கு கொண்டு வர்றே. காரை கேரேஜுக்குள்ளே விட்டுப் பூட்றே எனக்கு போன் செய்றே.”
“டன் தாஸ்.”
“சுதிர், ஒரு பூனைக்குட்டிக்குக் கூட இந்த விஷயம் தெரியக்கூடாது. குறிப்பாக கார் நம்ம பங்களாவுக்குள்ளே நுழையறதை யாரும் பார்க்கக்கூடாது.”

“யெஸ்...”

“சுதிர் வந்திருக்கார்.”

“ரூமுக்கு வரச் சொல்லு.”

சங்கரதாஸ் டேப்பை அணைத்தான். சிகரெட்டை பற்ற வைத்தான். ஜன்னல் வழியாக கறுப்பு வானத்தையும், ஜன்னல் வழியாக கட்டடங்களில் தப்பித்துக் கொண்டிருந்த மின்சார வெளிச்சங்களையும் பார்த்தான்.

“தாஸ்”

“வா, உக்காரு.”

சுதிர் அமர்ந்து சங்கரதாஸின் சிகரெட் பாக்கெட்டில் இருந்து உரிமையாக ஒன்றை எடுத்துக் கொள்ள... சங்கரதாஸ் பற்ற வைத்தான்.

“என்ன, புருஷன் பொண்டாட்டி நல்லா சண்டை போடறாங்களாமா?”

“தூள் பண்றாங்க...”

“துர்க்கா அவங்காத்தாவுக்கு லெட்டர் எழுதினாளா?”

“எழுதியாச்சி...”

“நீ பார்த்தியா?”

“எழுதி வாங்கி ஒட்டி நான் தான் போஸ்ட் செஞ்சேன்.”

“என்னன்ன எழுதியிருக்கா...”

“அப்படியே சொல்லட்டுமா தாஸ்?”

“சொல்லு.”

“அன்புள்ள அம்மாவுக்கு, உங்கள் மகள் துர்க்கா கண்ணீருடன் எழுதிக் கொண்டது. உன்னை விட்டுவிட்டு என் சந்தோஷம் பெரிதென்று பிரிந்து இவரை திருமணம் செய்து கொண்டேன். இரண்டு வாரம் கழித்துத்தான் சுயரூபம் தெரிய ஆரம்பிக்கிறது. இவருக்கு நிறைய கோபம் வருகிறது. சின்ன விஷயங்களுக்கெல்லாம் என்னை கண்டபடி திட்டுகிறார். சமயத்தில் அடிக்கவும் செய்கிறார். எங்களுக்குள் இப்போதெல்லாம் தினமும் சண்டை வந்து விடுகிறது. ‘பெரிய அழகி என்று நினைப்பா உனக்கு. உன் அழகை அழித்து விடுகிறேன். அப்போது தான் திமிர் குறையும்’ என்று அடிக்கடி மிரட்டுகிறார். ஏன் தான் திருமணம் செய்து கொண்டோமோ என்று நொந்து போகிறது மனசு. கீழே விலாசம் எழுதியுள்ளேன். வந்து என்னை உன்னோடு அழைத்துச் செல். ஒரு நான்கு நாட்கள் அங்கே இருந்து விட்டு வருகிறேன்.



இப்படிக்கு உன் மகள், துர்க்கா.”

“சபாஷ் சுதிர். கரெக்டா வந்திருக்கு. இப்போ நாடகத்தோட அடுத்த காட்சி. இதிலே உன் பங்குதான் பிரதானம்.”

“சொல்லு தாஸ்.”

“இந்தா. இது நம்ம பஸண்ட் நகர் பங்களா சாவி. அங்கே இருந்த வாட்ச் மேனுக்கு பத்து நாள் லீவு கொடுத்து அனுப்பிச்சிட்டேன். நாளைக்கு ராத்திரி மதுலதா அங்கே இருக்கணும்.”

“எப்படி?”

“அனில்தூத் மோட்டார் பைக்ல போறப்ப ஸ்லிப் ஆகி கீழே விழுந்து தொடையிலே கட்டு போட்டுக்கிட்டு பிரியா நர்ஸிங் ஹோம்ல இருக்கான். டிஸ்சார்ஜ் ஆக இன்னும் பதினைஞ்சி நாள் ஆகும். மதுலதா ஷூட்டிங் எல்லாம் முடிச்சிட்டு தினம் ராத்திரி ஒன்பது மணிக்கு நர்ஸிங் ஹோம் வர்றா- அவளே தனியா மாருதியை டிரைவ்செஞ்சிக்கிட்டு அரை மணி நேரம் பேசிக்கிட்டிருந்துட்டு திரும்பிப் போறா. இந்தா ரிவால்வர். இந்த பாட்டில்ல சுவாசிச்சதும் மயக்கமாக்கிடற மருந்து இருக்கு. இன்னும் என்ன சௌகரியங்கள் வேணும். சொல்லு. செஞ்சித் தர்றேன்.”

“எதேஷ்டம்.”

“நாளைக்கு ராத்திரி மதுலதாவை அந்த பங்களாவுக்கு கொண்டு வர்றே. காரை கேரேஜுக்குள்ளே விட்டுப் பூட்றே எனக்கு போன் செய்றே.”

“டன் தாஸ்.”

“சுதிர், ஒரு பூனைக்குட்டிக்குக் கூட இந்த விஷயம் தெரியக்கூடாது. குறிப்பாக கார் நம்ம பங்களாவுக்குள்ளே நுழையறதை யாரும் பார்க்கக்கூடாது.”

“எனக்கும் சில சாமர்த்தியங்கள் தெரியும் தாஸ். செஞ்சிட்டு சொல்றேன்.”

“வெரிகுட்.”

சங்கரதாஸ் டின் விஸ்கி குடித்து விட்டு அவனிடம் நீட்டினான்.

வாங்கிக் கவிழ்த்து காலி செய்து விட்டு, “வரட்டுமா? என்றான் சுதிர்.

“சுதிர், அவ மயக்கமானதுமே கண்ணைக் கட்டிடு. கையையும் பின் பக்கம் வச்சிக் கட்டிடு. தான் யாரால கடத்தப்பட்டிருக்கோம், எங்கே இருக்கோம்னு எதுவும் அவளுக்குப் புரியக்கூடாது.”

“நான் பார்த்துக்கறேன் தாஸ். கவலையை விடு.”

சங்கரதாஸ் டேப்பைப் போட்டு விட்டு ஆட ஆரம்பித்தான்.

மறுநாள் இரவு 9 மணி. பிரியா நர்ஸிங் ஹோம் வாகன சத்தங்கள் நிறைந்த பிஸியான சாலையை விட்டு விலகி தொலை தூரத்தில் இருந்தது. பொழியத் தயாரான மேகங்கள் தன் சகாக்களுடன் கூட்டணி அமைத்துக் கொண்டிருந்தன. மழையில் நனைந்தால் ஜலதோஷம் பிடிக்கும். வீட்டுக்குள்ளே வா என்று வானம் கண்டிக்க, நட்சத்திரக் குழந்தைகள் கட்டுப்பட்டு உள்ளே ஓடியிருக்க...

மதுலதா தன் வெள்ளை மாருதியை நர்ஸிங் ஹோமின் பார்க்கிங் பகுதியில் நிறுத்தினாள். வலைப்பை நிறைய ஆப்பிள்களுடன் இறங்கினாள். நடந்து லி.ப்ட் உபயோகித்து ஆர்த்தோ பிரிவு வந்து ஸ்பெஷல் வார்டு வந்தாள். அறை வாசலில் ஸ்டூல் போட்டு அமர்ந்திருந்த சிப்பந்தி எழுந்து கொண்டு நேற்று மாதிரியே சிரித்தான்-நேற்று மாதிரியே பணம் கிடைக்கும் என்கிற நம்பிக்கையில்.

கதவைத் தள்ளி உள்ளே வந்தாள்.

ஏர்கண்டிஷனர் மிதமான குளிரை ஏற்பாடு செய்திருக்க... படுக்கையில் சாய்ந்து அமர்ந்து நாவல் படித்துக் கொண்டிருந்த அனில்தூத் நிமிர்ந்து “ஹாய்” என்றான். வலது காலில் மாவுக் கட்டு போட்டு உயரே சக்கரம் அமைத்து கயிறு கட்டி தூக்கி வைக்கப்பட்டிருந்தது.

பக்கத்தில் அமர்ந்து, “எப்படி இருக்கேம்மா?” என்றாள். அவன் தலையில் கையை ஒட்டினாள்.

“பரவால்லை. இப்ப கொஞ்சம் வலி குறைஞ்சிருக்கு.”

“புக் கூட படிக்காதே அனில். அதுவும் ஒரு ஸ்ட்ரைன்தான். நல்லா ரெஸ்ட் எடு.”

“போரடிக்குதே மது.”

“நான் வேணும்னா ஒரு வாரம் எல்லா ஷூட்டிங்கையும் கேன்சல் பண்ணிட்டு வந்துடட்டுமா?”

“பாவம், ப்ரட்யூசர்ஸ் கஷ்டப்படுவாங்க... அப்புறம் டே அண்ட் நைட்டா உழைச்சி நீதானே முடிச்சி கொடுக்கணும்...”

“ஜூஸ் போடவா? சாப்பிடறியாம்மா?”

“இப்ப எதுவும் வேணாம்.”

“ஒழுங்கா கவனிச்சிக்கிறாங்களா?”

“.:.பர்ஸ்ட் கிளாஸ். இன்னிக்கு என்ன படம் ஷூட்டிங்?”

“ராஜ துரோகி! சினிமாஸ்கோப். ஹிஸ்டாரிக்கல் மூவி. பத்து கிலோ நகை. நெத்தி, மூக்கு, கழுத்துன்னு ஒரு இடம் பாக்கி இல்லாம நகைங்க போட்டுக்கிட்டு தர்பார்ல ராஜாவுக்குப் பக்கத்திலே சமமா அலங்காரமா உக்காந்திருந்தேன். டயலாக்கே இல்லை.”

“அட! உன்னை ராணி ட்ரெஸ்ல பார்த்ததே இல்லையே நான்.”

“நாளைக்கு வர்றப்ப ஸ்டில்ஸ் எடுத்துட்டு வந்து காட்றேன். சிம்லா போலாம்னு பிளான் பண்ணிக்கிட்டிருந்தோம். இப்படி காலை உடைச்சிக்கிட்டுப் படுத்துட்டியே... போம்மா! ரொம்ப அப்செட் ஆயிட்டேன் நான்!”

“பதினைஞ்சே நாள். சரியாய்டுவேன். நான் என்ன வேணுமின்னா விழுந்தேன். ஆமாம். நேத்து ஜன்னல் வழியா பார்த்தேன். நீயே டிரைவ் செஞ்சிட்டுப் போனே... இன்னைக்கு எப்படி?”

“தினம் நான் தான் டிரைவ் பண்ணிட்டு வாறேன் அனில்.”

“தப்பு மது. ராத்திரி நேரம். இப்படி எல்லாம் ரிஸ்க் எடுத்துக்காதே. ஒருத்தனுக்கு ரெண்டு பேரா டிரைவர்சை வச்சிக்கிட்டு நீ இப்படி செய்யக் கூடாது மது.”

“அதுக்கில்லைம்மா... தினம் உன்னைப் பார்க்க வர்றேன்னு தெரிஞ்சிடும். நியூஸ்வெளில போய்டும். நானே அறிக்கை கொடுக்கிறதுக்கு முன்னாடிபேப்பர்ல எழுதிடுவாங்க சம்மந்தப்படுத்தி...”

“ஏன் மது. யாரோ போன்ல மிரட்டினான்னு சொன்னியே, அப்புறம் என்ன ஆச்சி?”

“நத்திங். ஆள் சைலண்ட்டாயிட்டான்.”

“நீ எதாச்சும் நடவடிக்கை எடுக்கலையா?”

“ஒரு பிரைவேட் டிடெக்டிவ் ஏஜன்சியை கூப்பிட்டுப் பேசினேன். எல்லாத்தையும் கேட்டுட்டு வேற ஆளைப் பாருங்கன்னுட்டாங்க.. எனக்கு டைமில்லை.”

கதவு தட்டப்பட்டு... ஒரு நார்ஸ் வந்தாள்.

“இன்ஜெக்ஷன் போடணும்...”

“அப்ப நான் வரட்டுமா அனில்?”

“நேரத்தோட போ. நாளைக்கு டிரைவரை அழைச்சிக்கிட்டு வா. ராணி ஸ்டில் எடுத்துட்டு வா.”

“ஷ்யூர். குட் நைட்.”

வெளியே வந்தாள். “என்னய்யா நல்லா கவனிச்சிக்கிறியா? என்ன கேட்டாலும் வாங்கிக் கொடுத்துக் கிட்டிருக்கியா?”

“முந்தா நாள் வலி அதிகமா இருக்கு. பிராந்தி வாங்கிட்டு வான்னாரு மேடம்.”

“அடப்பாவி. அதெல்லாம் வாங்கிக் கொடுத்துடாதே.”

அவனிடம் இருபது ரூபாய் கொடுத்துவிட்டு, அவன் அட்டென்ஷனில் சல்யூட் அடித்ததை கவனிக்காமல் நடந்து, லி.:.ப்டில் இறங்கி தன் காரை அடைந்தாள்.

*(கண்ணாமூச்சி தொடரும்)*

---



# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்ஃப் ஹிட்லர்

சோவியத் யூனியனிலும் வடக்கு ஆபிரிக்க பிரதேசத்திலும் ஒருங்கே கால் பதித்திருந்த ஹிட்லரின் படைகள் இரு முனைகளிலும் தோல்வியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தன. வட ஆபிரிக்காவில் ஏல்-அலாய்மன் என்ற இடத்தில் நடைபெற்ற சமரில் ஜெர்மன், இத்தாலியத் துருப்புக்கள் தமது 70 சதவீத படையணியை இழக்க நேரிட்டது. சோவியத் பிரதேசத்தில் செஞ்சேனையின் தாக்குதல் 1943ம ஆண்டு குளிர்காலத்தில் தீவிரமடைந்திருந்தது. சுமார் ஒரு வருடகால முற்றுகையில் ஈடுபட்டு குறிப்பிட்ட இலக்கை அடைய முடியாமல் உளவியல் ரீதியில் பெரும் பின்னடைவில் இருந்த ஹிட்லரின் படைகளுக்கு 2பாகை செல்ஸியஸையும் விட குறைந்த உறை பனி கால நிலையில் தாக்குப்பிடிப்பது இயலாத காரியமாக இருந்தது. இவ்வாறிருந்தும் ஏற்கனவே வெற்றிகொண்ட நாடுகளில் நிலை நிறுத்தப்பட்டிருந்த படைகளை சோவியத்திற்கு திசை திருப்புமாறு ஹிட்லர் உத்தரவிட்டான்.



அது மாத்திரமன்றி தனது படைகள் தற்காப்புக் கட்டத்துக்குள் இருப்பதை விரும்பாத ஹிட்லர் அவர்களது தாக்குதல் திறனை அதிகரிக்கச் செய்யும் முயற்சிகளுக்கு புத்தூக்கம் அளிக்குமாறு கூறினான். அத்தனைக்கும் ஜெர்மன் இராணுவம் வெகுவாக களைத்துப்போயிருந்தது.

சிறைக்கைதிகளையும் உள்நாட்டுத் தொழிலாளர்களையும் ஈவிரக்கமின்றி பிழிந்தெடுத்து ஆயுத தளபாடங்களை உற்பத்தி செய்ய ஏற்பாடுகளை மேற்கொண்டான் ஹிட்லர். இதனால் முன்னைய ஆண்டுகளை விடவும் அதிக அளவிலான பீரங்கிகளையும் தாங்கிகளையும் ஜெர்மன் உற்பத்தி செய்தது. எனினும் அவற்றைக்கொண்டு போதிய பயன் பெறக்கூடிய எல்லை தாண்டப்பட்டிருந்தது. ஹிட்லரின் படைகளுக்கு எதிரான போரில் சோவியத் ஒன்றியம் தன்னை முழுமையாக நிலை நிறுத்தியிருந்தது.

சமகாலத்தில் இத்தாலிய சர்வதிகாரி முசோலினிக்கு எதிராக உள்நாட்டில் பரவலான எதிர்ப்புக்கள் எழ ஆரம்பித்தன. உள் நாட்டு மக்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்தால் அதனை எவ்வாறு அடக்க வேண்டும் என்று முசோலினிக்கு அடிக்கடி ஆலோசனை கூறிக்கொண்டிருந்தான் ஹிட்லர். ஆனால் ஜெர்மனியை விடவும் இத்தாலியில் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டு சென்றது. ஹிட்லரும் எஸ்.எஸ். படையணியும் தனக்கு ஆதரவளிப்பதை முசோலினி நியாயப்படுத்த முயன்றான்.

சோவியத் யூனியனின் பெரும் பகுதி விடுவிக்கப்பட்ட நிலையில் தனது படைகளுக்கு சோவியத் பூமியில் அழிவு நிச்சயம் என்று உறுதியான பின்னர் 1943ம் ஆண்டு ஜனவரி நடுப்பகுதியில் மொக்கோ பகுதியில் இருந்து படைகளை மீளப் பெறுவதென ஹிட்லர் முடிவு செய்தான்.

மாத இறுதியில் ஜெர்மன் இராணுவம் போர்க்களத்தில் இரு பிரிவுகளாக உடைக்கப்பட்டிருந்தது.

ரஷ்யாவின் கடுமையான தாக்குதல்களுக்கு முன்னால் ஜெர்மனியப் படைகளால் ஈடு கொடுக்க முடியவில்லை. போர் நிலவரம் தொடர்பாக 1943ம் ஆண்டு ஜூலை மாதம் 23ம் நாள் அமெரிக்க வானொலியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார் ஜனாதிபதி ரூஸ்வெல்ட். “இப்போது மிகத்தீர்க்கமான சண்டைகள் ரஷ்யாவில் நடைபெறுகின்றன. இக்கோடையில் நடைபெற்ற நாஸிகளின் தாக்குதல் ஜெர்மனியர்களின் ஆன்மீக நிலையை உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட வெறிபிடித்த முயற்சியாகும். இந்த முயற்சியை ரஷ்யர்கள் முறியடித்ததோடு தமது சொந்த தந்திரங்களின் அடிப்படையில் முன்னேறவும் செய்தனர். தன்னை காப்பாற்றிக்கொள்ளும் ரஷ்யா உலகம் முழுவதையும் நாஸிகளிடம் இருந்து காப்பற்ற திட்டமிடுகிறது. எதிர்கால உலகின் நல்ல அண்டை நாடாகவும் உண்மையான நண்பனாகவும் இருக்கவல்ல ரஷ்யாவுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்” என்று கூறினார்.

ஜெர்மனிக்கு எதிரான போராட்டத்தில் பங்கு கொண்ட நாடுகளில் உள்ள மக்கள் மத்தியில் ஒற்றுமையும், ஒத்துழைப்பும் வலுப்பெற்றது. அரியோல் என்ற ரஷ்ய நகரம் ஜெர்மனியர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டதும் அந்த மக்களுக்கு நாஸி எதிர்ப்பு கூட்டணியினால் அனுப்பிவைக்கப்பட்ட வாழ்த்து மடலில்: “அரியோல் நகர மக்களே உங்களுக்கு வாழ்த்துக்கள். நம் மக்கள் நடத்தும் அருமையான போராட்டத்தில் பாஸிசத்துக்கு மரண அடி கொடுக்கும் நம் புதல்வர்களின் குருதியால் நம் நட்பு என்றென்றைக்குமாக உறுதிப்பட்டுள்ளது. இறுதி வெற்றிக்கான நம்பிக்கை நம் கண்களின் முன் தெரிகிறது. நாம் யுத்தச் சுமைகளை பகிர்ந்து கொள்கிறோம். எவராலும் வெல்ல முடியாத சுதந்திரப் படைகளைச் சேர்ந்தவர்கள் என்ற பெருமையோடு சமாதானத்தின் அற்புதமான செல்வங்களை நாம் பகிர்ந்துகொள்கிறோம்!” எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதை வாசித்த ஹிட்லரின் கண்களில் தீப்பொறி பறந்தது. தோல்வி நிச்சயமாகிவிட்ட நிலையிலும் அவன் உறுதி குலையாதிருந்தான்.

# அழகிகளை நான் அனுபவித்துவிட்டுத்தான் பிறருக்குக்கொடுப்பேன்

## டாக்டர் பிரகாஷ் வாக்குமூலம்

பல பெண்களை மயக்கித் தனது வலையில் சிக்க வைத்த டாக்டர், அவர்களை அனுபவிக்காமல் இருப்பாரா? என்ற சந்தேகம் பொலிசாரின் மண்டையைக் குடைந்தெடுத்துவிட்டது. இல்லவே இல்லை என்று அவர் சாதித்துவிட்டாராம். ஆபாசப் படங்களை போலீசார் பார்த்தபோது சில படங்களில் முகத்தைத் துணியால் மூடிய ஓர் இளைஞர் பெண்களுடன் காமக்களியாட்டம் நடத்தும் காட்சிகளைக் கண்டனர்.

அந்த ஆண் தன்னுடைய பேண்ட்டை ஷோல்டர் பெல்ட் அணிந்து இணைத்திருப்பதைப் பார்த்தனர். அதேமாதிரி உடை அணிவதில் டாக்டர் பிரகாஷுக்கு அலாதிப் பிரியம் என்பதை அவருடைய குடும்ப ஆல்பத்தில் இருந்த படங்களில் இருந்து கண்டுபிடித்தனர். அப்போதும் அவர் உண்மையை ஒப்புக் கொள்ளவில்லை. பிறகுதான் பொலிசாருக்கு அழகிகளுடன் டாக்டர் உல்லாசமாக இருக்கும் படங்கள் சிக்கின. பொலிசாருக்கு ஏக சந்தோஷம். அந்தப் படத்தை டாக்டர் பிரகாஷிடம் போட்டுக் காட்டியபோது, அப்படியே முகம் சுருங்கிப் போனதாம்.

அதன் பின்னர் ஒரு நாள் கழித்து பொலிசார் மீண்டும் விசாரணையைத் தொடங்கிய போது, மெல்ல மெல்ல விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்துள்ளார். ""முதலில் பெண்களை மட்டும் வைத்து ஆபாசப் படம் எடுத்தேன். அந்தப் படங்கள் மட்டும் போதாது. ஆண் மாடல்களை வைத்தும் படம் எடுத்து அனுப்புமாறு பிரதீப் கேட்டான். என் கார் டிரைவர் ஆசிரைத்தான் நடிக்க வைத்தேன். அவனும் நன்றாக ஒத்துழைத்தான். வெளியில் உள்ள ஆண்களை அழைத்தால், விஷயம் தெரிந்துவிடும் என்பதால் என்னிடம் வேலை பார்த்தவர்களையே ஆண் மாடலாக நடிக்க வைத்தேன். அதில் விஜயன்தான் ஒரே நேரத்தில் ஐந்தாறு முறை பெண்களுடன் உறவு கொள்வான்.

புதிதாக வரும் பெண்களை முதலில் நான்தான் அனுபவிப்பேன். அதன் பின்னர்தான் மற்றவர்களுக்குத் தருவேன். சில சமயங்களில் இதை ஆசிர் படம் எடுப்பான். ஒரே நேரத்தில் பல ஜோடிகளைப் படம் எடுக்க நேரும் என்பதால் ஆசிருக்குப் படம் எடுக்கக் கற்றுக்கொடுத்திருந்தேன். அந்தப் படங்களை நான் ஏற்கெனவே அழித்துவிட்டேன். இந்தப் படங்கள் எப்படி மீதி இருந்தன என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது." என்று கூறியுள்ளார். இந்தப் படங்களை பிரிண்ட் போட்டு கோர்ட்டில் சமர்பிக்கவும் பொலிசார் திட்டமிட்டுள்ளனர். "இந்தப் படங்களைப் பார்த்தால் நீதிபதிகள் நிச்சயமாக அவருக்கு ஜாமீன் கொடுக்க மாட்டார்கள்" என்று பொலிசார் உறுதியாக நம்புகின்றனர்.

**தமிழகத்தை உலுக்கிய ஆபாச திரைப்பட விவகாரம் நாளுக்கு நாள் வெளிவரும் புதிய தகவல்கள்**

டாக்டர் பிரகாஷ், சினிமா படம் எடுக்க பூஜை ஒன்று போட்டதாகக் கூறப்படுகிறது. அந்தப் படத்தில் மலையாளத்தில் கொடி கட்டிப் பறக்கும் நடிகர் ஒருவரும், நடன நடிகருடன் கிசுகிசுக்கப்படும் ரன் நடிகையும் நடிப்பதாக இருந்ததாம். படப்பூஜைக்கு ஒரு பூ நடிகை விருந்தினராக வந்து கலந்துகொண்டாராம். எனவே அந்த நடிகைகளையும் வைத்துப் படம் எடுத்து இருக்கலாம் என்று பொலிசார் சந்தேகிக்கின்றனர். ஆனால் இதுவரையில் எந்தப் படமும் சிக்கவில்லை.

பிரகாஷின் கைது செய்தியைக் கேள்விப்பட்டுப் பலர் பொலிசாரிடம் புகார் கூற ஆரம்பித்துள்ளனர். அதில் ஒரு பெண் டாக்டர். துப்பாக்கி முனையில் தன்னை மிரட்டி ஆடைகளைக் கழற்றி, நிர்வாணப் படம் எடுத்ததாக முறையிட்டுள்ளார். உடன் பொலிசார் அந்தப் பெண்ணை ரகசியமாக விசாரித்து வாக்கு மூலம் வாங்கி உள்ளனர். அதன் அடிப்படையில் பிரிவு 307ன் கீழ் (கொலை முயற்சி) புதிய வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

இதேவேளை டாக்டர் பிரகாஷ் செக்ஸ் பட விவகாரம் ஒரே பெண்ணுடன் நடிக்க சரவணன்-கணேசன் மோதினர். பரபரப்பான புதிய தகவல் இது.

[illegible]!! டாக்டர் பிரகாஷின் செக்ஸ் பட விவகாரத்தில் மேலும் மேலும் புது தகவல் வந்த வண்ணம் உள்ளது. ஒரே பெண்ணுடன் புளூபிலிமில் நடிக்க சரவணனும், கணேசனும் கடுமையாக மோதிக் கொண்ட தகவல் இப்போது வெளியாகி உள்ளது.

செக்ஸ் டாக்டர் பிரகாஷ் ஏராளமான இளம் பெண்களை புளூபிலிம் எடுத்து தள்ளி உள்ளார் அல்லவா அவரது படங்களில் அதிக அளவில் ஆண் மாடலாக நடித்தது கணேசன் தான்.

பிரகாசின் கிளினிக்கில் வார்டு பாயாக வேலை பார்த்த சரவணனும் இந்த படத்தில் நடித்துள்ளான். அவன் போலிசில் கொடுத்த வாக்கு மூலத்தில் பல புதிய தகவல்கள் வெளியாகி உள்ளது.



சரவணன் கூறி இருப்பதாவது, டாக்டர் பிரகாசைத் தேடி கிளினிக்கிற்கே நிறைய அழகிகள் வருவார்கள். ஆண்களும் வருவார்கள். அவர்களை ஜோடி ஜோடியாக டாக்டர் அழைத்துச் செல்வார். அவர்களை வைத்து புளூபிலிம் எடுக்கும் விவரம் பிறகுதான் எனக்கு தெரிய வந்தது. புதுவையை சேர்ந்த கணேசனையும் அப்படித்தான் ஆண் மாடலாக அவர் பயன் படுத்தி இருக்கிறார். பாவம் அதன் பிறகு தான் அவருக்கு சோதனை ஆரம்பித்தது.

### பெண்களிடம் சில்மிஷம்

என்னவோ தெரியவில்லை, டாக்டருக்கு கணேசனை ரொம்பவும் பிடித்துப்போய் விட்டது. அவனையே திரும்பத் திரும்ப நீலப்படத்தில் நடிக்க வைத்துள்ளார். இதனால் கிளினிக் வட்டாரத்திலேயே அவனுக்கு கிரேடு கூடி விட்டது. கிளினிக்கிற்கு வரும்போது அங்கு வேலை செய்யும் யாரையும் அவன் மதிப்பதில்லை. பெண் ஊழியர்களிடம் மட்டும் சில்மிஷம் செய்வான். அவர்களை சிரிக்க வைப்பான். இதனால் நானும் மற்ற ஆண் ஊழியர்களும் அவன் மீது கடுமையான கோபத்தில் இருந்தோம்.

ஒரு நாள் டாக்டருக்கு துணையாகக் காமாட்சிக்குப்பம் தீவுக்கு (செக்ஸ் தீவு) நான் போனேன். அங்கு மிக அழகான பெண் ஒருத்தியை பார்த்தேன். அவளைப் பார்த்து எனக்கு ஆசை ஏற்பட்டது. அவளை மெல்ல தொட்டேன். உடனே கணேசனுக்கு கடும் கோபம் வந்து விட்டது. பாய்ந்து வந்து என்னை தடுத்தான். டாக்டரும் இதை பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு கணேசன் மீது கோபம் வந்து விட்டது.

### அழகியை அனுபவித்தேன்

சரவணன் அவளை அனுபவிக்க ஆசைப்படுகிறான். அதை நீ யார் தடுப்பதற்கு? என்று கூறி அவனை சத்தம் போட்டார். அதில் இருந்து என்னை பார்த்தால் கணேசன் விரோதியைப் பார்ப்பது போல முறைப்பான். அதே சமயம் அந்த அழகியுடன் உல்லாசமாக இருக்க எனக்கு டாக்டர் வாய்ப்பு கொடுத்தார். அதை படம் பிடித்தார். இதுவும் அவனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. தொடர்ந்து எனக்கு நீலப் படங்களில் நடிக்க வாய்ப்பு தர ஆரம்பித்தார்.

### மாடலை மாற்றுங்கள்

இதற்கிடையில் அமெரிக்காவில் இருந்து டாக்டருக்கு வந்த போனில் ஏன் கணேசனையே அதிகம் நடிக்க வைக்கிறீர்கள். அதை பார்த்து புளித்து போய் விட்டது. வேறு ஆள் கிடைக்கவில்லையா? என்று கேட்டிருக்கிறார்கள். அதன் பிறகு என்னையும் கிளினிக்கில் வேலை செய்யும் வேறு சிலரையும் டாக்டர் மாற்றி மாற்றி பயன் படுத்த ஆரம்பித்தார்.

தனக்கு முக்கியத்துவம் குறைந்து விட்டதால் கோபித்துக் கொண்ட கணேசன் புதுவைக்கு திரும்ப போனான். ஆனால் டாக்டர் தன்னை துப்பாக்கி காட்டி மிரட்டித் தான் புளூபிலிமில் நடிக்க வைத்தார் என்று அவன் கூறுவது சரியான புளுகு மூட்டை. புதுவைக்கு போன பிறகும் டாக்டருக்கு போன் செய்து பணம் கேட்டு மிரட்டினான். மறுபடியும் இங்கு வா பணம் தருகிறேன் என்று டாக்டர் கூறியபோது அதெல்லாம் முடியாது என்று முரண்டு பிடித்தான்.

### டாக்டருக்கு மிரட்டல்

அது மட்டுமின்றி நான் திரும்ப வர வேண்டுமானால் மற்ற ஆண் மாடல்களை எல்லாம் விரட்ட வேண்டும். அப்போதுதான் வருவேன். இல்லாவிட்டால் போலீசிடம் எல்லா ரகசியங்களையும் வெளியிட்டு உங்களை நாறடிப்பேன், என்றும் மிரட்டி உள்ளான். அதற்கு அவர் பயப்படவில்லை.

இவ்வாறு அவன் வாக்குமூலத்தில் கூறியிருப்பதாக தெரிகிறது.

### இண்டர்நெட் கிளப்

டாக்டர் பிரகாஷ் ஒரு வித்தியாசமான இண்டர்நெட் கிளப் நடத்திய விவரமும் போலீசிடம் கிடைத்தள்ளது. பிரபல நிறுவனங்களில் ஒருவர் 4 பேரை உறுப்பினராக சேர்த்தால் அவருக்கு கமிஷன் வழங்குவார்கள். அதே போல அந்த 4 பேரும் வெவ்வேறு 4 பேரை அறிமுகம் செய்ய வேண்டும். இப்படி சங்கிலித் தொடர் போல இத்திட்டம் விரிவடையும. இந்தத் திட்டத்தை தனது இண்டர்நெட் கிளப்பில் டாக்டர் பிரகாஷ் பயன்படுத்தி உள்ளார்.

எம்.எல்.எஸ் என்று அதற்கு பெயரிட்டுள்ளார். மல்டி லெவல் செக்ஸ் என்ற வார்த்தையின் சுருக்கம்தான் அது. இண்டர்நெட் சாட்டிங் பகுதிக்கு வரும் ஆண்களிடம் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்கள் தங்களுக்கு தெரிந்த பெண்களை இந்த கிளப்புக்கு அறிமுகப்படுத்தி வைத்தால் அவர்களுக்கு பரிசுப்பணம் தரப்படும். மேலும் மற்ற உறுப்பினர்கள் அறிமுகப்படுத்தும் பெண்களுடன் இவர்கள் ஜாலி அனுபவிக்கலாம்.

### ரகசிய வார்த்தை

இதற்கு உறுப்பினர்களுக்கு டாக்டர் பிரகாஷ் பாஸ்வேர்டு கொடுத்துள்ளார். ஸ்மூத் கிரிமினல்ஸ், மேல் பேக்டர் என்ற ஆங்கில வார்த்தைகளில் இருந்து எழுத்துக்களை மாற்றி இத்தகைய பாஸ்வேர்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஏராளமான புதிய பெண்கள் இந்த கிளப்பிற்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இது பற்றி தெரியவந்ததையடுத்து கிளப் உறுப்பினராக இருந்தவர்கள் பற்றிய விவரங்களை போலிசார் தேடி வருகிறார்கள்.

# ♥4வது காதலியுடன் லியாண்டர் பயஸ்♥ எதிர்கால மனைவியுடன் மகேஸ் பூபதி


சென்னை நுங்கம்பாக்கத்தில் இடம்பெற்ற டெனிஸ் போட்டிகளில் பங்குபற்ற உலகப் புகழ் பெற்ற இந்திய டென்னிஸ் வீரர்களான லியான்டர் பயஸும் மகேஸ் பூபதியும் தமது காதலிகளோடு வந்து ஒரு கலக்குக் கலக்கிவிட்டுச் சென்றனர்.

எப்போதும் மொட்டைத் தலையுடன் அகாஸியை நினைவ படுத்தும் வகையில் காட்சியளித்த லியான்டர் பயஸ் தலைமுடி, பொன்டிங் தாடியுடன் காட்சி தந்தார். காதலியை அடிக்கடி மாற்றும் லியன்டர் பயஸுக்கு இம்முறை துணையாக வந்தவர் இந்தி நடிகை மகிமா சௌத்ரி. இவர் பயஸின் 4 வது காதலி.

பர்ரேஷ் படத்தில் ஷாருக் கானைக் கைபிடித்த மகிமா நுங்கம் பாக்கம் டென்னிஸ் ஸ்டேடியம் முழுவதிலும் லியன்டர் பயஸின் விரல்களை, தோளை, கழுத்தைப் பிடித்தவண்ணம் வலம்வந்தார். காதலி மகிமாவுடன் தனி அபாட்மண்ட் எடுத்துத் தங்கியிருந்த பயஸின் வருகைக்காக ஸ்டேடியத்தின் வாசலில் மாலைகளுடன் கூட்டம் காத்திருந்தது.

பாதிக்கூட்டம் பயஸைப் பார்ப்பதற்காக மீதிப்பேர் கிளாமர் உடையில் கவர்ந்திழுக்கும் புன்னகையுடன் வரும் மகிமாவைப் பார்ப்பதற்காக.

பயஸின் கூட்டாளியான மகேஸ் பூபதியும் தன் நண்பனைப் போலவே தனது காதலி சுவெதா ஜெய்சங்கருடன் சுத்திக் கொண்டிருந்தார்.



சுவெதா ஜெய்சங்கர்


ஆனால் பயஸைப்போல் பத்திரிகைகளுக்கு ஜோடியாக போஸ் கொடுப்பதைத் தவிர்த்தார். பத்திரிகையாளர்களைப் பார்த்தால் விலகுவது அவர்கள் விலகியதும் மீண்டும் கட்டிக் கொள்வதுமாக மாறிமாறி காதல் நாடகம் அரங்கேறியது.

சுவேதா தன் பெற்றோருக்குப் பக்கத்தில் அமர்ந்து பூபதி ஆடுவதை டென்ஷனுடன் பார்த்துக்கொண்டிருக்க அதைப் புன்முறுவலுடன் ரசித்துக்கொண்டிருந்தார்கள் பூபதியின் பெற்றோர் ஆனால் எதனையும் பொருட்படுதாது தன் காதலனின் ஆட்டத்தில் மெய் மறந்துபோய் இருந்தார் சுவேதா.

# ஸ்போர்ட்ஸ்

## 400 விக்கெட் வீழ்த்திய முரளிக்கு

## ஜனாதிபதி பிரதமர் வாழ்த்து




உலகளாவிய ரீதியில் முதல் தர சுழல் பந்து வீச்சாளராக வலம் வந்து கொண்டிருக்கும் முத்தையா முரளிதரன் தனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையில் 400 விக்கெட் என்னும் மைல் கல்லை தாண்டியுள்ளார். இவருக்கு இலங்கை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளனர்.

இலங்கை சிம்பாப்பே அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியினர் திலான் சமரவீர உபுல் சந்தன ஆகியோரின் அபாரமான இணைப்பாட்டத்தின் உதவியுடன் 418 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். சமரவீர சந்தன ஆகிய இருவரும் எட்டாவது விக்கெட்டுக்காக 146 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதன் மூலம் இலங்கை டெஸ்ட் வரலாற்றில் 8 வது விக்கெட்டுக்காக அதிக ஓட்டங்கள் பெற்ற சாதனையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து பதிலளித்து தமது முதலாவது இன்னிங்சை ஆரம்பித்த சிம்பாப்பே அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான கார்லஸ், கிறிப்பர் ஆகியோர் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி இலங்கை அணிக்கெதிராக முதலாவது விக்கெட்டுக்கான இணைப்பாட்ட சாதனையை ஏற்படுத்தினர். எனினும், தொடர்ந்து வந்த வீரர்கள் முரளி, ஜெயசூரிய ஆகியோரின் அபாரமான பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து தமது விக்கெட்டுக்களை இழந்து சென்றனர். இதன் மூலம் அணித் தலைவர் ஜெயசூரியவும் முரளியும் தலா ஐந்து விக்கெட்டுக்களை பகிர்ந்து சிம்பாப்பே அணியின் முதலாவது இன்னிங்சை 236 ஓட்டங்களுடன் முடித்து வைத்தனர்.

இந்த போட்டி ஆரம்பமாகும் போது 395 விக்கெட்டை பெற்றிருந்த முரளி, இந்தப் போட்டியில் பெற்றுக் கொண்ட 5 விக்கெட்டுடன் 400 விக்கெட் என்ற மைல் கல்லை தாண்டியுள்ளார். சர்வ தேச கிரிக்கெட்டில் 7 வது வீரராக 400 விகக்கெட் சாதனையை படைத்திருக்கும் இவர் மிகக் குறைந்த போட்டிகளிலேயே பங்கு பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது தனது விக்கெட்டை சமிந்த வாஸிடம் பறி கொடுத்ததன் மூலம் ஒரே போட்டியில் 10 விக்கெட்டுக்கள் என்ற சாதனையை முரளிக்கு எட்ட முடியாது தடுத்து நிறுத்திய ஹென்றி ஒலங்காவே இப்போது 400 வது விக்கெட்டாக முரளியால் வீழ்த்தப் பட்டுள்ளார்.

சாதனை மேல் சாதனைகளை ஏற்படுத்தி தனக்கும் தனது நாட்டுக்கும் பெருமை தேடித் தந்து கொண்டிருக்கும் முத்தையா முரளிதரன் மேலும் மேலும் விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனைகளுக்கு சொந்தக்காரன் ஆக வேண்டுமென்று முரசும் தனது வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்துகிறது.

## பொதியாக அவன் கரங்களுக்குள்..

அமுதன் கரங்களுக்குள் சிறைப்பட்டு அவன் நெஞ்சில் சாய்ந்து கிடந்தாள் வள்ளி.

அவன் மேலும் இறுக்கித் தன்னைப் பிழிந்து விடட்டும் என்ற எதிர்பார்ப்போடு தன்னுடலை இளக்கி வைத்திருந்தாள். அவள் இளக இளக அமுதன் கரங்கள் மேலும் மேலும் இறுகின. ஒரு பஞ்சுப் பொதியாக அவன் கரங்களுக்குள் இழைந்தாள்.

அவளை அணைத்தபடியே கூந்தல் வாசனையை முகர்ந்து கிறங்கினான் அமுதன்.

அவள் நெற்றியிலிருந்து வகிடு பிரியும் இடத்தில் மெதுவாக முத்தமிட்டான்.

அவளுடலில் நடுக்கம் ஓடியதை அவன் கரங்கள் உணர்ந்தன.

அவன் கன்னங்களை அவள் நெற்றியில் தேய்த்தான்.

வள்ளி லேசாக முனகினாள்.

"அடடா, கவிதை" என்று சொன்னான் அமுதன்.

என்ன சொல்கிறான் என்பதைப் புரிந்து கொள்ள முடியாது மீண்டும் "ம்" என்று முனகினாள்.

"இன்றைக்கு எனக்கு கவிதைகள் கேட்கும் பாக்கியம்" என்று சொல்லிக்கொண்டே விரல்களால் அவள் உதடுகளைத் தேடி மெல்லக் கிள்ளியதுடன் வருடவும் செய்தான்.

அவள் உணர்ச்சியலைகளில் திக்குமுகக்காடுவது தேகத்தின் நடுக்கத்தில் தெரிந்தது.

"என்ன கவிதைகள்" என்றான் நடுங்கிய குரலில்.

"இப்படியான போர்வேளையில் உன் வாயிலிருந்து பிறக்கும் வார்த்தை வனப்புகளெல்லாம் கவிதையல்லாமல் வேறென்ன" என்றான்.

"போதும் போதும் புலம்பல். கவிதையைக் கொச்சைப் படுத்த வேண்டாம்... சும்மா கண்டதையும் கவிதை என்று கொண்டு..."

"ஏய், இது ஒன்றும் மயக்கப் புலம்பல் இல்லை.

கவிதை என்றால் என்ன மனதைக் கிளர்த்துகிற கணங்கள் தானே கவிதைக் கணங்கள்?

"என்ன? கவிதைக்கு வார்த்தைகள் வேண்டாமா?

சாந்தம் வேண்டாமா? ஓசை நயம், ஒரு கருத்து இதெல்லாம் வேண்டாமா? சும்மா முக்கல் முனகல் எல்லாம் கவிதையாகி விடுமா?"

"ஏன் அதெல்லாம் கவிதையாகக் கூடாதா? என்று சிரித்தபடியே கேட்டான் அமுதன்.

"அதெல்லாம் காமப் பித்தேறியவர்களுக்குத்தான்... இதற்கும் கவிதைக்கும் எந்த சம்பந்தமுமில்லை..." என்று அவள் செல்லமாகக் கோபித்தபடி சொன்னாள்.

அவள் சிணுக்கத்தை ரசித்தபடியே, "காமப்பித்தேறியவர்களுக்கு கவிதை இருக்கக் கூடாதா?" என்று கேட்டான்.

"அவர்களுக்குக் கவிதையை ரசிக்க எங்கே நேரம்...

அந்த மனநிலையில் அவர்களுக்கெங்கே கவிதை?"

"சரி கவிதை என்றால் எது?"

"அதெனக்குத் தெரியாது. ஆனால், வார்த்தைகளில்லாமல் எப்படிக் கவிதை வரும்?"

"வரும்" என்று அவள் முகத்தைத் தன்னை நோக்கித் திருப்பியபடியே சொன்னான் அமுதன். அவள் கண்களுக்குள் தன் கண்களைப் பாய்ச்சியபடி சொன்னான்.



"இந்தப்பார்வை என்னைக் கலக்குகின்ற இந்த உணர்வு கவிதை. உன் உதட்டுச் சுழிப்பில் மறைந்திருக்கும் இளநகை எனக்கு சொல்வது கவிதை... கவிதை என்பது என்னைக் கிளர்த்துவது, என்னைப் புரட்டிப் போடுவது, கண நேரமெனினும் எனக்குள் அதிர்வு தந்து என்னைத் தேன் சுனைக்குள் அமிழ்த்துவது, என்னை நிறைப்பது... இப்படித்தானே எதையெதையோ சொல்லிக்கொண்டு போக முடிகிறது. அதை வார்த்தைகள் தந்தாலென்ன,, நான் பார்க்கின்ற உணர்கின்ற வனப்புத் தந்தாலென்ன?... எழுத்தில் நான் படிக்கிற கவிதை எனக்குள் தருகிற மாற்றங்களை எல்லாம் வேறு எது தந்தாலும் அது கவிதைதானே?" என்று கேட்டு நிறுத்தினான்.

வள்ளி அவனை வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தாள்.

பெரிய சமுத்திரமாய் விரிந்து கிடந்த அந்த விழிகளுக்குள் விழுந்து விடுவோமோ என்று அமுதனுக்குப் பயம் வந்தது.

இமைகளை இதழ்களால் மூடி மென்மையாக முத்தமிட்டான்.

மறு விழிக்கும் இதழ்களை நகர்த்தினான். பின்னர் அங்கிருந்து சற்றுக் கீழே பதிந்தான். அவள் வழவழப்பான கன்னத்தில் இதழ் வழுக்குவதை சுகமாக உணர்ந்தான்.

வள்ளி அவன் கரங்களுக்குள் நெளிந்து திரும்ப முடியாமல் திணறிணாள். அந்த முயற்சியில் மீண்டும் அவளிடமிருந்து முனகல் வெளிப்பட்டது.

இப்போது அமுதனின் உதடுகள் அவள் கழுத்திலிருந்து வழுக்கி கீழ் நோக்கிச் சென்றது.

அவளை இறுக்கிய படியே முகத்தை அவள் மார்பினுள் புதைத்து அழுத்தினான்.

வள்ளி திடீரென சுதாகரித்தக்கொண்டாள். அவன் பிடியிலிருந்து திமிறினாள்.

மறுத்த அவன் முகத்தைத் தன் கரங்களால் பிடித்துத் தள்ளினாள்.

"என்ன?" என்று சிணுங்கியவாறு அவளைப் பரிதாபமாக நோக்கினான் அமுதன்.

"போதும். நீ மிகவும் உணர்ச்சிவசப்பட்டிருக்கிறாய், தப்பு நடக்குமுன் நாம் விலகி விடுவது நல்லது. நாம் நாளைக்குப் பார்த்துப் பேசலாம். இப்போ நீ போய் விடு" என்றாள் தன் முந்தானையைச் சரி செய்ய முயன்றபடி.

அமுதன் தலையை நிமிர்த்திக் கொண்டாலும் கைப் பிடிக்குள் இருந்து அவளை விடுதலை செய்யாமல், முந்தானைக்குள் அடங்கிவிடாமல் தெரிந்த அழகுகளை வெறிகொண்டவன் போலப் பார்த்தான்.

"தேமல் படர்ந்தது போல் வெளிறியிருக்கும் உன் மார்புகள் உன் ஆசைகளையும் சொல்லிக் காண்பிக்கின்றன. நில்" என்றான்.

"முடியாது நீ தப்புச் செய்வாய்" என்றாள் அவள்.

"இல்லை, நான் உனக்கு துன்பம் நேரும்படி நடந்து கொள்ள மாட்டேன். இந்த அழகிய மென்மையான மார்பகங்களிலே சித்திரம் வரைந்து விடுகிறேன். அதற்கு என்னை அனுமதி" என்று கெஞ்சினான்.

"சித்திரமெல்லாம் நானே வரைந்து கொள்வேன். பிறர் வரையும் சித்திரங்களில் எனக்கு விருப்பமில்லை. நீ மிகவும் மோகாவேசமுற்றிருக்கிறாய்... இப்போது நீ போய் விடுவதுதான் நம் இருவருக்கும் நல்லது" என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் வள்ளி.

அவள் போவதைத் தாபமுடன் பார்த்தவாறு அமர்ந்திருந்தான் அமுதன்.

**..... மாதராய்**
**ஐய மிதிர்ந்த சுணங்கு அணி**
**மென்மலை மேல்**
**தொய்யில் எழுதுகோ**
**மற்று என்றான் யாம்பிறர்**
**செய்புறம் நோக்கி**
**இருந்துமோ நீபெரிது**
**மையலை மாதோ விடுக என்றேன்...**

*(கலித்தொகை 11 15 - 19)*

இலக்கிய நயம்

தருவது முழடில்யன்

## சிந்தியா பதில்கள்

**★ தேர்தல் முடிந்து இவ்வளவு நாட்களாகி விட்டன. தமிழ்க் கூட்டமைப்பினர் எங்கே, என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?**

இ. தியாகசீலன், திருகோணமலை.

*ஒட்டகத்திற்கு இடம் கொடுத்த கதையாகக் கதி கலங்கிப் போயிருக்கிறார்கள் அதிலுள்ள மூத்த கட்சியினர். அமைப்பை நிறுவனமயப்படுத்த வேண்டும் என்ற கருத்தை வன்னிக்குள்ளிருந்து பெற்று வந்ததாகச் சொல்லி மிரட்டுகிறார்கள் இவர்கள் எடுத்து மடியில் கட்டிக்கொண்ட மற்றக் கட்சியினர். பதினைந்து எம்.பி.க்கள் என்ற சாதனைக்கு ஆசைப்பட்டு, தனித்துவத்தைச் சிதைத்தழிக்கும் சதிக்குள் மாட்டுப்பட்டுப் போனோமே என்று கலங்குகிறார்களாம் சம்பநடதானந்த சேனாதிகள்.*

**★ சில தனியார் வானொலி அறிவிப்பாளர்கள் தங்கள் சோகங்களை வெளிப்படுத்த தமது நிகழ்ச்சிகளைப் பயன்படுத்துவது பற்றி உங்களங கருத்து என்ன?**

த. நிவேதா, திருகோணமலை.

*ஸ்ருடியோவுக்குள் அவர்கள் பார்வைக்கு எதிரே இதை எழுதி வைத்துக் கொள்ளச் சொல்ல வேண்டும். "நிகழ்ச்சிகளும் நேரமும் நேயர்களுக் கானவை. நீங்கள் அதை கொள்ளையடிக்க வேண்டாம்"*

**★ தொலைக்காட்சி ஒளிபரப்புகளில் பார்த்த படங்களையே திரும்பத் திரும்ப ஒளிபரப்புகிறார்களே ஏன்?**

கே. சுதாகர், அக்கரைப்பற்று 09.

*இந்த வருத்தம் குறைய வேண்டுமானால், மெகா சீரியல்களைத் தொடர்ந்து பார்த்துவர வேண்டும். புதுப்புது 'எபிசோட்'கள் என்று சொல்லிக்கொண்டே ஒரே மாவைத் தொடர்ந்து அரைத்துக்கொண்டிருப்பதைப் பார்ப்பதன் மூலம் ... ஒரே படத்தையே எத்தனை முறை வேண்டுமானாலும் பார்க்கலாம் என்ற தெளிவுக்கு நீங்கள் வர முடியும்.*

**★ பெற்றெடுத்த உள்ளம் என்றும் தெய்வம் என்ற ரீ. எம்.எஸ்ஸின் பாடல் எந்தப் படத்தில் இடம்பெற்றுள்ளது?**

குமாரி, கொழும்பு 06.

*கண்ணா நலமா.*

**★ சிந்தியா, என் விரோதிகள் நான்கு பேர் உண்டு. நால்வரையும் கொலை செய்ய வேண்டும். சட்டத்தின் பிடியிலும் சிக்காமல் இருக்க வேண்டும். ஜோக் வேண்டாம். தகுந்த பதிலை தரவும்?**

எம். அன்வர், குவைத்.

*கைக்கருகே வெண்ணெய் இருக்க, நெய் கேட்டு இலங்கைக்கு எழுதுவானேன்.*

**★ தாய்க்கும் தாரத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன சிந்தியா?**

பி.கே.ரவி, லிப்பகலை.

*தாரம் தாயாகவும் முடியும்.*

**★ கமலின் 'பம்மல் கே சம்பந்தம்' படத்தில் அப்பாஸுக்கு ஜோடி முதலில் தேவயாணி என்றார்கள். தேவயாணியின் திடீர்திருமணத்தால் ஸ்நேகா என்றார்கள். ஆனால் அண்மையில் வந்த ஒரு சஞ்சிகையில், அப்பாஸுக்கு ஜோடி தேவயாணி என்றும், ஸ்நேகா வேறு ஒரு பாத்திரத்தில் நடிப்பதாகவும் செய்தி வந்துள்ளது. எது உண்மை. நீங்களாவது சொல்வீர்களா?**


வ. துஷ்யந்தன், வவுனியா

*தேவயானியைப் போட கமல் முயற்சி செய்ததாகவும், தயாரிப்பாளர் விநியோகஸ்தர்கள் தரப்பில் அது தீர்மானகரமாக நிராகரிக்கப்பட்டு விட்டது தான் உண்மை என்கிறார்கள். படம் வந்துவிட்டது. பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.*

**★ எங்கள் நாடு பணக்கார நாடாக வர ஆசைப்படுகிறேன். என்ன செய்யலாம்?**

பா. தனஞ்ஜன், கொழும்பு 11.

*கண்ணை மூடிக்கொண்டு தூங்கிப்பார்க்கலாம். (அந்தப் பதில் உங்களுக்கு சினத்தை ஏற்படுத்தியிருந்தால், யுத்தம் செய்யும் இரு தரப்பினரையும் நிறுத்தச் சொல்லி, நாட்டின் சகல இன மக்களும் மறுக்க முடியாதபடி ஒரு தீர்வை நீங்கள் தயாரித்து (உதவிக்கு ஏனையோரையும் சேர்த்துக் கொள்ளலாம். அதை சண்டையிடும் இரு தரப்பும் எற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்த, மக்களைச் சேர்த்துக் கொண்டு வீதியில் இறங்கும் துணிவைப் பெறுங்கள். குறைந்த பட்சம் நாட்டின் பிரமுகர்கள், எழுதிக் குவிப்பவர்கள், பெருந்தகைகள் எனப்படுவோரைக் கொண்டாவது இதைச் செய்ய முடியுமா என முயலுங்கள். இல்லாவிட்டால் மீண்டும் முதல் வரி தான்...)*



**★ சில கவிதைகள் புரியவில்லை, சிலர் பேசுவதே புரியவில்லை, அதையெல்லாம் புரிந்து கொள்ள வேண்டுமானால் நான் என்ன செய்ய வேண்டும்?**

வா. இரத்தினவேல், தெஹிவளை.

*அவர்களது அலைவரிசைக்கு மாற வேண்டும். அனுபவங்களால் படிப்பால் தேடல்களால் ஏறக்குறைய ஒத்த மனோட்டத்துக்கு வந்துவிடுபவர்களிடையே புரிந்துகொள்ளுதல் சாத்தியமாகிறது. சென் (Zen) இதன் தத்துவ உரையாடல்கள் இதற்கு நல்ல உதாரணம்.*

*உம்மான் என்பவர் மிகப் பெரிய செங்குரு. அவரிடம் வந்து ஒரு துறவி கேட்கிறார். இலைகள் எல்லாம் கீழே விழுந்து மரங்கள் மொட்டையாக இருக்கும்போது என்ன நடக்கும்?*

*குருவின் பதில்: பொன்னான காற்று.*

*உடனே அந்தத் துறவியார் குனிந்து குருவின் கால்களைத் தொட்டு "கருணையோடு இவ்வாறு தெளிவு தந்ததற்கு நன்றி" என்கிறார்.*

*நாங்கள் அவர்களது சிந்தனை ஓட்டத்துக்குள் இல்லாவிட்டால், இது வெறும் சிரிப்புக்குரிய பைத்திய உரையாடலாகத் தெரியும். மனதில் உள்ள குப்பை எண்ணங்களெல்லாம் கழன்று தியானத்தின் மூலம் நம்மைச் சுத்தப் படுத்திக் கொள்ளும்போது என்ன நடக்கிறது என்ற கேள்விக்கு உதிர்ந்த பொன்னிற இலைகள் எல்லாம் காற்றில் சுதந்திரமாக ஆடுவதைப் போல நாமும் பொன்னிறக் காற்றில் ஆட ஆரம்பித்துவிடுவோம். என்று பதில் கிடைத்ததாக விளங்கிக்கொண்டால் நாமும் அவர்களுடைய அலைவரிசைக்குள் இருப்போம். இப்படியெல்லாம் அலட்டிக்கொள்ள வேண்டும்தானா என்று யோசித்தால் சமையல் வாயு விலை குறைப்பிற்காக சந்தோசப் பட்டுக் கொண்டிருக்கலாம்.*

**★ இன்றைய சூழலில் தமிழ் எம்.பிக்கள் செய்யவேண்டியது குறித்த சிந்தியாவின் ஆலோசனை என்ன?**

வசந்தி கிருஷ்ணகமார், பலங்கொடை.

*தமிழ் கூட்டமைப்பில் போட்டியிட்டு தோல்வி கண்ட இரு தலைவர்கள் எம்.பி.க்களின் பவறைக் குறைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். பொறுங்கள் செயலாளரும் மாவட்ட அமைப்பாளரும் வரட்டும் ஆலோசனைகளை அவர்களிடம் சொல்லலாம்.*

# மன்னாதி மன்னன்

**90**

விக்கிரமாதித்த மாமன்னரின் தெய்வீக அரியணையின் ஒன்பதாவது படிக்கட்டில் நின்ற நவரத்தினவல்லிப் பதுமை கூறிய கதைகளைக் கேட்ட போஜ மாமன்னன் தன் அரண்மனை திரும்பினார். அடுத்த நாள் அதிகாலையில் எழுந்து கடன்களை முடித்துக்கொண்டு இஷ்டதெய்வத்தை வணங்கினார்.

தெய்வ வழிபாட்டை முடித்துக் கொண்டு பரிவாரங்கள் புடைசூழ போஜராஜன் நேராக, விக்கிரமாதித்த மன்னனின் அரியாசனம் வைக்கப்பட்டிருந்த அரண்மனை மாமண்டபத்தைச் சென்றடைந்தார். அரியாசனத்துக்குரிய பூஜைகளை புரோகிதர்கள் முறைப்படி முடித்தனர். மலர்களை தன் இரு கைகளிலும் ஏந்திய மன்னர் அரியணையில் தூவிய பின்னர் அரியணைப்படிகளில் ஒவ்வொன்றிலும் ஏறி ஒன்பதாவது படியை அடைந்து பத்தாவது படியில் காலடி வைத்ததும், அப்படியில் அதுவரை சிலையாக நின்றிருந்த கனகாபிஷேகப் பதுமை உயிர்பெற்று அழகான ஒரு பெண் போல் நின்று போஜமாமன்னர் தொடர்ந்து ஏற முடியாமல் தடுத்தது.

இதனைத் தொடர்ந்து பதுமை மகராஜனிடம் பேச ஆரம்பித்தது. "போஜமாமன்னரே இத்தெய்வீக அரியணையில் இரண்டாயிரம் ஆண்டு காலம் நீதி வழுவாது அமர்ந்து ஆட்சி செலுத்திய அதிதீரவீர பராக்கிமசாலியான எங்கள் மாமன்னர் விக்கிரமாதித்த பூபதியின் ஆற்றல்களைப்பற்றி இதற்கு முன்னுள்ள ஒன்பது படிக்காவல் பதுமைகளும் கூறிய கதைகளைக் கேட்டீர்கள். இப்பொழுது நான் கூறப்போகும் கதைகளையும் கேட்டுவிட்டு தாங்கள் தங்களை சுயபரிசோதனை செய்து கொண்டு மேலே செல்லலாம்" என்று கனகாபிஷேகப் பதுமை கூறியது; தொடர்ந்து தனது கதையைக் கூறத் தொடங்கியது:

சரயு நதிக்கரையோரத்தில் உமாபதி என்ற அழகான நகரம் இருந்தது. இந்நகரை கௌசிக மன்னர் ஆட்சி புரிந்தார். இவருக்கு நூறு புதல்வர்கள் இருந்தனர். நூறு புதல்வர்களையும் அழைத்துக் கொண்டு ஒருநாள் காட்டுக்கு வேட்டையாட சென்றார்.

அதிகாலை முதல் நண்பகல் வரை கானகம் எங்கும் அலைந்து வேட்டையாடினார்கள். களைப்பு மிகுதியால் மர நிழல்களில் அமர்ந்து களைப்பாறினர். காவலர்கள் தண்ணீர் எடுத்துவர காடு முழுவதும் அலைந்தனர். ஆனால் எங்குமே நீர் நிலைகளோ சிற்றருவிகளோ நதிகளோ தென்படவில்லை.

அமைச்சர் விபூதனை அழைத்து எங்காவது தண்ணீர் தேடி எடுத்துக் கொண்டு வரும்படி மன்னர் அனுப்பி வைத்தார். அமைச்சர் விபூதன் ஏவலாளர்களையும் அழைத்துக் கொண்டு காடு முழுவதும் அலைந்தும் தண்ணீர் கிடைக்கவில்லை.

எதிர்பாராத வகையில் அமைச்சர் விபூதனின் கண்களுக்கு அழகிய நந்தவனம் ஒன்று தென்பட்டது.

அந்தப் பிரதேசத்தில் தண்ணீர் இல்லாத போதும் நந்தவனம் பசுமையாகக் காட்சியளித்தது. எனவே அந்தப் பூங்காவுக்குள் எப்படியும் நீர் நிலை ஏதாவது இருக்க வேண்டும் என்று கருதி உட்சென்றார். அந்த நந்தவனத்தின் நடுவில் ஓர் ஆசிரமம் இருந்தது. அமைச்சர் மட்டும் ஆசிரமத்தின் உள்ளே சென்றார். நடுநாயகமாக ஒரு மாமுனிவர் வீற்றிருந்தார். அமைச்சர் விபூதன் முன் சென்று முனிவருக்கு வணக்கம் செலுத்தினார். கண்திறந்த முனிவர் அமைச்சரைப் பார்த்து, "மன்னர் கௌசிகனின் அமைச்சர் விபூதன் தானே நீர்? நீர் தேடி அலைந்து இங்கு வந்துள்ளீர். எங்கும் அலையவேண்டாம். உமது மன்னர் இருக்குமிடத்தின் பின்புறமாக போதுமான அளவு தண்ணீர் பெருக்கெடுத்தோடும் கங்கை நதி பாய்ந்தோடுகிறது. வேண்டியளவு நீரை நீங்கள் அனைவரும் பருகலாம். போய் வாரும்", என்று கூறி அமைச்சரை அனுப்பிவைத்தார்.

முனிவர் கூறியபடி அமைச்சர் வந்து பார்த்தபோது கங்கை நதி பாய்ந்து ஓடுவதையும் நதியின் இருபுறமும் அழகிய நந்தவனம் அமைந்திருப்பதையும் கண்டு திகைப்படைந்தார். அரசரும் பரிவாரங்களும் அந்த நதியில் நீரருந்திவிட்டு ஓய்வாக இருந்ததையும் கண்டு திகைத்தார்.

அழகிய பூங்காவையும் நதியையும் கண்டு மனம் களித்த மன்னர் கௌசிகர் தான் இன்னும் சில நாட்கள் அதே இடத்தில் தங்கப்போவதாகவும் அவருக்கும் பரிவாரங்களுக்கும் உணவு தேடித்தருமாறு அமைச்சருக்குக் கூறினார்.

அரசரின் புதிய ஆணையைக் கேட்ட அமைச்சர் விபூதன் செய்வதறியாமல் திகைத்தார். இருப்பினும் தான் ஏற்கெனவே ஆசிரமத்தில் கண்ட "மாமுனிவர் அரசருக்கும் பரிவாரங்களுக்கும் வேண்டிய உணவ கிடைக்க எப்படியாவது ஏற்பாடுசெய்வார்" என்று மனதார எண்ணியவாறு மீண்டும் முனிவரை நாடிச் சென்றார்.

அமைச்சர் விபூதனைக் கண்ட முனிவர் "அமைச்சரே, உமது அரசருக்கும் பரிவாரங்களுக்கும் எவ்வளவு காலம் உணவு வேண்டுமோ அவ்வளவும் நான் அளிக்க ஆயத்தமாக உள்ளேன். அரசரையும் பரிவாரங்களையும் உடனடியாக இங்கே அழைத்துவாரும்", என்று கூறியனுப்பிவைத்தார். அமைச்சரும் அரசரிடம் சென்று ஆசிரமத்தில் நடந்த சம்பவங்களைக் கூறினார்.

அமைச்சர் விபூதன் சென்றதும் வசிட்ட முனிவர் தேவலோக வாசிகளுக்கெல்லாம் வேண்டிய அனைத்தையும் வழங்கும் காமதேனுவை வரவழைத்தார். பசுவின் உருவில் அமைந்த காமதேனு முனிவரிடம் ஓடோடி வந்தது.

நூற்றுக் கணக்கான அதிதிகளுக்கு அறுசுவை உண்டியும் ஏனைய வசதிகளும் செய்து கொடுக்குமாறு முனிவர் காமதேனுவிடம் வேண்டினார். காமதேனுவும் முனிவரின் கோரிக்கைக்கு இணங்கி கௌசிக மன்னரும் பரிவாரங்களும் வசிட்ட மாமுனிவரின் ஆசிரமத்தின் அருகில் வந்து தங்கி உணவருந்தி ஓய்வெடுப்பதற்கேற்ற மாபெரும் பந்தல்களை நொடிப்பொழுதில் உருவாகியது. அமைச்சர் விபூதன் இந்த அதிசயத்தைப் பார்த்து பிரமித்து நின்றார். வசிட்ட முனிவர் அமைச்சரை நிதானப்படுத்தி, அரசரையும் பரிவாரங்களையும் அழைத்து வருமாறு கேட்டுக் கொண்டார்.

மன்னர் கௌசிகர் தமது பரிவாரங்களுடன் ஆசிரமத்தை வந்தடைந்ததும் அவரும் பிரமிப்படைந்தார். அவரும் அவருடன் வந்த அனைவரும் வசதியாக அமர்ந்து உணவு உட்கொள்ளவும் சிரமபரிகாரம் செய்து கொள்ளவுமான சகல வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. தொலைவில் வந்து கொண்டிருக்கும் போதே அங்கு அவர்களுக்குப் பரிமாறப் படுவதற்காகத் தயாராக வைக்கப்பட்டிருந்த உணவு வகைகளின் மணம் அவர்களைத் திக்குமுக்காட வைத்து விட்டது.



ஆசிரமத்துள் அமர்ந்திருந்த வசிட்டமா முனிவரை மன்னர் கௌசிகர் உட்சென்று வணங்கி ஆசி பெற்றார். முனிவரின் வலது புறமாக நின்றிருந்த காமதேனு எனும் தெய்வீகப் பசுவின் தோற்றம் அரசரை வியப்பிலாழ்த்தியது. இத்தகைய அழகு வாய்ந்த ஒரு பிராணியை அவர் கண்டதே இல்லை. வியப்பு மேலீட்டால் மன்னர் பார்த்த பார்வையில் காமதேனு சற்றுத் தடுமாறிப் போனது. அப்பார்வையில் கபடம் தென்பட்டதையும் காமதேனு உணர்ந்து கொண்டமையினால் முனிவரின் பின்புறமாகச் சென்று தன்னை மறைத்துக் கொண்டது.

அரச அரண்மனையில் உள்ள வசதிகள் சிறிதளவேனும் இல்லாத 'ஒரு கானகத்தின் நடுவே உள்ள ஓர் ஆசிரமத்தில் ஒரு சில நாழிகைக்குள் நூற்றுக்கணக்கானோருக்கு அறுசுவை உணவு படைக்க எவ்வாறு சாத்தியப்படும்' என்று அதிசயத்திலாழ்ந்த மன்னரை அவதானித்த முனிவர், "கௌசிக மன்னரே, உமது மனத்திலுண்டாகும் சந்தேகம் பற்றிய விளக்கத்தை நான் பின்னர் கூறுகிறேன். முதலில் சென்று பசியாறி விட்டு வாரும்" என்று அரசரை உணவு பரிமாறும் கொட்டகைக்கு அனுப்பி வைத்தார்.

அரசரும் பாரிவாரங்களும் உணவு உட்கொள்ளுவதற்காக அத்தனை பேருக்கும் சரி அளவாகவே இலைகள் போடப்பட்டிருந்தன. இலைகளில் சகல விதமான உணவுப் பண்டங்களும் அவரவர் விருப்பத்துக்கேற்ற வகையில் அளவாக வைக்கப்பட்டிருந்தன. பருகுவதற்குப் பழரசவகைகளும் வைக்கப்பட்டிருந்தன. அனைவரும் வயிறார உண்ட பின்னர், சற்றுப் படுத்துறங்குவதற்கேற்ற வசதிகளும் அனைவருக்கும் பிறிதொரு கொட்டகையில் வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

சில நாழிகை ஓய்வின் பின்னர் எழுந்திருந்த மன்னர் கௌசிகர் முனிவரைப் பார்க்கச் சென்றார். தன் முன்னிலையில் அமரச் செய்த முனிவர், மன்னரின் உள்ளத்தில் எழுந்த ஐப்பாடுகளுக்கு பதிலளிக்குமுகமாக, "மன்னரே, இத்தகைய வேகத்தில் இத்தனை பேருக்கும் எவ்வாறு இத்தகைய ஏற்பாடுகளைச் செய்ய முடிந்தது என்று உமக்கு ஏற்பட்ட முதல் சந்தேகத்துக்கு இதோ என் பின்னால் நின்று கொண்டிருக்கும் என் மகளுக்கிணையான இவள்தான் காரணம்," என்று கூறினார். காமதேனுவும் முன்னால் வந்து மன்னருக்கு வணக்கம் செலுத்தியது.

முனிவர் தொடர்ந்து, "கௌசிக மன்னரே, காமதேனுவால் முடியாதது இந்தப் பிரபஞ்சத்தில் எதுவுமில்லை. எத்தகைய காரியத்தையும் நொடிப்பொழுதில் செய்து முடிக்கக் கூடிய ஆற்றல் படைத்தவள். காமதேனுவின் கருணையினால்தான் தேவலோக வாசிகள் சகல சௌபாக்கியங்களையும் அனுபவிக்கின்றனர்;" என்று தெரிவித்தார்.

இவ்வாறு காமதேனுவின் பெருமைகளையெல்லாம் முனிவர் கூறக்கேட்ட கௌசிக மன்னருக்கு விதவிதமான எண்ணங்கள் எல்லாம் மனத்தில் எழலாயின. 'இத்தகைய ஒரு தெய்வீகப் பிராணி சாதாரணமாகக் காட்டில் தனிமையில் தவம் செய்யும் ஒரு முனிவரிடம் இருப்பதில் என்ன பயன்? நாட்டை ஆளும் மன்னனான என்னைப் போன்ற ஒருவனிடம் இருக்குமானால், மக்கள் அனைவரும் எக்குறையுமில்லாமல் வாழலாமே' என்று எண்ணமிட்டார்.

"மாமுனிவரே, தங்களிடம் ஒரு விண்ணப்பம். எங்கள் நாட்டில் வேண்டும்போது மழை கிடைப்பதில்லை. இதனால் விளைச்சலும் அரிதாசி விடுகிறது. பசியும் பிணியும் மலிந்து மக்கள் துன்பதுயரங்களுக்கு ஆளாகின்றனர். இத் தகைய துயரங்களைப் போக்குவதானால் தங்களிடம் இருக்கும் காமதேனு என்போன்ற அரசரிடம் இருக்க வேண்டும். அப்போது நாட்டு மக்கள் அனைவரும் சுபீட்சமாக வாழ முடியும் அல்லவா? ஆகவே கருணை கூர்ந்து காம தேனுவை எனக்குத் தந்துவிடுங்கள்" என்று மன்னர் முனிவரிடம் கேட்டுக் கொண்டார்.

இதனைக் கேட்ட வசிட்ட முனிவர் பலமாகச் சிரித்தார். சற்றுப் பொறுத்து நிதானமாக, "கௌசிக மன்னரே, பூமியில் பிறந்த மனிதர்கள் தங்கள் தங்கள் விதிப்படி வாழ வேண்டியவர்கள். அவர்கள் அனுபவிக்கும் இன்பமோ துன்பமோ அவரவர்களுடைய கா்ம வினைப்படியே நடக்கும். எவ்விதமான பணியிலும் ஈடுபடாமல், உழைத்துப் பயனடையாமல், மனிதர் சமைத்த உணவையும் உண்டு தயாராக இருக்கும் வசதிகளையும் அனுபவித்து வாழத் தலைப்படலாகாது. அதுதவிர என் மகள் காமதேனு அரண்மனை வாழ்வை மேற்கொள்ளவிரும்பமாட்டாள். அவள் ஒரு சுதந்திரப் பறவை. எனவே காமதேனு மீது நீர் வைத்துள்ள கருத்து எப்போதும் நடைபெறப் போவதில்லை. நீர் உமது பரிவாரங்களையும் அழைத்துக் கொண்டு உடனே இங்கிருந்து உமது நாட்டுக்குப் போய்ச் சேர்ந்து விடு!" என்று அறிவுரை பகர்ந்தார்.

**(மன்னன் வருவான்...)**

**இராஜகுமாரன்**

# 'சிரி' கெட் இசை விழா

*கிரிக்கெட் 'இசை விழா' சீசனையொட்டி, சவுரவ் கஞ்குலி தலைமையிலான இசைக்குழு சமீபத்தில் தொடர்ச்சியாக பல இடங்களில் இசை நிகழ்ச்சி நடத்திவந்திருக்கிறது. இசை நிகழ்ச்சியில் நடந்த சுவாரஸ்யமான அனுபவங்களை ஒளிவு மறைவின்றி நம்மிடம் பகிர்ந்து கொள்ள வருகிறார் ஆஸ்தான வித்வான், கலைமாமணி சவுரவ். இசை மணம் கமழ அவருடன் ஒரு பேட்டி:*



**வணக்கம் சவுரவ் அவர்களே! இன்னிசைத் திறமையால் இங்கிலாந்து ரசிகர்களை கட்டிப் போட்டு விட்டீர்களாமே?**

இங்கிலாந்து மட்டுமல்ல. அவுஸ்திரேலிய... அது எந்த நாடாக இருந்தாலும், இந்தியா வந்து எங்கள் கச்சேரியை கேட்கும் அந்த நாட்டவர் மனதைப் பறிகொடுத்து செல்கிறார்கள். ஆனால் நாம் அவர்கள் நாடுகளுக்கு சென்று கச்சேரி நடத்தும் போதுதான், அவர்களை கவர முடியவில்லை.




**வெளிநாட்டு இசைப்பயணங்கள் தொடர்ந்து தோல்வியில் முடிவது ஏன்?**

இசைப்பயணங்கள் தோல்வியில் முடிவதைக் குறிப்பிடும் நீங்கள், அங்கும் சச்சின் போன்ற நமது கலைஞர்கள் சிலர் தனி ஆவர்த்தனம் நடத்தி வந்திருப்பதை மறந்து விடுகிறீர்களே?

**தென் ஆப்ரிக்க இசைப்பயணத்தின் போது, மிருதங்கத்தை சேதப்படுத்த முயன்றதாக சச்சின் மீது ஒரு புகார் எழுந்ததே?**

இது அபத்தமான குற்றச்சாட்டு. இசை உலகில் நமது புகழை குழி தோண்டி புதைப்பதற்காகவே எழுப்பப்பட்ட குற்றச்சாட்டு. சர்வதேச அளவில் இசைக்கலைஞர்களில் சச்சின் தான் ஜென்டில்மேன். இந்த குற்றச்சாட்டுக்கு சச்சினே உங்களிடம் விளக்கம் அளிப்பார்.

<u>சச்சின்:</u> நான் மனச்சாட்சிக்குப் பயந்து தான் கச்சேரிகளில் மிருதங்கம் வாசிக்கிறேன். தென் ஆப்ரிக்காவில் நடந்த அந்த சம்பவம் என் மனதைப் பாதித்து விட்டது. உண்மையில், மிருதங்கத்தில் இருந்த அழுக்கை எடுப்பதற்காகத்தான் விரல் நகத்தால் சுரண்டினேன். அதைப் போய் மிருதங்கத்தை சேதப்படுத்துவதாக தவறாக அர்த்தம் எடுத்துக் கொண்டால் நான் என்ன செய்ய முடியும்?



**(மீண்டும் சவுரவிடம் கேள்வி) மெல்லிசைப் பாடகர் வீணை வித்வான் வீரேந்தர் சேவக் பெரிய சர்ச்சையை கிளப்பி விட்டாராமே?**

அவர் எப்போதுமே உச்சஸ்தாயியில்தான் பாடுவார். அன்றைய கச்சேரியில் வழக்கத்துக்கு மாறாக கொஞ்சம் அதிக சப்தமாக பாடி தொலைத்து விட்டார். உடனே அதை 'வொய்ஸ் பொல்யூஷன்' என்று சொல்லி, அடுத்த கச் சேரியில் பாடுவதற்கு அவருக்கு தடைவிதித்து விட்டார்கள். நமது இந்திய இசை வாரியம்கூட முதலில் கடுமையாக எதிர்த்துப் பார்த்தது. ரொம்ப முரண்டு பிடித்தால், அடுத்து கச்சேரி நடத்த எந்த சபாவும் தர மாட்டோம் என்று எச்சரித்து விட்டார்கள். வேறு வழி..? அதெல்லாம் முடிந்த கதை. இப்போது அவர் கொஞ்சம் அடக்கி வாசிக்கிறார் கவனித்தீர்களா?

**சரி! கடம் வாசிக்கும் போது தவறுதலாக கை நழுவி தீப்தாஸ்குப்தா குடத்தை உடைத்து விட்டாராமே?**

அது உண்மைதான். பயிற்சியின் போதே அவர் பல முறை கடத்தை உடைத்துக் கொண்டிருந்தார். அவர் பாவம் என்ன செய்வார்? ஷாப்பிங் செல்வதற்காக டிரஸ்ஸிங் ரூமில் நாங்கள் ரெடியாகும் போது, பவுடர் டின்னை தூக்கிப் போட்டாலே அதைப் பிடிக்க முடியாமல் தவற விடுவார். அவர் கடத்தை கை தவறிப் போட்டு உடைத்ததை நாம் பெரிது படுத்தக்கூடாது. அவர் வளரும் கலைஞர். 2003ம் ஆண்டு தென் ஆப்ரிக்காவில் நடக்கும் உலக சங்கீதப் போட்டிகளுக்கு அவரை தயார் படுத்துகிறோம். அவரும் தயாராகி விடுவார்.

**உங்கள் குழுவின் ஆஸ்தான பாடகர்கள் அனில் மற்றும் சிங் இருவரும், வெளிநாடுகளில் சிறப்பாக பாடி அசத்துவதில்லையே?**

அவர்கள் இருவருக்கும் 'சைனீஸ் டிரபுள்'. வெளிநாடுகளில் குளிர் தாங்காமல் தொண்டை கட்டிக் கொண்டு பாட முடியாமல் அவஸ்தைப் படுகிறார்கள். ஆனால் இங்கு உள்ளூர் கச்சேரிகளில் பின்னி விடுகிறார்கள் கவனித்தீர்களா?

**அதெல்லாம் சரி! கொஞ்ச நாளாகவே கச்சேரிகளில் உங்கள் பங்களிப்பு குறைந்துகொண்டே.. வருகிறது. பாட ஆரம்பித்தாலும், இரண்டு வரி முழுசாகப் பாடுவதற்குள் உதறல் எடுத்து திரும்பி விடுகிறீர்களே?**

எனக்கே இது கவலையளிக்கிறது. அடுத்து வரும் கச்சேரிகளில் இழந்த திறமையை மீண்டும் பெறுவேன்.

**இதே பதிலை இதுவரை நாலைந்து முறை சொல்லி இருக்கிறீர்களே?**



(சற்றுக் கோபத்துடன்) அப்படியானால்,பதில் தெரிந்து கொண்டே ஏன் திரும்பத் திரும்ப கேள்வி கேட்கிறீர்கள்?

**அதானே! பாவம் உங்களைச் சொல்லியும் குற்றமில்லை. முன்பெல்லாம் ஷார்ஜாவில் கச்சேரி நடத்தி கை நிறைய காசுடன் திரும்பி வரலாம். இப்போது அதுவும் கட் ஆகிவிட்டது. அடுத்தமாதம் நடக்கும் கச்சேரிகளிலாவது திறமை காட்டுங்கள் சவுரவ் அவர்களே! இவ்வளவு நேரம் பொறுமையாக பேட்டி கொடுத்தற்கு நன்றி. நாங்கள் வரட்டுமா...!** ■


ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண் னுக்கு மின்னிடும் பொன்னகை பெருமை
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# அதிகாரசாதனை





அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


# தற்பாதுகாப்பு



## சகவாசம்

↑ஜெர்மனியில் பிறந்த மார்க்கிரெட் ரேயும் அவரது கணவரும் மிரு கங்கள் மீது மிகுந்த பற் றுக் கொண்டவர்கள். தற்போது அமெரிக்கா வில் வாழும் இந்தத் தம்பதியினர், மிருகங்கள் தொடர்பான குழந்தை நூல்கள் பலவற்றையும் எழுதியுள்ளனர். அவரது நூலின் கதாபாத்திரங் களான குரங்குகளை பொம்மைகளாகச்செய்து விற்றும் வருகின்றனர். தனது படைப்புகளுடன் போஸ் கொடுக்கும் ரேயைத்தான் இங்கே காண்கிறீர்கள். ■



↑ஒரு நாட்டின் அதிபராக நீண்டகாலம் பதவி வகித்தவர் என்ற கின்னஸ் சாதனைக்கு உரித்தான வர் கியூபா நாட்டின் அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோ.

கியூபாவில் சர்வாதிகார ஆட்சி நடத்திய ஃபுல்ஜன் சியேரா ஃபட்டிஸ்டாவை கெரில்லாப் புரட்சி ஒன்றின் மூலம் பதவியிலிருந்து இறக்கிவிட்டு 1976ம் ஆண்டு டிசம்பரில் கியூபா தலைவராக பதவி யேற்ற காஸ்ட்ரோ இன்றுவரை அந்த நாட்டின் அதிபராக இருந்து வருகிறார்.

இவர் இன்னொரு வகையிலும் சாதனைக்குரியவர். கியூபாவின் அண்டை நாடான அமெரிக்காவின் உளவுப் பிரிவுகளால் மேற்கொள் ளப்பட்ட அதிகப்படியான கொலை முயற்சிகளிலிருந்து உயிர் தப்பியவர் என்ற பெருமையும் காஸ்ட்ரோவையே சாரும். ■



↑அடிக்கடி பூகம்பங்கள் நிகழும் ஜப்பான் நாட்டில் பள்ளிச் சிறார்கள் தொடக்கம் சகலருக்கும் திடீர் பூகம்பம் ஒன்றின்போது உயிர் தப்புவது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுவது வழக்கம்.

ஆரம்பப் பாடசாலை ஒன்றில் மாணவர்கள் காலை நேர பூகம்ப தற்காப்புப் பயிற்சியின்போது மேசைகளுக்குக் கீழ் அடங்கிக் கிடப்பதையே காண்கிறீர்கள்.


1வது பிறந்தநாள் வாழ்த்து (22.01.2002)


செல்வி கயல்விழி இரவீந்திரன்

யாழ்ப்பாணம் கட்டுவனை சேர்ந்த இரவீந்திரன்-ஜெயந்தி தம்பதிகளின் அருந்தவப்புதல்வி கயல்விழி தனது முதலாவது பிறந்த தினத்தை TORONTO (கனடா)வில் 26.01.2002 தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, பெரியப்பா, பெரியம்மா (கனடா) யாழ்ப்பாணத்தில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, கீர்த்திகா அத்தை, சுதா அத்தை, ஜெயந்தி அத்தை, யசோ அத்தை குடும்பத்தினர், மற்றும் சீதை அப்பம்மா, கனகு அப்பப்பா, மல்லி அம்மா பூதி அம்மா குடும்பத்தினர். கொழும்பில் இருக்கும் பெரிய அப்பம்மா அப்பப்பா, சித்தப்பாமார்கள், சசி, நோயன், சுஜீன், அம்மப்பா மணியம் சுரேஸ்மாமா, சித்திமார்கள், ரோசாந்தி, நிசாந்தி குடும்பத்தினர், GERMANYயில் இருக்கும் சித்தப்பாமார்கள், சசி, ஜெயராசன், சிறீ, ராசன், அன்ரன் குடும்பத்தினர், யாசன் சித்தப்பா (இந்தியா) துரைச்சாமி குடும்பம் (கனடா) புஸ்பராசா குடும்பம் (கனடா) மற்றும் மாமாமார்கள் அருள் ஜேகதாஸ், காண் மற்றும் உற்றார் உறவினர்கள் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் அருள் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்:-பெரியப்பா ம.கருணேஸ் (1416) 696-2476




# காத்திருப்பு

↑கொக்கு என்றால் கறுப்பாகவோ அல்லது வெள்ளை நிறத்திலோதான் இருக்கவேண்டும் என்றில்லை. இந்த கண் கவர் வர்ணப் பட்சியும் கூட கொக்கு இனத் தைச் சேர்ந்ததுதான்.

ஆபிரிக்காவில் காணப்படும் இது ஜக்கானா பறவை என்றழைக்கப்படுகிறது. நீர் நிலைகளை ஒட்டிய தாவரங்களையும் மீன்களையும் உணவாக உட்கொள்ளும் இந்தப் பறவை இனப்பெருக்க விடயத்தில் மற்ற கொக்கு வகைகளில் இருந்து வேறு படுகிறது. பொதுவாக பறவைகள் குறிப்பிட்ட ஒரு காலத்தில் மாத்திரமே இனப்பெருக்கத் தில் ஈடுபடும். ஆனால் இந்த ஜக்கானாவுக்கு நேர காலம் கிடையாது. வருடம் முழுவதும் கூடி மகிழ்வதில் இவைக்கு அலாதிப் பிரியம். இந்த காத்திருப்புக்கூட தனது சகாவுக்காக வேண்டி இருக்கலாம்.

எப்படியிருந்தாலும் இந்தக் கொக்கை குறைத்து மதிப்பிட முடியாது.

**அடக்கமுடையாரை அறிவிலார் என**
**எண்ணி கடக்கக் கருத வேண்டா**
**மடைத்தலையில் ஓடு மீன் ஓடி**
**உருமீன் வரையில் வாடி நிற்குமாம் கொக்கு.**


3வது பிறந்தநாள் வாழ்த்து

27.01.2002


செல்வி றெபேக்கா விஜயன்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயன் ரோஷி தம்பதியினரின் செல்வப்புதல்வி றெபேக்கா தனது 3வது பிறந்த நாளை இத்தாலி பலர்மோவில் உள்ள தனது இல்லத்தில் இன்று (27.01.2002) மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, இத்தாலியில் வசிக்கும் சீலன் தொட்டப்பா குடும்பத்தினர், அப்பம்மா, குலம்மாமா குடும்பத்தினர், ராஜு பெரியப்பா குடும்பத்தினர். திருக்கோணமலை அம்மப்பா அம்மம்மா ரஜு அன்ரா, றொபின் மாமா, கனடாவில் உள்ள ரவி பெரியப்பா குடும்பத்தினர், றொஷான் மாமா, பாரிஸில் உள்ள யோகதாஸ் சித்தப்பா, மற்றும் பேரன் பேத்திமார் பூட்டன் பூட்டிமார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் பாலை யூற்று மாதா அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்:-அம்மப்பா என்.ரட்ணகுலம் 1112 பாலையூற்று திருக்கோணமலை.




இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஜன.20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.